# தகடூர் யாத்திரை

புலியூர் கேசிகன்

O:,1A,T
N91
181764

... வெளியீடு

# தகடூர் யாத்திரை

[செய்யுட்களும் விளக்கமும் வரலாற்றுச் செய்திகளும்]

புலியூர்க் கேசிகன்

தேன்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு
ஆலந்தூர், சென்னை-600 016
தொலைபேசி : 234 21 01

முதற் பதிப்பு : டிசம்பர் - 1963
திருத்திய பதிப்பு : அக்டோபர்-1991

உரிமை : புலியூர்க் கேசிகன்

தேன்மழை—76

O-7,1A,T
N91

விலை : ரூ. 20-00

181764

விற்பனை உரிமை :

ஐந்திணைப் பதிப்பகம்
279, பாரதி சாலை
திருவல்லிக்கேணி
சென்னை - 600 005

தொலைபேசி : 849410

அச்சு அமைப்பு :
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்
7/40, கிழக்கு செட்டி தெரு,
பரங்கிமலை, சென்னை-600 016

# பதிப்புரை

'கொங்கு நாட்டுச் செங்கரும்பு' என்று சொல் வழக்கைக் கேட்டிருப்போம். கரும்பைத் தமிழகத் திற்குக் கொணர்ந்தவர் அதிகமான்கள்; அவர்கள் கொங்கு நாட்டுத் தகடூர்ப் பகுதியினர்; அதனால் தான் இப்படி ஒரு பேச்சு எழுந்ததுபோலும்!

இன்றைய தர்மபுரிதான் அந்நாளில் புகழுடன் திகழ்ந்த தகடூர். தகடூர் அதிகமான்கள், வள்ளன் மையும் போராண்மையும் கொண்டவர்கள். அவர் கள், ஔவையார் அரிசில்கிழார் போன்றோரால் பாடப்பெற்ற பெருஞ்சிறப்பும் உடையவர்கள்.

தகடூர்ப் பெரும்போரும், அதனையொட்டி எழுந்த 'தகடூர் யாத்திரை' என்னும் பெருநூலும் புகழுடையன. நூல் முற்றவும் கிடைக்கவில்லை. கிடைத்த செய்யுட்களைக் கொண்டும், பிற சங்க நூற் செய்திகளைக் கொண்டும் இந்த நூலை ஆக்கித் தகடூர்த் தமிழ் மறவரின் தறுகண்மையைப் போற்றுகின்றார் ஆசிரியர் புலியூர்க் கேசிகன்.

தமிழ் அன்பர்கள் இதனை ஆர்வமுடன் வர வேற்பார்கள் என்று நம்புகிறோம். தர்மபுரி மாவட்டத் தமிழ் அன்பர் அனைவரும், இதனைப் பெருமிதத்துடன் போற்றி வரவேற்றுக் கற்றுத் தம் பண்டைய முன்னோரின் மாண்பினை வியந்து உளங்கொள்வார்கள் என்றும் கருதுகின்றோம்.

—பதிப்பகத்தார்

## நூலின் உள்ளே...


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தகடூர் யாத்திரை | — | 5 |
| 2. | கொங்கு நாட்டின் நிலை | — | 9 |
| 3. | பெருஞ்சேரல் இரும்பொறை | — | 17 |
| 4. | அதிகமான் எழினி | — | 25 |
| 5. | பாடிய சான்றோர்கள் | — | 48 |
| 6. | தகடூர் யாத்திரைச் செய்யுட்கள் | — | 53 |

# 1. தகடூர் யாத்திரை

அளவற்ற வளமுடன், செழுமையின் சீர்மை எங்கணும் விளங்கத் திகழ்ந்திருந்த காலமொன்று, நம் தமிழகத்திற்கு இருந்ததென்றால், அதனை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டிருந்த 'சங்ககாலம்' என்று கூறலாம். சங்ககாலத் தமிழகம் நிலநீர் வளத்துடன் மட்டுமின்றித், தமிழினத்தின் வாழ்வியலிலுங்கூட ஒப்பற்றதாகத் திகழ்ந்திருக்கிறது. இதற்கு, இலக்கியச் சான்றுகள் ஏராளமாக உள்ளன.

முடியுடை மூவேந்தரும் தமிழகத்தின் அரசியலைத் தலைமைபூண்டு செவ்விதாக அக்காலத்தே செலுத்தி வந்தனர். அருளும் மறமும் அறமும் திகழ,அவர்களுடைய அன்றைய ஆட்சி, இன்றைக்கு வாழ்கின்ற நாமும் எண்ணிப் பெருமூச்சு விடக்கூடிய உயர்வுடனும் செறிவுடனும் திகழ்ந்திருக்கிறது. மக்கள், உரிமை வீறுடனும் அறநெறித் திண்மையுடனும், பண்பின் பெருமிதத்துடனும் செம்மாந்து விளங்கியிருக்கின்றனர். 'நாகரிகம்' என்பதன் உண்மையான ஒரு தன்மையினை உளங்கொண்டு, ஒப்பின்றி வாழ்ந்த அவர்களது சிறப்பியல்புகள்தாம், இன்று நாம் வியப்புடன் கற்றுப் பூரிப்புக் கொள்ளுகின்ற பேரிலக்கியங்கள் பலவற்றின் எழுச்சிக்கும் அடித்தளமாக விளங்கியிருக்கின்றது.

ஒரே அரசின் கீழ்த் தமிழினத்தின் ஆட்சிப் பொறுப்பு அன்று நிலவியதில்லைதான். சிறுசிறு பகுதிகளைப் பற்பல

குடியினர் காத்து வந்தனர் என்பதும் உண்மைதான். எனினும், அங்ஙனம் எண்ணற்றவாகப் பரவிக் கிடந்த சிற்றரசுகளுள் ஒவ்வொன்றுமே உயர்வுடன் திகழ்ந்தன என்பதனை நம்மால் மறுக்கமுடியாது. 'மேலரசு' என்ற வகையில் மூவேந்தர்களும் நிலவினர் என்பதுடன், நாட்டின் நிர்வாகப் பொறுப்புக் குறுநிலத் தலைவர்களிடமே முற்றவும் பரவிக் கிடந்ததனால், நாட்டின்கண் எங்கணுமே செம்மையான ஆட்சி நிலவி வந்திருக்கிறது.

தமிழறிந்த சான்றோர்கள் பலராகவும், அவர்களைப் போற்றிப் புரந்த வள்ளல்கள பல்ராகவும், தமிழன்னையின் செழுமைமணம் எங்கணும் பரவி மலிந்திருந்த பான்மைக்கு, அந்தச் செம்மைசான்ற ஆட்சிமுறைதான் ஒருவகையிற் காரணமாக இருந்திருக்க வேண்டும் எனலாம்.

எனினும், இப்படிச் சிதறிக்கிடந்த சிறுசிறு நாடுகள் ஒவ்வொன்றுமே வீரத்திருவுடையார் பலரைப் பெற்றிருந்ததனால், ஒருவகையில் தமிழகத்தின் பொதுவான ஒருமை வளர்ச்சிக்கும், உலகுபோற்றும் வலிமைக்கும் அந்த அமைதி பழுதாகவும் இருந்திருக்கிறது. ஒருவருக்கொருவர் இவர்களே தமக்குள் போரிட்டுக் கொண்டிருந்தனர் என்பதனால், தமிழரின் வீரத்தன்மை வெளிப்பட்டதாயினும், ஒற்றுமைமட்டும் இவர்களுக்குள் இருந்திருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய நன்மைகள் பலவும் ஏற்படாமற்போய்விட்டன என்பதும் உண்மையாகும்.

மேலரசுகள், சில சமயங்களில் இந்தக் குறுநில மன்னர்களை அடக்குவதற்கு இயலாமல் வலியிழந்து போயிருந்த காலமும் உண்டு. அவ்வேளைகளில், குறுநில மன்னர்கள் தத்தம் மேலரசுகளை மதியாது, தம்முடைய வெற்றிப் பெருமிதத்தைப் பரப்புவதற்கு முயன்றும் வந்திருக்கின்றனர்.

இவ்வாறான ஒரு காலத்தின் நடுவிலேதான், தமிழகத்தின் புகழ்பெற்ற போர்களுள் ஒன்றான தகடூர்ப் பெரும் போரும் நிகழலாயிற்று. இந்தத் தகடூர்ப் பெரும் போர் பிற போர்களினுங் காட்டில் ஒரு தனிப்பட்ட நினைவோட்டத்தை அந்நாளைய அறிஞர்களிடையே ஏற்படுத்தியதற்குக் காரணம், அந்தப் போரின்கண் ஈடுபட்ட மன்னர்கள் இருவரது மாண்புப் பெருக்கமே எனலாம்.

போரினை மேற்கொண்ட பெருஞ்சேரல் இரும்பொறை தன்னைப் போற்றிப் பத்துச் செய்யுட்களைப் பாடிய அரிசில்கிழாருக்குத் தன் நாட்டையும் ஆட்சியையும் பரிசிலாகத்தருதற்குத் துணிந்த தமிழுள்ளத்தைக் கொண்டவன்! முரசு கட்டிலில் அறியாதே துயின்ற மோசிகீரனாரை முறைப்படி வெட்டி வீழ்த்தாமல், அவரது தமிழ் நலத்தினை நினைந்து, அவருக்குத் தானே விசிறி வீசிநின்ற பண்பினன்! பொன்முடியார்பால் பேரன்பு கொண்டு திளைத்தவன். இங்ஙனம், தமிழன்பு தலைசிறந்து நிறையப் பெற்றிருந்த ஒருவனாதலால், இவன் மேற்கொண்ட தகடூர்ப் பெரும் போர், தமிழ்ச் சான்றோரிடையே பெரிய பரபரப்பை ஏற்படுத்திற்று; அவர்களின் கவனத்தையும் ஈர்த்தது.

இவனுக்குப் பகையாகித் தன்னைக் காத்துக்கொள்ள முயன்று போரிட்டவனோ, அதிகமான் ஆவான். கரும்பினைக்கொணர்ந்து தமிழகத்தில் பயிர் செய்தற்கு உதவிய அதிகர் மரபிலே தோன்றியதுடன், கரும்பினும் இனிக்கின்ற கன்னித் தமிழின்பாலும் பெருங்காதலுடன் திகழ்ந்தவன் இவன். நெடுநாள் வாழ்வினைத் தருகின்ற கருநெல்லிக் கனியைப் பெற்றபோது, தானுண்ணாது, தமிழ்ப் பெருமாட்டியான ஔவையாருக்கு அளித்து, அவருண்ணக் கண்டு மகிழ்ந்த தகுதியினை உடையவனும் இவன்! இதனாலும், தமிழறிஞர் பலரும் இந்தப் போரினை மிகவும் விழிப்பாகக் கவனிக்கலாயினர்.

இதனால், தகடூர்ப் போரின் நிகழ்ச்சிகள் பலவும் ஒருவகையில் தனித்தன்மை பெற்றன. அவற்றை வியந்து பாடினர் பொன்முடியார், அரிசில்கிழார் போன்ற சான்றோர்கள். இங்ஙனம் புலவர் பெருமக்களாற் பாடப் பெற்ற இந்தப் போரது வரலாறும் தமிழ்வரலாற்றில் முதன்மை கொண்டதாயிற்று. இவர்களின் செய்யுட்கள் பின்னர்த் தொகுக்கப் பெற்றன; **'தகடூர் யாத்திரை'** என்னும் பெயருடன் ஒரு தனி நூலாகி, வழிவழி வந்த தமிழறிஞர்கள் பலராலும் வியப்புடன் போற்றப் பெற்றும் வந்திருக்கின்றன.

எனினும், காலக் கொடுமைக்குக் கணக்கில்லை என்றாற்போலத் தமிழிலக்கியங்களுட் பலவற்றைப் போக்கடித்த காலவெள்ளம், தகடூர் யாத்திரையினையும் நமக்குக் கிடையாதபடி செய்துவிட்டது. கிடைப்பன வெல்லாம் புறத்திரட்டிற் சேர்க்கப் பெற்றுள்ள ஒரு சில செய்யுட்களும், தொல்காப்பிய உரையாசிரியர்களாற் காட்டப்படும் ஒன்றிரண்டு செய்யுட்களும், மற்றும் சிலவுமே யாம்.

இந்தச் செய்யுட்கள் விளங்குகின்ற செழுமையைக் காணும்போது, நம் ஏக்கம் மிகப்பெரிதாகின்றது. முற்றவும் பெறுதற்குக் கொடுத்து வைக்காமற்போயின கொடுமை நம்மை வாட்டுகின்றது. கிடைத்துள்ள இந்தச் செய்யுட்களையும், இந்தப் போரைச் சார்ந்த பிற செய்திகளையும் ஒருங்கே தொகுத்துத்தந்து தமிழன்பரை மகிழ்விப்பதே இந்த நூலின் நோக்கம் ஆகும்.

# 2. கொங்கு நாட்டின் நிலை

தகடூர்ப் பெரும்போரைப் பற்றி அறிவதற்கு முன்பாக, அக்காலத்தைய கொங்குநாட்டினது அமைவைப் பற்றியும் ஓரளவிற்காவது நாம் அறிந்து கொள்ளல் வேண்டும். இன்றேல், அதன் அடிப்படையான சில முக்கிய செய்திகளை நாம் உணராது போக நேர்ந்து விடலாம்.

சேர நாடு, ஒரு காலத்தில் தெற்கே பொதியமலை முதலாக, வடக்கே தபதியாற்றங்கரை வரைக்கும் விரிந்து பரந்திருந்தது. மேலை மலைத்தொடருக்குக் கீழ்பால் இருந்த கொங்குநாட்டுப் பகுதியும் சேர நாட்டைச் சார்ந்ததாகவே இருந்திருக்கிறது. 'சேர நாட்டின் மேலைக் கடற்கரைப் பகுதியானது குட்டநாடு, குடநாடு என்னும் இருபெரும் பிரிவாகிச் சேரர் குடியினரால் ஆளப்பட்டும் வந்திருக்கிறது. குட்ட நாட்டிலிருந்து அரசியற்றிய சேர மன்னர்களைச் குட்டுவர்கள் எனவும், குடநாட்டிலிருந்து அரசியற்றியவர்களைக் குடக்கோக்கள் எனவும் சான்றோர்கள் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

குடநாட்டிற்குத் தொண்டியும், குட்டநாட்டிற்கு வஞ்சியும் கோநகர்களாகச் சிறப்புற்றிருந்தன. ஒரு குடிப்பிறந்த அரசகுமாரர்களுள் மூத்தவன் குட்ட நாட்டையும், இளையவன் குடநாட்டையும் ஆண்டு வந்தனன் என்பதனையும் இலக்கியச் செய்திகள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

காலப்போக்கிலே குட்டநாட்டின் வடபகுதியையும் குடநாட்டின் தென்பகுதியையும் ஒரு நாடாக வகுத்து, அதற்குப் பொறைநாடெனப் பெயரிட்டு அதனை ஒருவனது ஆட்சிக்கீழ் அமைத்தனர்; இப்படியே கொச்சிநாட்டின் வடகீழ்ப் பகுதி பூழிநாடு எனப் பிரிந்தது; பொறை நாட்டின் கிழக்கிற் கொங்குநாட்டை அடுத்திருந்த பகுதி கடுங்கோ நாடு எனத் தனியரசாயிற்று.

இவ்வாறு,ஒருகாலத்தே சேர நாடு நான்கு பிரிவுகளாக அமைந்திருந்தனைச் சங்கநூற்களுள், சேர மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள மரபினைக்கொண்டு நாம் அறியலாம். குட்டுவன் எனவும், இரும்பொறை எனவும், கடுங்கோ எனவும், குடக்கோ எனவும் இந்த அரசர்களைத் தமிழ்ச்சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள், சேர வரசின் அந்தந்தப் பகுதிக்கண் இருந்து அரசியற்றிய அரசர்கள் ஆவர் என்று நாம் அறிதல் வேண்டும்.

சேரவரசு இவ்வாறு நிலவிய காலத்திலே, மேலை மலைத்தொடருக்குக் கீழ்ப்பாலதாகிச் சேரவள நாட்டை அடுத்திருந்த கொங்குநாட்டுப் பகுதிகள் பெரும்பாலும் குறுநில மன்னர்களின் ஆட்சிக்குள் விளங்கின. சேரவரசின் மேலாணைக்குட்பட்ட சுதந்தர மன்னர்களாக இவர்களுட் பலர் திகழ்ந்தனர். வேளிர் குடியினர் சிலரும் சேரமன்னர் மரபினர் சிலருமாக இவர்களது குடிப்பிறப்பு இருந்திருக்கிறது. போர் நிகழ்ச்சிகளுள், இத்தலைவர்கள் தம்முடைய மேலரசாகிய சேர நாட்டிற்குத் துணை செல்வதும், அவர்கட்காகப் படைத்தலைமை பூண்டு போரிற் கலந்துகொள்வதும் இயல்பாக இருந்தன.

தகடூர்ப் போர்க்காலத்தில், சேரவரசு கொங்குப் பகுதிக்கண் பெரிதும் பரவியிருந்தது கொங்குப்பகுதியின் கோநகராகக் கொங்கு வஞ்சி என்னும் பேரூர் விளங்கிற்று. இந்நாளில் தாராபுரம் என வழங்கும் ஊர்தான் கொங்கு வஞ்சியாகத் திகழ்ந்திருந்தது என்பர் தமிழறிஞர். இந்தக்

கொங்கு வஞ்சியின்கண் வீற்றிருந்தது, கொங்கு நாட்டுப் பகுதியையும், பொறைநாடு கடுங்கோநாடு போன்ற பகுதி களையும் அரசியற்றி வந்தவர் சேரர் குடியினருள் ஒரு சாரார். இவர்களுட் சிறந்தவன் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவன். கபிலர் பெருமானால் பாடப்பெற்ற பெருஞ் சிறப்புடைய இவன், தன்னுடைய பேராண்மையாலும் பிற பண்பு நலங்களாலும் அந்நாளில் மிகவும் சிறப்புடன் விளங்கி வந்தனன்; இவனுக்குப் பின்னர் அரசுகட்டி லேறியவன்தான் பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன்.

இவன் காலத்தில் கொங்கு நாட்டின் வடக்கில் புன்னாடும் எருமை நாடும் விளங்கின; கிழக்கில் தொண்டைநாடும் சோழநாடும் இருந்தன; தெற்கிலும் மேற்கிலும் சேரநாடு எல்லையாக அமைந்திருந்தது.

கொங்கு நாட்டின் கோயம்புத்தூர்ப் பகுதி மீகொங்கு நாடு என வழங்கி வந்தது: குளித்தலையும் அதன் தென் மேற்குப் பகுதியும் கீழ்க்கொங்கு நாடெனவும், சேலம் பகுதி வட கொங்கு நாடெனவும் பெயர் பெற்றிருந்தன.

இந்தப் பகுதிகளுள் சேலமாவட்டத்துத் தகடூர்ப் பகுதியை அரசியற்றி வந்தவர் அதிகமான்கள் என்னும் மரபினர். இவர்கள் சேரர் கிளையினைச் சார்ந்த ஒரு குடியினரே என்பர். பேராண்மையிற் சிறந்த வீரர்களாக வும், பெரும் படைத்துணையினைப் பெற்றிருந்தவர் களாகவும் இவர்கள் விளங்கினர்.

சேரரது ஆதிக்கம் படிப்படியாக விரிவடைந்து தங்கள் நாட்டின் எல்லை வரைக்கும் வந்துகொண்டிருப் பதை அறிந்ததும், அதிகர் குடியினர் கவலைகொள்ளத் தொடங்கினார்கள். தங்கள் நாட்டைக் காத்துக்கொள் வதற்கான தற்காப்பு ஏற்பாடுகளை முயற்சியுடன் மேற் கொண்டு, தம்முடைய வலிமையைப் பெருக்கிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

இடையில் இருசாராருக்கும் நண்பரும் அன்பருமாக விளங்கிய சான்றோர்களின் தூது முயற்சியும் நிகழ்ந்தது. எனினும், இருசாராராலும் சமாதானமாகப் போவதற்கு இயலவில்லை.

எங்ஙனமும் தகடூரைக் கைப்பற்றிவிட வேண்டுமென்ற உறுதி இரும்பொறையிடம் இருந்தது. இரும்பொறையைக் களத்தே எதிரிட்டு வெல்வது கடினமாதலின், கோட்டையைக் காத்து நின்று. அழியும் வரைக்கும் போராட வேண்டுமென்ற திண்மை அதிகமானிடம் இருந்தது.

இருதிறத்தாரிடம் இப்படி உறுதிப்பட்டுப் போன போர்வெறி ஏற்பட்டிருந்த காரணத்தாலும், இருவரும் மிகவும் வலிய ஏற்பாடுகளுடனேயே போரியற்றிய காரணத்தாலும், இந்தப் போரின் நிகழ்வுக்கு ஒரு தனிச் சிறப்பு வரலாற்றில் ஏற்படலாயிற்று.

இனி, இந்தச் சூழ்நிலையில், கொல்லிக் கூற்றம் எனப்படும் பகுதிக்கண் இருந்த வல்வில் ஓரி என்பான், பரவிவரும் சேரப்பேரரசிற்குத் தடையாக இருந்தான். இவ்வல்வில் ஓரியினது வில்லாற்றல், சேரரை ஒருகணம் திகைப்படையச் செய்யாமலும் இல்லை. தகடூர் நாட்டுக்குத் தெற்காகக், காவிரியின் கீழ்க்கரைக்கும், கொல்லிமலைக்கும் இடைப்பட்டுக் கிடந்தது இந்த நாடு, இதனை வென்றாலொழியத் தகடூரைச் சார்தல் இயலாத காரியமெனக் கருதிய சேரர்கள், அந்நாளில் திருக்கோவலூரிலிருந்து ஆண்டுவந்த மலையமானின் துணையினை நாடினர்.

மலையமான் பெரும்படையுடன் சென்று போரிடக் கொல்லிக் கூற்றம் விழுந்தது. கொல்லியின் வீழ்ச்சி தகடூர் அதிகமானைக் கவலைக்கு உள்ளாக்கிற்று. அவன், மலையமானின் செயலை நினைந்து வேதனைப்பட்டான். செல்வத்திற்கு விரும்பிப், பகையேதும் இல்லாத காலத்திலேயே, சேரர்க்குக் கூலிக்கு உதவிநின்ற மலையமானின்

செயலை எண்ண எண்ண, அதிகமானின் ஆத்திரம் மிகுந்தது. அவனை அழித்தால் ஒழிய வேறு வழியில்லை என்ற முடிவிற்கு அதிகமான் வந்துவிட்டான்.

இதே சமயம், பரவிவரும் சேரப் பேரரசை நினைந்து வேதனை கொண்டிருந்த சோழர்கள், தம் மேலரசுக்கு உட்பட்ட மலையமான், தம் நண்பனாக விளங்கியவனும், சேரரது நாட்டாசைக்குத் தடைக்கல்லாக நின்றவனுமான கொல்லிக் கோமானை அழிக்கத் துணைசெய்த அநீதிகண்டு பொருமியிருந்தனர் அதிகரும் சோழரும் மலையனை ஒழிப்பதிலும், சேரரின் நாட்டாசைக்கு முடிவு கட்டுவதிலும் தமக்குள் ஒத்துழைப்பதென்று முடிவு செய்தனர். இந்த முடிவின்படி நிகழ்ந்த திருக்கோவலூர்ப் பெரும்போரிலே மலையமான் வீழ்ந்தான்; அவன் வலிமை முற்றவும் அழிந்தது.

மலையமானின் சிறந்த வள்ளன்மையைக் கபிலர் பெருமான்.

**நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்**
**பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்**
**வறிது பெயர்குநர் அல்லர் நெறிகொளப்**
**பாடான் றிரங்கும் அருவிப்**
**பீடுகெழு மலையற் பாடியோரே.** (புறம் 124)

என்று பாடுவர். இத்தகைய மலையமான், தன்னுடைய படையாண்மை காரணமாகத், தனக்கொரு நிலையென்பது யாதுமின்றிச் சோழர்க்குத் துணையாகியும், சேரர்க்குத் துணையாகியும், அதனாற் பெறுகின்ற பெரும்பொருளே தனக்குக் குறிக்கோளாகக் கொண்டமையின், இப்படி முடிவில் அழிவெய்தினான்.

அதிகனது இந்தக் கோவலூர் வெற்றியை ஔவையார் போற்றிப் பாடுவர்—(புறம் 99). அதன்கண் 'முரண் மிகு கோவலூர் நூறிநின் அரணடு திகிரி யேந்திய தோளே'

என, அவன் தோளாற்றலைப் பாராட்டும் ஔவையாரின் சொற்கள், கோவலூர்ப் போரின் கடுமையினை ஒருவாறு காட்டுவதாகும். முடிவிற் கோவலூர் சோழர் வசமாகியதும், தகடூர் அதிகமான்கள் சற்று மனநிம்மதி பெறலாயினர்.

இதனிடையே, தொண்டையர் கோமானுக்கும் அதிகமானுக்கும் எல்லைத் தகராறுகள் பல கிளைத்தன. அதிகமானை அழித்துவிடத் தொண்டைமான் முனைந்தான். ஔவையாரின் தலையீட்டினால் இவ்விருவர்க்கும் நேரவிருந்த பெரும்போர் சமாதானத்தில் முடிந்தது. இங்ஙனம், தொண்டைமான் போரொழித்துச் சமாதானமாகிவிடச் சேரர்கள் பெரிதும் மனம் வருந்தினர்.

இஃதன்றியும், எழுவர் குறுநில அரசர்கள் தகடூர் அதிகமான் மீது பகைமை கொண்டனர். அவனை அழிக்க முயன்று, படையெடுத்து எதிர்த்தும் சென்றனர். இந்தப் போரின்கண்ணும் வெற்றி அதிகமானுக்கே வாய்த்தது. எழுவரது வலிமையும் அழிந்து ஒழிந்தது. இதனைச் 'செருவேட்டு, இமிழ்குரன் முரசின் எழுவரொடு முரணிச் சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய அன்றும் பாடுநர்க்கு அரியை' என வரும் ஔவையார் வாக்கினால் அறியலாம்—(புறம் 99).

இவ்வாறு, தம்மைப் பகைத்த பலரையும் வென்று, பகையின்றிச் செருக்குடன் திகழ்ந்தனர் அதிகமான்கள், சோழரது நட்பும் அவர்கட்கு இருந்தது. இந்தச் சூழ்நிலையில், சேரரது ஆத்திரம் நாளுக்குநாள் மிகுதியாகிக் கொண்டு போயிற்றே யொழியக் குறைவதாயில்லை. தாம் நேரிற் சென்றே தகடூரைக் கைப்பற்றிவிடல் வேண்டுமென்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டனர்.

இந்த முடிவிற்கு அவர்கள் வந்ததன் பின்னர், அதனைச் செயற்படுத்தத் தகுதியான ஒரு சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அது, காமூர்த் தலைவனான கழுவுள் என்பவனின் குறும்போடு வந்து கொண்டும் இருந்தது.

முசிறிப் பகுதியிலிருக்கும் திருக்காம்பூர் அக்காலத்தே காமூர் என வழங்கிற்று. அதன் தலைவனாக விளங்கியவன் கழுவுள் என்னும் ஆயர்குலத் தலைவன். கொங்கு நாட்டிலே சேரரது செல்வாக்குப் பெருகி வருவதறிந்து கவலை கொண்டவருள் இவனும் ஒருவன். இந்தப் பகைமை காரணமாகத் தகடூர் அதிகமானின் நட்பும் ஆதரவும் இவனுக்குக் கிடைப்பதாயிற்று. அந்த ஊக்கத்தால், இவன் தென்கொங்கு நாட்டின் பலபகுதிகளுட் புகுந்து நிரை கவர்ந்தும் கொள்ளையிட்டும் கொடுமைகள் பலவற்றைத் தொடர்ந்து செய்து கொண்டே வந்தான்.

கழுவுளின் செயலால் ஆத்திரங்கொண்ட அந்தக் கொங்குப் பகுதிகளின் தலைவர்கள் ஒன்றுகூடினர். பதினால்வர் கூடிச் சென்று காமூரை முற்றுகையிட்டுத் தீக்கிரையாக்கிக் கழுவுளின் செருக்கைத் தொலைத்தனர். கழுவுள் தோற்றுத், தகடூர் நாட்டையடுத்துள்ள மலைப் பகுதிக்குத் தன்னைச் சார்ந்தாருடன் ஓடிவிட்டான்.

கொல்லிக் கூற்றத்து ஓரியை அழித்துவிட்டபின், அது சேரவரசுடன் சேர்ந்து, வலியற்ற ஒரு தலைவனின் கீழ் விளங்கியது கழுவுளுக்கு வசதியாக இருந்தது. அத்துடன், அதிகமானின் நண்பர்களான வேளிர்குலத் தலைவர்கள் சிலரும், சேரர்மீது பகைமை கொண்டிருந்தமையால் கழுவுளுக்கு ஊக்கமும் உதவியும் நல்கி வந்தனர். இதனாற் கழுவுள், கொல்லிக் கூற்றத்தைத் தன்வசமாக்கிக் கொண்டு, அங்கு நின்றிருந்த சேரரது காவற்படையினை அழித்தும் விட்டான்.

கழுவுளது இந்தச் செயல் எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் வார்த்தது போலாகச், சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை, கழுவுளைப் பெரும்படையுடன் அழிப்பது கருதிப் புறப்பட்டுவிட்டான்

கழுவுளுக்கு உதவிநின்ற வேளிர்கள், கடலென வந்து கொண்டிருந்த சேரப் பெரும்படையைக் கண்டதும்,பகை

துறந்து பணிந்து போயினர். கழுவுள் கோட்டைக்குள் அடைத்துக் கிடந்தான். சேரமான் கோட்டையை முற்றுகையிட்டுக் கடுமையான தாக்குதலை நிகழ்த்தச் செய்வதையறியாது திகைத்த கழுவுள், தன் அழிவுக்குக் காலம் வந்ததை உணர்ந்து கொண்டான். அழிவது அல்லது இரும்பொறையைப் பணிந்து வாழ்வது என்னும் இரண்டனுள் ஒன்றைத் தேர்ந்துகொள்ளும் நெருக்கடி ஏற்பட்டது. முடிவில், பணிவதையே தெரிந்துகொண்ட கழுவுள், தனியனாகிச் சென்று இரும்பொறையைப் பணிந்து நிற்க, அவனும், கழுவுளை மன்னித்துத் தனக்கு அடங்கியவனாகி வாழ்வதற்கு இசைவளித்தான்.

இதன்பின், அதிகமான் ஒருவன்தான் சேரர்க்குப் பகையாக எஞ்சிநின்றான். தகடூர் நாடு தவிரப் பிறவனைத்தும் சேரரது காவலுக்கு உட்பட்டவாயின. அதிகமான், இதனால் தளர்ந்து விட்டானில்லை. தன் உரிமையைக் காத்தற்குப் போரிடவே முனைந்து நின்றான்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பாறையின் படையெழுச்சியின் எல்லைக்கண்ணும் தகடூரைக் கைப்பற்றுவது ஒன்றுதான் எஞ்சி நின்றது. அதனை வென்றன்றி மீள்வதில்லை என்ற உறுதியுடன், தக்க வாய்ப்பினைக் கருதியபடி, அவன் தகடூர் எல்லைக்கண் பாடியமைத்து அவ்விடத்தேயே தங்கிவிட்டான்.

தகடூர்ப் போருக்கான சூழ்நிலைகள் பலவும் இவ்வாறாக வந்து ஒன்றுகூடி நின்றன. 'போர் எப்பொழுது நேரப்போகிறதென்ற' ஒன்றுதான் எஞ்சியிருந்தது. இங்ஙனம், உருவாகிய ஒரு சூழ்நிலையினை மனத்தே கொண்டோமானால், தகடூர் யாத்திரையின் சிறப்பிற்கான காரணமும் நமக்கு நன்கு விளங்கும்.

இனி, இந்தப் போரின்கண் எதிர்த்து நின்ற உழிஞையாரான சேரத்து தலைவனான பெருஞ்சேரல் இரும்பொறையைப் பற்றியும், நொச்சியாரான தகடூர் மன்னன் அஞ்சியைப் பற்றியும் அறிந்துகொண்டு, மேற்செல்வோம்.

# 3. பெருஞ்சேரல் இரும்பொறை

அந்துவஞ் சேரல் இரும்பொறைக்குப் பொறையன் தேவிபால் பிறந்த மகன் **செல்வக் கடுங்கோ வாழியாதன்** என்பவன். இவன் தன் காலத்தில் பேராற்றலுடன் விளங்கியவன் ஆவான். சேரரது ஆட்சி கொங்குநாட்டுப் பகுதிக்கண் கால் கொள்வதற்கான உறுதிப்பாட்டை மேற்கொண்டவன் இவனே எனலாம்.

இவனது சிறப்பினைப் பாடிய புலவர் கபிலர் பெருமான் ஆவார். பதிற்றுப்பத்துள் ஏழாம் பத்தாக அது அமைந்து இவனது பெரும்புகழை அழியாது நிலை பெறுத்துகின்றது.

**பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே**
**பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ**
**நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே**
**வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம்**
**மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே**
**நிலத்திறம் பெயருங் காலை யாயினும்**
**கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே.**

(பதிற்று, 7—3)

என்னும் கபிலர் வாக்கு இவனது சிறந்த பல இயல்புகளையும் விளக்கி, இவனுடைய பெருமிதச் செவ்வியினை உரைப்பதாக இலங்குகின்றது. குண்டுகட் பாலியாதனார் என்பாரும் இவனைப் பாடிப் போற்றியுள்ளனர்.

இவனுடைய வெற்றிச் செயல்களுள் குடநாட்டிற் புகுந்து குறும்பு செய்த சத கன்னர வேந்தனை வென்று

அவன் குறும்பினை அடக்கியதும், மற்றும் தன் ஆணைக்கு அடங்காது ஒழுகிய குறுநில வேந்தர்களை ஒடுக்கியதும் சிறப்புடையன. முடிவில், சிங்கற்பள்ளி என்னுமிடத்தே நடந்த பெரும்போரில் இவன் இறந்தான். இருபத்தைந் தாண்டுகள் அரசு வீற்றிருந்து தமிழும் அறமும் செவ்விதாகத் திகழ விளங்கிய இவனது மறைவிற்குப் பின்னர் அரசு கட்டில் ஏறியவன் பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் ஆவான்.

செல்வக் கடுங்கோவுக்கும் வேளாவிக்கோமான் பதுமன் தேவி என்பாளுக்கும் பிறந்தவன் இவன். 'பதுமன் தேவி' என்பதனைப் பதுமனின் மகள் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். பதுமனின் மகள் ஒருத்தி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதற்கு மனைவியாகி இருந்தனள் எனவும், அவள் மக்களாகத் திகழ்ந்தவர் களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலும், ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும் எனவும், மற்றொரு மகளே செல்வக் கடுங்கோவின் மனைவியாகத் திகழ்ந்த சிறப்பினள் எனவும், சங்கநூற் செய்திகளால் நாம் அறிகின்றோம். இவள் மகன்தான் இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன்.

ஆசிரியர் பெருங்குன்றூர்க் கிழார் பாடிய ஒன்பதாம் பதிற்றுப்பத்து, குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பற்றிக் கூறுவதாகும். அதன் பதிகம், 'குட்டுவன் இரும்பொறைக்கு மையூர்கிழான் வேண்மாள் அந்துவஞ் செள்ளை ஈன்ற மகன்' என அவனைக் கூறுகின்றது. இந்தக் குட்டுவன் இரும்பொறை என்பானைப் பெருஞ் சேரல் இரும்பொறையாகவே கொண்டு, இவன் மகனே இளஞ்சேரல் என்பார் சிலர். அங்ஙனமாயின், இவன் மனைவியாவாள், மையூர்கிழான் வேண்மாள் அந்துவஞ் செள்ளை ஆகலாம். அன்றிக் குட்டுவன் இரும்பொறையினை இவனினும் வேறாக இவன் தம்பியாகக் கொள்வாரும் உளர். அங்ஙனமாயின், இவன் மனைவி

பற்றி எதுவும் அறிவதற்கில்லை என்றுதான் நாம் கூறுதல் வேண்டும்.

இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறை இளமைக்கண் சிறந்த போர்வீரனாகப் பயிற்சிபெற்று உயர்வுற்றதுடன் மட்டுமல்லாது, சிறந்த தமிழறிந்த சான்றோனாகவும் திகழ்ந்திருக்கின்றனன். இதற்கு இவனுடைய தகப்பனான செல்வக் கடுங்கோவது அவையிடத்திருந்த சான்றோரான கபிலர் பெருமான் போன்றோரது துணையே காரணமா யிருந்திருக்கலாம்.

இவனுடைய தமிழ்ப்பற்றுத் தமிழை அறிந்து அதன் இனிமையினை நுகர்ந்து களிப்பதுடன் மட்டுமே அமைந்து விடவில்லை; தமிழறிந்த சான்றோரைப் போற்றிப் புரந்து பேணிய தண்ணளிகொண்ட செயலாக வும் மலர்ச்சியுற்றருந்தது. இந்தச் செவ்வியை விளக்குவன வாக இரண்டு சம்பவங்கள் இலக்கியங்களுள் கூறப்படு கின்றன.

ஒன்று, முரசுகட்டில் அறியாதேறிய மோசிகீரனைத் தவறு செய்யாது, அவன் துயிலெழுந்துணையும் கவரி கொண்டு வீசியது; மற்றொன்று, தன்னைப் பாடிய அரிசில் கிழாருக்குத், 'தானும் கோயிலாளும் புறம்போந்து நின்று, கோயிலுள்ளவெல்லாம் கொண்மின்' என்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசு கட்டிற் கொடுத்த அந்த அருமையுடைய செயல்.

இவற்றுள் முன்னதை மோசிகீரனாரின், 'மாசற விசித்த' என்னும் புறப்பாட்டால் (புறம்-50) நாம் அறியலாம். வெற்றி முரசம் வீற்றிருக்கின்ற, நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கையிடத்தே, அதன் தகைமை யறியாது ஏறிப்படுத்திருந்தார் மோசிகீரனார். அதனைக் கண்ட இரும்பொறை முறைப்படி வெட்டிக் கொன்றா னில்லை. சினந்து அவரைப் பிறவாற்றால் தண்டித்தானும் இல்லை. இவையாயினும், அவன் நற்றமிழ் முழுதறிந்த

தன்மையனாதலின் பொறுத்தனன் எனக் கொள்ளற் பாலன. ஆனால் அவனோ, அதனோடும் அமையாது, அணுகவந்து தன் மதனுடை முழவுத்தோள் ஒச்சித் தண்ணென வீசியும்' நின்றனன்! செயற்கரிய செயல் அது! அறநெறியின் முறைமையைக்கூடத் தமிழறிந்த சான்றோ ரின் அறியாமையைக் கருதி மறந்து விட்ட செயல் அது! எனினும், தமிழன்பில் தலைசிறந்த மன்னன் அவன்! அதனால், அவன் செயல் தமிழோடு கலந்து, பிறவற்றை எல்லாம் கடந்து பெருமைபெற்று உயர்கின்றது! தன்னையும், தன் பொறுப்பையும், தன் கடமையையும் நினைக்க மறந்தவனாக, உறங்கும் தமிழறிஞரின் உறக்கத்தைக் கலையவிடாது தண்ணென வீசிநின்றான் அவன்! பெருஞ்சேரல் இரும்பொறை, அதனாற் பெருந் தமிழ் இரும்பொறையும் ஆகி, விளங்கு புகழுடன், தமிழுள்ளவரை வீற்றிருக்கும் தகுதிகொண்ட சால்பினனும் ஆகிவிடுகின்றான். இதனைக் கண்டு வியந்து பாடினார் மோசிகீரனார்; ஆனால், அவர் செய்யுளைக் கற்கும் பொழுதெல்லாம் நாமும் வியந்து அவனைப் போற்று கின்றோம். தமிழறிந்தாரை ஆட்சித் தலைவர்கள் மனங்கனியப் போற்றிப் புரந்துவந்த அந்தப் புகழமைந்த பொற்காலத்தின் நினைவு, நம்முள், தமிழறிந்தார்க்கு இன்றைய ஆட்சித் தலைவர்கள் தருகின்ற மதிப்பின் குறைபாட்டைக் கண்டதும், மேலும் உயர்வுடைய ஒரு பெருஞ்செயலாகி நிலைபெறுகின்றது.

இந்தப் பெருஞ்சேரல் இரும்பொறையின் மற்றொரு செயலும் இங்ஙனமே வியப்பிற்கு உரியதாகும். வளமான தமிழறிஞர்க்கு வாரிவழங்கிய வள்ளல்களின் செயல்களைக் காட்டினும், இவனுடைய அளப்பரும் தமிழ்க் காதற் செல்வி நம்மை மெய்சிலிர்க்கச் செய்வதாக விளங்கு கின்றது.

பதிற்றுப் பத்துள் எட்டாம்பத்து, இவனை ஆசிரியர் அரிசில்கிழார் பாடியதாக அமைந்திருப்பது. அந்தப்

பத்துச் செய்யுட்களையும் பாடிய அரிசில் கிழாருக்கு இவன் அளித்த பரிசில் யாது தெரியுமா? அதனைப் பதிகம் கூறுகின்றது:

> "பாடிப் பெற்ற பரிசில், தானும் கோயிலாளும் புறம்போந்து நின்று, கோயிலுள்ள வெல்லாம் கொண்மின் என்று, காணம் ஒன்பது நூறாயிரத் தொடு அரசு கட்டிற் கொடுப்ப"

என்று, இந்தப் பரிசிலைக் கேட்டதும் அரிசில்கிழார் அயர்ந்து விடுகின்றார். அவர் மட்டும் என்ன? கேட்பவர் எவருமே அயர்வடையத்தான் செய்வர். 'யான் இரப்ப இதனை யாள்க' என்று சொல்லி, அமைச்சுப் பூண்டார் அவர்" என்கிறது பதிகம்.

இங்ஙனம், தன் நாட்டையும், தன் அரண்மனைச் செல்வம் அத்துணையையும் ஒருங்கே அளித்துநின்ற அருந் தமிழ்ச் செம்மல் இவன்! இவனுடைய பெருந்தகைமை யின் குன்றா விளக்காக நின்று நிலவுகின்றன அரிசில் கிழாரின் செய்யுட்கள்.

இவனுடைய போர்மறத்துள் குறிப்பிடத் தகுவன, ஆயர் தலைவனாகிய கழுவுளை வென்றதும், மற்றும் குறும்பு செய்த குறுநில மன்னர்களை வென்று பணி வித்ததும் ஆகும். இவனது போர்மறத்துள் தலைமை பெற்றது தகடூர்ப் பெரும்போர். அதன் வெற்றி காரண மாகத் **தகடூர் எறிந்த பெருஞ்சேரல்** இரும்பொறை என்ற பெயரும் இவனுக்கு ஏற்பட்டது.

பகைத்து எழுந்தாருடன் பொருதி அவரையழிக்கும் பெருஞ்சினத்தினை உடையவனாயினும், அவரே பணிந்து திறையளந்தனராயின், அவர்க்கு அருள்செய்து நிற்கின்ற அரிய பண்பினை உடையவனும் இவன் ஆவான். 'பேய் தன்னாற் பற்றப்பட்டாரது உயிரினைக் கொள்ளாமல், தனக்கிட்ட பலியைமட்டும் பெற்றுச் செல்வதுபோல, நீயும் திறையைக் கைக்கொண்டு அவர் உயிரைப் பறியாது

போகின்றாய்' (பதிற்; 81 : 23-4) என்னும் அரிசில்கிழார் வாக்கு, இவனது பேராண்மையினை நன்கு காட்டுவதாகும். பொங்கு பிசிர் துடக்கிய செஞ்சுடர் நிகழ்வின் மடங்கல் தீயின் அனையை' என, இவன் தன் பகைவரைச் சினந்து அழிக்கின்ற தறுகண்மையினைக் கூறிப் போற்றுகின்றனர் அரிசில்கிழார் (பதிற்; 72 : 14 -15).

**'காவிரி மண்டிய சேய்விரி வனப்பிற்**
**புகாஅர்ச் செல்வ! பூழியர் மெய்ம்மறை!**
**கழைவிரிந் தெழுதரு மழைதவழ் நெடுங்கோட்டுக்**
**கொல்லிப் பொருந! கொடித்தேர்ப் பொறைய.'**

(பதிற்; 73;8-11)

என வரும் செய்திகள், இவன் காலத்தைய சோழ பாண்டியரும், இவனுக்கு எதிர்நிற்கத் துணியாராய், இவனுடன் இசைந்து நின்றே வாழ்பராயிருந்தனர் என்பதனைக் காட்டும்.

இவனுடைய தேவியாவாள் கற்புநலமும் பொற்பு நலமும் ஒருங்கே அமைந்த செவ்வியளாக விளங்கினள். இதனைப் பதிற்றுப்பத்தின் 74-ஆவது செய்யுள் இனிதாக எடுத்துரைக்கும். அதன்கண்,

**'சால்புஞ் செம்மையும் உளப்படப் பிறவும்**
**காவற் கமைந்த வரசுதுறை போகிய**
**வீறுசால் புதல்வற் பெற்றனை.'**

என வருவன, பெருஞ்சேரல் இரும்பொறைக்கு அறிவுசால் மகன் ஒருவனை அவன் மனைவி பெற்றுத்தந்த சிறப்பினை விளக்கும்.

'அனைத்தும் முன்னைத் தவத்தினை உடையவர்க்கே வந்து வாய்ப்பன என்ற' கோட்பாட்டில் உறுதி பூண்டவன் பெருஞ்சேரல் ஆவான். இதனை,

'முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெரும' நின் படிமை யானே.

(பதிற்; 74; 23-28)

என்பதனால் அறிகின்றோம். வயதால் முதிர்ந்தவனும், கேள்வியால் முழுதுணர்ந்தோனுமாகிய ஒருவனுக்கே உண்மைநெறி உணர்த்திக் காட்டும், உயரிய செவ்வியாளனாகவும் இவனை நான் காண்கின்றோம்.

'வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅ ராயின்'

முற்றவும் அழிவடைவர், எனக் கூறுகின்ற எழுபத்தாறாவது பதிற்றுப்பத்தும் இவனது வெற்றிப் பெருமிதத்தை எடுத்துரைத்துப் போற்றுகின்றது.

பெருஞ்சேரலின் படைப்பெருக்கம் எப்படி இருந்த தென்பதனைக் கூறும் 77-ஆவது பதிற்றுப்பத்துச் செய்யுள், 'கொங்கர், ஆபரந்தன்ன செலவிற் பல், யானை காண்பல் அவன் தானை யானே' எனவும் 'மீபிணத் துருண்ட தேயா ஆழியிற், பண்ணமை தேரும் மாவும் மாக்களும், எண்ணற்கு அருமையின் எண்ணின்றோ விலனே' எனவும் உரைக்கின்றது.

இவனுடைய தகடூர் வெற்றியை உரைக்கும் எழுபத் தெட்டாவது பாடலை நாம் நன்றாகவே கவனிக்க வேண்டும்.

''மென்மைத் தன்மையினையுடைய மகளிர் அசைந்து நடந்து சென்று, வயற்புறங்களிலுள்ள வளவிய இதழ் களையுடைய தாமரைப் பூவையும் நெய்தற்பூவையும் கொய்து கொண்டு வருவர். முல்லைப் புலத்துட் சென்று புனந்தோறும் வந்து படிகின்ற கிளிகளை ஓட்டும் விருப்

பினராகக் கிளிகடி பாட்டைப் பாடுவர்; பலவகைப் பயன்களும் நிலைபெற்ற காட்டிடத்து ஊர்களும், வெல்லுகின்ற போரையுடைய வீரர்கள் மறமாண்பை மட்டுமே விரும்பினாராய் நின்று காக்கும் விற்படை நிரம்பிய காவற்காடும் விளங்கும்; இத்தகைய சிறப்புடைய தகடூரினை அழித்தனை'' என்று அரிசில்கிழார் கூறுவர். அப்பொழுது. 'ஆடுகள் பரந்தாற் போலப் போர்க் குதிரைகளும், மாடுகள் பரந்தாற் போலப் போர்க் களிறுகளும்' இடமெங்கணும் பரவி நின்றன. (பதிற்; 78 : 4-14). என்கின்றனர் அவர்.

இவ்வாறாகப், பெரும்படையும், பெரும் போராண்மையும், பெருந் தமிழன்பும், அருள் உள்ளமும், ஒருங்கே நிலைபெற்ற ஆண்மையின் உருவாகத் திகழ்ந்தவன் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை ஆவான். இவனுடைய இத்தகைய தகைமைகளை நாம் அறிந்து கொண்டால், போரின் கண் வெற்றி இவனுக்கே வாய்த்தல் வேண்டுமெனக் கருதி விடுவோம், ஆயின், இவனுக்கு எதிர்நின்ற அதிகனும், இத்தகு நற்பண்புகளாற் சிறந்தவனாதலை அறியும் பொழுதுதான், இவ்விருவரும் பொருதாது நட்பினராகி உயர்ந்திருக்கக் கூடாதா என்று நாம் ஏக்கம் அடைவோம். அதிகனைப் பற்றிய செய்திகள் சிலவற்றை இனிக் காண்போம்.

# 4. அதிகமான் எழினி

**சே**லம் மாவட்டத்தில், சேலத்திலிருந்து கிருஷ்ண கிரிக்குச் செல்லும் வழியில், தர்மபுரி என்றொரு ஊர் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தின் தலை நகரம் இது. இதன் பெயர் **தர்மாபுரி** என்று வழங்கி வந்ததாகவும், பின்னர்த் **தர்மபுரி** என்று ஆயிற்றெனவும் கூறு கின்றார்கள்.

இந்தத் தர்மபுரி என்னும் ஊர்தான் சங்க காலத்திலே, பெரும் புகழுடன் **தகடூர்** என்று திகழ்ந்தது. இதன்கண் அரசு வீற்றிருந்து, இதனையொட்டியமைந்த நாட்டுப் பகுதியை **அதிகமான்கள்** என்னும் அரசகுடியினர் ஆண்டு வந்தனர்.

வெளி தேசத்திலிருந்து கரும்பை இந்நாட்டிற்குப் பயிரிடக் கொணர்ந்து பரப்பியவர்கள் இவர்களே என்ப தனை அகநானூற்றுச் செய்யுட்களால் நாம் அறி கின்றோம். அத்துடன், இவர்கள் சிறந்த படைமறவர் களாகவும், தமிழ் அன்பர்களாகவும் திகழ்ந்திருக் கிறார்கள். அறந்தவறாத வகையில் குடியோம்பிய சிறப்பும் இவர்கட்கு உண்டு.

இந்த அதிகர் குடியினருள், நாம் முதலாவதாக அறிவது, அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவனைத் தான். இவனுக்கு முற்படவிருந்த அதிகர்கள் பற்றிய செய்திகள் எதனையும் நம்மால் அறிதற்கு இயலவில்லை. 'அதிகமான்' என்ற சிறப்புப் பெயரைத் தம் பெயரின் முன்பாகக் கொண்டதுபோல, 'எழினி' என்ற பெயரினை

இவர்கள் தம் பெயரின் பின்னாகவும் கொண்டிருந்தனர். மேலும், சேரர்களது குடியினருள் ஒருவராக இருந்தமையால், சேரர்க்குரிய சின்னங்களே இவர்கட்கும் உரியவாயிருந்தன. இவற்றைச் சங்கநூற் செய்யுட்கள் பலவற்றால் நாம் அறியலாம். மேலும், தகடூர்ப் போர்க்கண் அதிகமான் வீழ்ந்ததன் பின்னர், வெற்றி வீரனாகத் திகழ்ந்த சேரமான், அவனுக்கு நடுகடல் நாற்றியும், இறப்புக் கடன்களைச் செய்து போற்றியும் வழிபாடு செய்தமையை நினைத்தாலும், இந்த உறவுநிலை நன்கு உறுதிப்படும்.

தகடூர்ப் போரின் நிகழ்வுக் காலத்திலே அதிகமானாகத் திகழ்ந்தவன், அதிகமான் நெடுமான் அஞ்சியெனவும், அவன் மகனாகிய பொகுட்டெழினி எனவும் கருத்துக்கள் நிலவுகின்றன. அதிகமான் அஞ்சியின் ஆட்சிக் காலத்தே நிகழ்ந்த போர், அவன் வீழ்ந்த பின்னர், அவன் மகன் பொகுட்டெழினியின் காலத்தும் தொடர்ந்திருக்கலாம் எனவும், இதுவே தகடூர்ப்போரில் அதிகமான் எழினியைச் சேரமான் வென்றான் எனவுரைப்பதன் பொருளாகலாம் எனவும் கொள்வார்கள் சிலர். இது ஓரளவு உண்மையாக இருக்கக்கூடியதே யாகும். போரினது கடுமையோடு, இருசாராரும் தகுந்த முன்னேற்பாடுகளுடனும் வலிமையுடனும் திகழ்ந்தனராதலின், போர்க் காலம் ஒரு சில ஆண்டுகள் வரை நீடித்திருந்தமையும் பொருந்துவதே.

தகடூர் அதிகமான்களுள் நாம் சிறப்பாக அறிதற்குரிய சிறப்பினனாகத் திகழ்பவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்றோம். இவனுக்கு முற்பட்டவர் யாவரென்பதனை நாம் அறிதற்கில்லை. இவன் மகன் பொகுட்டெழினி என்பதும், இவன் அத்தை மகள் நாகந்தையார் என்பவர் சிறந்த தமிழ்ப் புலமையுடன் திகழ்ந்தனர் என்பதுமே இவன் குடும்பத்தைப் பற்றி நாம் அறியக் கூடியனவாக உள்ளன.

அதிகர் மரபினருள் ஒருவனைப்பற்றிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தும் நாம் கேள்விப்படுதலால், பொகுட்டெழினிக்குப் பின்னரும், இந்தக் குடியினர் தகடூர்ப் பகுதியை ஆண்டு வந்தனர் என்பதனையும், அவர்களின் ஆட்சி அதிகமான் அஞ்சிக்குப் பின்னரும் நெடுங்காலம் நிகழ்ந்துவந்த ஒன்றென்பதனையும் நாம் அறிகிறோம்.

'அதிகமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி என்பானை அரிசில்கிழார் பாடிய பாட்டு' என வழங்கும் புறநானூற்று 230ஆவது பாடல், தகடூர்ப் போரின்கண் வீழ்ந்தானை 'எழினி' எனக் குறிக்கின்றது. இவனை, நெடுமான் அஞ்சிக்கு தகப்பன் எனக் கொள்வாரும் உளர். இவனே நெடுமான் அஞ்சி என்பாரும் பலர். இப்படிக் கொள்ளுதலே பொருந்துவதாகவும் உள்ளது.

'பெற்ற தாயால் கைவிடப்பட்ட உண்ணாத குழவியைப் போல, அவனைச் சார்ந்திருந்த சுற்றம் இடந்தோறும் இடந்தோறும் வருத்தமிகுதியான் கதறிக் கொண்டிருந்தன. பசியால் வருத்தமுற்றவையாய்க் கலக்கமுற்றும் நலிந்தன. துன்பம் மிகுந்த நெஞ்சத்தோடு அவனை இழந்து கிடந்த விதனத்தின் கொடுமையோ மிகவும் பெரிதாயிருந்தது.

'கூற்றமே! அறமில்லாத கூற்றமே! அவர்களது இழப்பினும் காட்டில் நீதான் பெரிதான இழப்பினை உடையை ஆவாய். வாழ்தல் ஏதுவாக வரும் வயலிடத்து விளையும் வருவாயை அறியாதானாக, தளர்ந்த குடியையுடைய உழவன் ஒருவன், விதையைக் குற்றி உண்டாற்போல, இந்த எழினியது பெறுதற்கரிய உயிரினை நீயும் உண்டு விட்டனையே!

''இவன் உயிரை உண்டிலையானால், பகைவர் பலரது உயிரையும் பருகி நீ வயிறு நிறைவையே! இவன் போரிற் பகைவரைக் களத்தின்கண் கொன்று நினக்கு ஊட்டுவானே!

'கன்றை மேவிய ஆனிரைகள் தாம் மேய்ந்த மேய்ச்சற் காட்டிடத்தே, பிறிதொன்றால் ஏதமின்றிக் கிடப்பன வாகும். சுரத்தில் நடத்தலால் வெம்மையுற்ற காலினை யுடைய வழிப்போவார் தாம் வேண்டியவிடத்தே தங்குவதற்கான வசதிகள் செய்யப் பெற்றிருந்தன. களத்தின்கண் நிறைந்து கிடக்கும் நெற்போலிகள் காவலின்றியே கிடந்தன. இவ்வாறாக, எதிரில் நின்று தடுக்கும் பகையைத் துறந்தவனும், நிலங்கலங்காத செவ்விய ஆட்சியினைச் செய்து வந்தவனும், உலகத்தார் புகழ்ந்து விளங்கிய போரைச் செய்யும் ஒள்ளிய வாளினை உடையவனும், தப்பாத மொழியினை உடையவனும் ஆகு விளங்கியவன் எழினி ஆவான்!

'அவன் சேரமானோடு பொருது போர்க்களத்தின் கண்ணே வீழ்ந்தான்!'

இங்ஙனம் பாடுகின்றார் அரிசில் கிழார். இவர் பெருஞ் சேரலின் அமைச்சராக விளங்கிய பெருந்தகை யாளர். எனினும், எழினியின் சிறந்பினை அதனாற் குறைவாக மதிப்பிட்டு விடவில்லை. அதனை உள்ளவாறே போற்றி உவக்கின்றார். இங்ஙனம், பகைவரும் போற்றிப் புகழப் பெருந்தகுதியுடன் விளங்கியவன் அதிகமான் ஆவான்.

கன்றமர் ஆயம் கானத்து அல்கவும்
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத்து உறையவும்
களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாள்
பொய்யா எழினி பொருதுகளஞ் சேர
ஈன்றோள் நீத்த குழவி போலத்
தன்னமர் சுற்றந் தலைத்தலை இனையக்
கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சமொடு
நோயுழந்து வைகிய உலகினும் மிகநனி

**நீயிழந் தனையே அறனில் கூற்றம்**
**வாழ்தலின் வரூஉம் வயல்வளன் அறியான்**
**வீழ்குடி உழவன் வித்துண் டாஅங்கு**
**ஒருவன் ஆருயிர் உண்ணாய் ஆயின்**
**நேரார் பல்லுயர் பருகி**
**ஆர்குவை மன்னோ, அவன் அமரடு களத்தே.**

அரிசில் கிழாரோ உழிஞை வேந்தனான சேரமானின் பாசறைக்கண் வீற்றிருந்தவர். போரிடை அதிகமான் வீழ்ந்ததும், தகடூர்க் கோட்டை சேரமானின் கைப் பட்டதும், அந்த வெற்றிச்சிறப்போடு, வீழ்ந்த அதிகனின் புகழ்ச் சிறப்பாலும் அவருள்ளம் நிறைகின்றது அவனைத் தமக்குப் பகைவன் எனச் சேரர் கருதினும், அவன் ஆண்ட நாட்டிற்கு, அரசியற் செம்மையாலும் பிறவற்றானும் சிறந்தவனாகவே விளங்கினன். இதனை உணர்ந்த அரிசில்கிழார் அவனை இழந்ததனால் வருத்தமீதூர விளங்கிய தகடூர் நாட்டுக் குடிமக்களைக் கண்டதும், அதிகனின் இழப்பினை நினைந்து கண்ணீர் மல்கப் பாடி அவன் புகழைப் பரவுகின்றனர்.

இனி, அரிசில் கிழாரைப் போலாது, அதிகனின் அவையிடத்தேயே, அவன்பாற் பேரன்பினராகி, அவன் நலத்திற் பெரிதும் ஈடுபாடு கொண்டவராகி வீற்றிருந்த ஔவை யாரின் தமிழ் உள்ளம், அதிகனின் இறப்பினாற் கசிந்து கசிந்து நலிகின்ற தன்மையையும் காண்போம்.

'வெட்டிச் சுட்ட கொல்லை நிலம்; குறவனால் தறுக்கப்பட்ட மரத்துண்டுகள் கரிந்த புறத்தை உடைய வாய்க் கிடக்கின்றன. அத்தகைய தோற்றமுடைய விறகால் அடுக்கப்பட்ட, ஈமத்தின் கண்ணே எரிகின்ற ஒள்ளிய அழலினிடத்தே, நின் உடல் சுடப்படுமாறு சென்று சேர்ந்தாலும சேர்க! அவ்வாறு சேராது போய் வறிதே வானத்தைப் பொருந்த ஓங்கினும் ஓங்குக! அதிகமானே! குளிர்சுடர் மதியத்தைப் போன்ற வெண்கொற்றக் குடையினை உடையோனே! ஞாயிற்றை

ஒப்பானே! நின் புகழ் என்றும் எதனாலும் மறையாது!' என்று அதிகனின் புகழ்ப் பெருக்கத்தைப் பாடுகின்றார் ஔவையார்.

எறிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈம ஒள்ளழல்
குறுகினும் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினும் நீள்க பசுங்கதிர்த்
திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே

(புறம் 231)

அதிகமானின் உடலை ஈமத்திட்டு எரித்துச் செய்யப் படுவதற்குரியன பலவும் செய்து, சடங்குகளைச் சேரமானே செய்கின்தான். வெற்றி மிடுக்குடன், வீரப்பெருமகனை இழந்த் சோகமும் கவிந்து வாட்டக் கண் கலங்கி நிற்கின்றனர் அரிசில் கிழார், பொன்முடியார் போன்றோர்.

அடுத்து,அவனுக்கு நடுகல் நாற்றிப் பீலிசூட்டி அவன் பீடும் பெயரும் பொறித்து, நடுகல் வழிபாடும் நிகழ்த்து கின்றனர். அப்பொழுது, நடுகல்லின்கண் நிறுத்திய அதிகமானுக்குக் கள் வார்க்கின்றனர். ஔவையார் கண்டு கலங்கிச் சோர்கின்றனர். அவர் கண்கள் கண்ணீரை வார்க்கின்றன! அவர் உள்ளம் எங்கெங்கோ சென்று சுழல்கின்றது.

சேரமானோடு பகைமை நீக்கித் திறைசெலுத்திப் பணிந்து போகுமாறு அரிசில்கிழார் பன்முறை தகடூர் சென்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், முற்றிய பகைமையும் மானவுணர்வும் அதிகமானை அதற்கிணங்க மறுத்துவிடுமாறு செய்து விட்டன. அந்த நிகழ்ச்சிகளை நினைந்து அரிசில்கிழார் வருந்துகின்றார். சேரமானைப் போற்றுபவர், அவ் விடத்தே இந்தச் செய்தியையும் நினைவுபடுத்துகின்றார்.

''மூங்கில் கிளைத்து விரிந்தனவாக வானை நோக்கி உயர்ந்தெழுகின்றதும், கார்மேகம் தவழ்கின்றதுமான நெடிய உச்சியினையுடைய கொல்லி மலைக்குத் தலைவனே! கொடி விளங்கும் தேர்மேற் செல்லும் பொறை நாட்டின் முதல்வனே!

நின் வளனையும் ஆண்மையையும் கொடைத்திறனையும் பற்றி, அவை மக்களது அளவினுங்காட்டில் அளவிறந்தன என்ற தன்மையினை யான் பலநாட் சென்று உரைத்தேனே. உரைப்பவும் நின் பகைவர் தெளிவற்றார் ஆயினரே! பிறராகிய சான்றோர் எடுத்துச் சொல்லினால் தெளிவரென்று கருதி, அவ்வழியும் முயன்றேனே! அவ்விடத்தும் பகைமையால் தம் மதிமருண்டு, அவர் நின்னைப் பகைத்துப் பேசுதலையே காண்பேன்! இத்தகைய மதி மயங்கியவர்க்கு எப்படி உரைத்துத் தெளிவிப்பதெனயானும் மயங்குவேனே!''

**கழைவிரிந்து எழுதரும் மழைதவழ் நெடுங்கோட்டுக்**
**கொல்லிப் பொருந கொடித்தேர்ப் பொறைய! நின்**
**வளனும் ஆண்மையும் கைவண்மையும்**
**மாந்தர் அளவிறந் தனவெனப் பன்னாள்**
**யான்சென் றுரைப்பவும் தேறார் பிறரும்**
**சான்றோர் உரைப்பவும் தெளிகுவர் கொல்என**
**ஆங்குமதி மருளக் காண்குவல்**
**யாங்குரைப் பேனென வருந்துவல் யானே!**

(பதிற். 73)

இதனால், தகடூர்ப் போரின் நிகழ்ச்சிக்கு முன்னால் அதிகமானையும் சேரமானையும் சமாதானஞ் செய்து வைக்க அரிசில்கிழாரும் பொன்முடியாரும் ஒளவையாரும் பிற தமிழ்ச் சான்றோரும் பெரிதும் முயன்றமை தெளிவாகும். அந்த அறிவுரைகளை ஏற்காது, மானமே பெரிதாகப் போரிட்டு மாண்டவன் அதிகமான். ஒளவையார் உள்ளம், அங்ஙனம் தூதுரைத்து வந்த சான்றோர்

சொல்லிய சொற்களை நினைக்கின்றது. நடுகல்லையும் நோக்குகின்றது.

'அதிகமானே!' எனக் கூறிக் கலங்குகின்றார். அருகில் நின்ற அரிசில்கிழார் முதலியோர் தேற்றவும் தெளியாத வராய் ஔவையார் புலம்புகின்றார்!

'அதிகமானை இழந்தேன்! அவனை இல்லாதே கழிகின்ற காலை என்பதும் மாலை என்பதும் எனக்கு இனி இல்லாமற் போவதாக! யான் வாழ்கின்ற நாள் என்பதும் எனக்கொரு பயனாதல் இல்லாமையின், அதுவும் இல்லையாகிப் போவதாக!

'அந்நாளிலே, சிகரம் ஓங்கிய உயர்ந்த குதிரைமலை பொருந்திய நாடு முழுவதையும் நீங்கள் கொடுப்பவும், அதனை ஏற்றுக் கொள்ளாது, போரினையே மேற்கொண் டான் அவன்.

'இந்நாளில், நடுகல் நாற்றிப், பீலி சூட்டி, நாரால் அரிக்கப்பெற்ற தேறலைச் சிறுகலத்தே நீங்கள் வார்க் கின்றீர்கள். இதனை அவன் ஏற்றுக் கொள்வானோ? அவன் ஏற்கவே மாட்டான்' என்று மனம் உருகிக் கரைகின்றார் அவர்.

**இல்லா கியரோ காலை மாலை**
**அல்லா கியர்யான் வாழும் நாளே**
**நடுகற் பீலிசூட்டி நாரரி**
**சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொல்லோ**
**கோடுயர் பிறங்குமலை கெழீஇய**
**நாடுடன் கொடுப்பவும் கொள்ளா தோனே?**

(புறம்-232)

'தகடூர் நாடு தனக்கு உரியது' என்பதில் உறுதி பூண்டவன் அதிகமான். தன் உரிமைக்குப் பழுதாகச் சேரமானை அடிபணிந்து, அவன் அந்நாட்டைத் தனக்கு அளிக்கப், பெற்று வாழ்கின்ற நிலையினை அவன் ஏற்க இசைந்தானில்லை. தன் நாட்டைக் காத்து நின்று

சாவையே தழுவினான். அவன், இன்று இந்தக் கள்ளை நீங்கள் வார்த்தால் ஏற்றுக் கொள்வானோ? என்று குமுறுகின்ற ஔவையாரின் சொற்கள், அதிகமானின் தமிழ்மறத் தகுதியின் உரைகல்லாக நிலவுகின்றது.

அதிகமானின் இத்தகைய பெரும்புகழ்ச் செவ்வியை மனத்தே கொண்டு பார்த்தால்தான், தகடூரின் வீழ்ச்சி எத்துணைப் பெரிதான ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்பது நமக்கு விளங்கும்.

ஔவையாருக்கும் அதிகமானுக்கும் நட்பு ஏற்பட்டதே ஒரு சுவைமிக்க சம்பவம் ஆகும். அதிகமானிடம் பரிசில் நாடிச் சென்றனர் ஔவையார். அவரது தமிழ்ச் சிறப்பினை நுகர்ந்த அதிகமானுக்கு அவரை விரையச் செல்லவிடுதற்கு மனமில்லை. அதனால், அவருக்குப் பரிசில் தருகின்ற காலத்தை நீட்டிக்கொண்டே போயினான்.

அதிகமானின் உள்ளச்சால்பினை அப்போது அறியாதவரான ஔவையார், அவனது செயலின் நோக்கத்தைத் தவறாகவே கொண்டனர். பரிசில் தராது தம்மைக் கழிக்கவே அதிகமான் காலத்தை நீட்டிப்பதாகக் கருதி விட்டனர்.

ஒருநாள், தம் மூட்டையைக் கட்டிக் கொண்டு அரண்மனையினின்றும் வெளியேறிக் கொண்டிருந்த ஔவையாரை, வாயிற்காவலனாக நின்றிருந்த அதிகமான் தடுத்து நிறுத்தினான். அவரது முடிபை உணர்ந்து அதனைத் தடுத்துவிட நினைந்தே அதிகன் வாயிற் காவலனாகப் புனைந்து கொண்டு நின்றிருந்தான்.

வாயிற் காவலன் தம்மைத் தடுத்ததும், ஔவையாரின் சினம் பொங்குகின்றது. அரசன் பரிசில் தருவதை நீட்டிக்க, இவன் வெளிச்செல்ல விடாதும் தடுக்கின்றனனே என வேதனைப்பட்டார். அவனோ, 'தாயே!

அதிகமான் பரிசில் தராது நீட்டித்தது உண்மைதான்; எனினும் தராமல் விடுப்பான் அல்லன்; எனவே, தாங்கள் இருக்கைக்கு ஏகுங்கள்; யான் செய்தி தெரிவிப்பேன்' என்கின்றான்.

''வாயிற் காவலனே!

''வண்மை உடையவரது செவியிடத்தே, விளங்கிய சொற்களை விதைத்து, அதன் மூலம் தாம் நினைந்த பரிசிலை விளைத்துக் கொள்வதற்கு வலிமையுடைத்தான நெஞ்சினை உடையேம் யாம். மேம்பாட்டிற்கு வருந்தும் இப் பரிசிலால் வாழ்கின்ற வாழ்க்கையை உடைய எம்போல்வார்க்கு அடைத்திராத வாயிலைக் காத்து நிற்பவனே!

''விரைந்த குதிரையை உடைய தலைவனாகிய அதிகமான் அஞ்சி, தான், தன் தரத்தினை அறிய மாட்டானோ? அல்லது, என் தரம் யாதெனத் தான் அறிந்தானில்லையோ?

''அறிவும் புகழும் உடையவர்கள் இறந்தாராக, அத்தகையோர் அற்றுப்போதலால் வறுமையுற்றுக் கிடக்கின்ற உலகமும் இதுவல்லவே! அதனாற்றான், எம் கலங்களைக் காவினேம்; எம் முட்டுக்களையும்' கட்டினேம்.

''மரத்தைக் கொல்லும் தச்சன் பெற்றவரும், கையில் மழுவினைக் கொண்டவருமான கைத்தொழில் வல்ல மக்கள் காட்டிடத்துக்குச் சென்றால், அக்காட்டகம் பயன்படுகின்ற வகைமை எப்படிப் பட்டது?

''அப்படியே எனக்கும், யாதொரு திசையிடத்துச் செல்லினும், அத்திசைக்கண் சோறு தப்பாமற் கிடைப்பதாகும்'' என்றனர்.

(புறம்-206)

இதனைக் கேட்ட அதிகமான், தன் அறியாமைக்கு நொந்து கொண்டான். தன்னை வெளிப்படுத்தி நின்று

பொறுத்தருள வேண்டியவனாக, ஔவையாருக்கு வேண்டிய பரிசில்களை அளித்து உபசரித்தான். அவர் மனம் குதூகலத்தால் செறிவுற்றது! அந்தக் கொடைத் திறனை வியந்தது. தாம் கொண்ட அவசர முடிவிற்கு நொந்து நாணங்கொண்டது.

மற்றொரு சமயம், இதே போன்று அதிகமான் பரிசில் நீட்டிக்கப் புலவர் வெகுண்டு வெளியேறக் கண்ட ஔவையார், அவரைத் தடுத்து நிறுத்தி, அதிகனது பண்பு நலத்தை வெளியிடுகின்றார்.

''அதிகமானிடத்து ஒரு நாளோ இரண்டு நாட்களோ சென்று வந்தவர் யாம் அல்லேம். பல நாட்களும் பழகிப் பலரோடும் கூடிச் சென்றவொரு பழக்கத்தை உடையோம். இருப்பினும் முதல் நாளில் எம்மைக் கண்ட போது விளங்கிய அதே விருப்பினனாகவே அவன் எப்போதும் விளங்குகின்ற தன்மையாளனாக இருக்கின்றான்.

''அழகிய நெற்றிப் பட்டத்தை அணிந்த போர் யானையையும், இயன்ற தேரையும் உடையவன் அதிகமான். அவனிடத்துப் பரிசில் பெறுகின்ற காலம் நீட்டித்ததாயினும் நீட்டாதே போவதாயினும், இரண்டும் ஒன்று தான். யானை தனது கொம்பினதிடையே வைக்கப்பட்ட கவளத்தைப்போல, அவன் பரிசிலும் நம்முடைய கையகத்தது ஆகுமேயன்றிப் பொய்யாகிப் போவதில்லை.

''ஆகவே, உண்ணுதற்கு ஆசைப்பட்ட நெஞ்சத்தை உடையீரே! அது குறித்து நீவிர் வருந்தல் வேண்டா! அவன் தாள் வாழ்வதாக!''

என்று கூறுகின்றார் (புறம் 101) ஔவையார். இத்தகைய தமிழன்பிற் தலைசிறந்து நின்றவனாக விளங்கினான் அதிகமான். இதனை அறியும்போது, நம் நெஞ்சம் விம்முகின்றது. தமிழறிந்தாரைப் போற்றிப் புரக்கும் அத்தகைய வள்ளல்கள் இந்நாளில் இவரே என நினைந்து

ஏங்குகின்றது. ஔவையாருடன் சேர்ந்து, 'வாழ்க அவன் தாள்!' என, நாமும் அவன் நினைவை வாழ்த்துவதற்கு முனைகின்றோம்.

**ஒருநாட் செல்லலம், இருநாட் செல்லலம்**
**பலநாட் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ!**

தமிழன்பின்கன் கண் தலைமை சான்ற பெருமையுடையானாக வாழ்ந்திருந்த அதிகமான், அங்ஙனமே பிற நலங்களினும் எள்ளளவுங் குன்றாத சிறப்பினனாகவே திகழ்ந்துள்ளனன். இதனை ஔவையார் பல செய்யுட்களாற் கூறியுள்ளனர். அவன் நினைவை என்றும் நிலைபெறுத்தியும் சென்றுள்ளனர். இவற்றையும் நாம் காண்போமாக:

**அணிபூண் அணிந்த யானை இயல்தேர்.**
**அதியமான் பரிசில் பெறூஉங் காலம்**
**நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்**
**கோட்டிடை வைத்த கவளம் போலக்**
**கையகத் ததுவது பொய்யா காதே**
**அருந்தே மாந்த நெஞ்சம்**
**வருந்த வேண்டா வாழ்கவன் தாளே.**

(புறம்-101)

ஒரு சமயம், வேளிர் தலைவர்களுட் சிலர், வளர்ந்து வருகின்ற அதிகமானின் பெருமையைக் கண்டு மனங் கொதிப்புற்றவராயினர். அவர்கள் கொதிப்பிற்குச் சோரும், சேரரின் துணைவராகத் திகழ்ந்த மலையமானும் தூபமிட்டு வருகின்றனர். அவர்கள் அதிகமானை அழித்து விடுதற்கு எண்ணிப் படைதிரட்டி வருகின்றனர். அவர்களது நிலையைக் கண்டதும் ஔவையாருக்கு நகையே தோன்றுகின்றது. அவர்கள்பாற் சென்று:

'பகைவர்களே! போரிடுதலை மேற்கொண்டு போர்க் களத்தே புகுதலை மட்டும் விட்டுவிடு வீராக! எம் பக்கத்

துள் ஒரு வீரன் இருக்கின்றான். ஒரு நாளைக்கு எட்டுத் தேர்களைச் செய்துவிட வல்லானொரு தச்சன் ஆகியவன், ஒரு திங்கள் வரைக்கும் வேலைசெய்து வடித்த தேர்க் காலைப் போன்ற உறுதியுடையவன் அவன்'' என்கின்றார்.

களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து;
எம்முளுள் உளனொரு பொருநன்; வைகல்
எண்தேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே.

(புறம்-87)

ஔவையாரின் இந்தச் சொற்களால் பகைவரது சீற்றம் மிகுதியாகின்றது. ''எங்களுள் ஏதும் வீரத்திற்குக் குறைவில்லை. எங்களது படையணிகளும் தூசிப்படையும் எவரையும் வென்று வாகைசூடும் திறத்தன. ஆதலின், யாம் கொண்டது முடிப்போம். அஞ்சிக்கு அஞ்சலோம்'' என்கின்றனர்.

இதனைக் கேட்டு ஔவையாரும் தளர்ந்தனர் இல்லை. அவர்களது உள்ளம் காழ்கொண்ட பகைமையின் காரணமாக மேலும் சிறுகுவதையே அவர் கண்டார். மீண்டும் அறவுரை கூறுவதற்கு முற்படுவாராக,

யாவர் ஆயினும் கூழை தார்கொண்
டியாம் பொருதும் என்றல் ஓம்புமின் ஓங்குதிறல்
ஒளிறிலங்கு நெடுவேன் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்
விழவுமேம் பட்ட நற்போர்
முழவுத்தோள் என்னையைக் காணா ஊங்கே.

(புறம்-88)

என்கின்றார். 'எம் தலைவனைக் காணாததன் முன்பாக யாவிராயினும் பொருதும் என்று கூறுங்கள்; நேரிற் கூறினிராயின் நீர் அழிவதுதான் உறுதி' எனக் கூறும்

சொற்கள், உண்மையின் வெளிப்பாடே என்பதனை, அச்சொற்களுள் ஒலிக்கும் கம்பீரமே நமக்கு வலியுறுத்தும்.

ஔவையாரின் அறிவுரைகளைக் கேட்டுத் திருத்தம் உறுகின்ற தெளிவு அந்தப் பகைவரிடம் உண்டாக வில்லை. அவர்களுள் ஒருவன், ஔவையாரிடம் சிறிது ஆத்திரமாகவே கேட்கின்றான்:

**'இழையணிப் பொலிந்த ஏந்துகோட் டல்குல்**
**மடவரல் உண்கண் வாணுதல் விறலி**
**பொருநரும் உளரோநும் அகன் தலை நாட்டு?'**

என வினவியவனாகத் தன் பரந்த மார்பை நிமிர்த்துக் காட்டியபடி நிற்கின்றான். அவன் கேள்வியில் ஒலித்த எள்ளல் ஔவையாரைப் பெரிதும் புண்படச் செய்கின் றது. 'பொருபடை வேந்தே!' என் அவனை விழித்தவ ராக, அவனுக்கு மாற்றங் கூறவும் முற்படுகின்றார்:

**எறிகோல் அஞ்சா அரவின் அன்ன**
**சிறுவன் மள்ளரும் உளரே; அதாஅன்று**
**பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அதுபோர் என்னும் என்னையும் உளனே!** (புறம்-89)

என்கின்றார்.

"அடிக்கும் கோலுக்கும் அஞ்சாதாய்ச் சீறிவரும் பாம்பைப் போன்றவரான இளைய வலிய வீரர்கள் பலர் எம் நாட்டிடத்தே உள்ளனர்.

"அஃதன்றியும், மன்றினிடத்தே தூங்கும் பிணிப்புற்ற முழவினது, காற்றெறிந்த, தெளிந்த ஓசையுடைய கண் ணின்கண் ஒலியைக் கேட்பின், அது போர்ப்பறை ஒலி யென்று மகிழ்ந்து எழுகின்ற ஏம் தலைவனும் உளன்."

படைமறவர் மட்டுமல்லர்; அவர்க்குத் தலைவனாக விளங்கும் பேராண்மை மிக்க அஞ்சியும் உள்ளனன் என்று

கூறும்போது, அவரது பெருமிதச்செறிவு நமக்குப் புலப் படுகின்றது.

இங்ஙனம் அறவுரை பல கூறியும், பகைவர் தம் முடைய நிலைக்கண் உறுதியுடன் திகழ, அதுகண்ட ஔவையாரும், அவர்களது தீயூழினை நினைந்து வருந்தி யவராகத் திரும்பி விடுகின்றனர். அஞ்சியை வந்து அடைந்தபோது, அவன், அவரது முகக்குறிப்பினாலே நிகழ்ந்திருப்பதை உணர்ந்து கொண்டவனாக, 'அம்மையே! தங்கள் அறவுரைக்கு அவர்கள் செவிசாய்க்க வில்லை போலும்! இனி என்ன செய்வது?' என்று வினவு கின்றான்.

அதிகமானின் கேள்வியிடத்து உட்பொருளாக அமைந் திருந்த ஐயத்தை ஔவையார் புரிந்துகொண்டனர். பகைவர்கள் அறவுரைக்குச் செவிசாய்த்தல் இலர் என் னும் போது, அவர்கள் படைப்பெருக்கத்தை உடைய வராக இருத்தல் வேண்டுமன்றோ? இந்த நினைவுதான் அதிகமானின் கேள்விக்குக் காரணம் ஆகும்.

''அதிகமானே!

''மறத்தையுடையது புலி; அது சீறி எழுந்ததென்றால், அதற்கு எதிர்நின்று வெல்லற்குரிய மான்கூட்டம் யாதா யினும் இவ்வுலகில் உளதாகுமோ?

''ஞாயிறானது கொதித்து எழுந்ததாயின், மயங்கிய வானிடத்தும் எட்டுத் திசைகளிடத்தும் செறிந்திருக்கும் இருள் என்பதும் உளதாகுமோ?

''புனல் கொழிக்கப்பட்ட மணல் பரக்கவும், கற் பிளக்கவும் நடக்கவல்ல மிக்க மனச்செருக்கினை உடைய தான கடாவிற்குப் போதற்கரிய துறையும் யாதேனும் உண்டோ?

''இல்லையன்றே! அங்ஙனமே, எழு மரம் கடுக்கும், தாள்தோய் தடக்கை, வழுவில் வன்கை, மழவர் பெரும!

நீ களத்தின்கட் புகுந்தாயானால், பெரிய இந் நிலத்தின் கண் நினது மண்ணைக்கொண்டு ஆர்க்கும் வீரரும் உளரோ?'' என்கின்றனர்.

ஔவையாரின் சொற்கள் அதிகனின் உள்ளத்திலே பெருமிதத்தை ஊட்டுகின்றன. 'இப் பகையினை ஒழிப் பேன்' என்று சினந்து எழுகின்றான். போர் ஒலிக்கப் பெரும் படை திரள்கின்றது. பகைவர் தன் நாட்டை அடைவதற்கு முன்பாகத், தானே அவர் அரண்களைச் சென்று வளைத்துக் கைப்பற்றி வெற்றிவாகை சூடுகின் றான் அதிகன். இவனது இந்தப் போர் வெற்றியை,

'கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சி

(புறம்-92)

திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு
ஓடன் மரீஇய பீடின் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதன் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்
தண்ணல் யானை அடுகளத் தொழிய
அருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.

(புறம்-93)

என்று ஔவையார் கூறுகின்றார். இப் போரின்கண் அதிகமான் புண்பட்டான் என்பதும், இதனால் அறியப் படுவதாகும். இந்தப் போரினை,

எழுபொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழுவின் றெய்தியும் அமையாய் செருவேட்டு
இமிழ்குரன் முரசின் எழுவரோடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை............

(புறம்-99)

எனக் கூறுகின்றது ஔவையாரின் புறப்பாட்டு. இதே பாட்டின்கண், அவன் மலையமானை வென்று கோவலூரைக் கைப்பற்றிச் சிறந்ததும், 'முரண்மிகு கோவலூர் நூறிநின், அரணடு திகிரி ஏந்திய தோளே' என உரைக்கப்படுகின்றது.

மேலும், போர்க் குரைஇப் புகன்று கழித்த வாள்' எனவரும் புறப்பாட்டில் (97) பகைவரை அதிகனுக்குத் திறையழித்துப் பணிவீராக என, ஔவையார் கூறுவதும், 'முனைத்தெவ்வர் முரணவிய' என அவனது பிறர் அரண்களை வென்ற செவ்வியைப் பாராட்டுவதும், இங்கு நினைவு கூரத் தக்கதாகும்.

இங்ஙனம், போர்மறத்தால் சிறப்பெய்தி விளங்கியவன் அதிகமான். அவன், இடையறாது இங்ஙனம் இயற்றிவந்த போர்ச் செயல்களுள் பெரும்பாலும் வெற்றி அவனுக்கே வாய்த்தும் வந்தது. அவனுக்குத் தவமகன் பிறந்தபோதும் அவன் போர்க்களத்திலிருந்து நேராக வந்துதான் தன் மகனைக் காண்கின்றான். இதனை ஔவையாரின் பாடலால் நாம் அறியலாம்.

கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண்டோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல

**இன்னும் மாறாது சினனே அன்னோ**
**உய்ந்தனர் அல்லர்இவன் உடற்றி யோரே**
**செறுவர் நோக்கிய கண்டன்**
**சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே.**

(புறம் 100)

தனக்குப் பிறந்த தவமகனின் முகத்தினைக் காணும் போதுகூட, அதிகமானின் முகத்திலே மகிழ்ச்சி தோன்றவில்லை; போர்க்களத்திலிருந்து தான் பெற்ற பசும் புண்ணுடன் வந்துநின்ற அவன் கண்களின் சினத்தோற்றம் மாறவில்லை. 'சிறுவனை நோக்கியுஞ் சிவப்பானாவே' என வருந்தும் ஔவையார், அதே நேரத்தில் அதிகனின் வலிமையையும் நினைந்து, 'உய்ந்தனர் அல்லர் இவன் உடற்றியோரே' என்றும் பாடுகின்றார்.

**முனைசுட வெழுந்த மங்குன் மாப்புகை**
**மலைசூழ் மஞ்சின் மழகளிறு அணியும்**
**பகைப்புலத் தோனே பல்வேல் அஞ்சி.**

(புறம்-103)

என உரைக்கும் புறப்பாட்டடிகள், இவன் இடையறாது போரின்கண் ஈடுபட்டு விளங்கியிருந்தனன் என்பதனையே நமக்குக் காட்டுவனவாகும். எனினும், பகையழிப்பதில் அத்தகைய சினமுடன் கொதித்தெழுகின்ற இயல்பினன் ஆயினும், தன்னை வந்து இரந்துநின்ற இரவலர்க்கும் பாடி வந்த பரிசிலர்க்கும் வரையாது வழங்கிய வள்ளியோனாகவும் அதிகமான் விளங்கிவந்தனன்.

**'அலத்தற் காலை யாயினும்**
**புரத்தல் வல்லன் வாழ்கவன் தாளே!**

(புறம்-104)

'உலகமே பஞ்சத்தால் வருந்தி வாடிக்கிடக்கின்ற ஒருந்தாயக் காலத்தினுங்கூடத் தன்னை வந்தடைந்த வறியவரைப் புரத்தற்கு வல்லன்' என்கின்றனர் ஔவையார்.

அவனுடைய இருநிலை உள்ளத்தின் ஏற்றத்தை இச் செய்யுளால் நாம் அறியலாம்.

அஞ்சியின் இந்தப் போர்வெறிக்கு யாது காரணம்? அந்நாளிலே சிதறுண்டுகிடந்த சிறுசிறு நிலப்பகுதிகளும், அவற்றையாண்ட குறுநில வேந்தரும், அமைதி பேணி வாழ்வதைக் காட்டினும் போர் மறத்தால் வாழ்வதையே தம்முடைய குறிக்கோளாகவும் தம்முடைய இயல்பாகவும் கொண்டிருந்தனர். அதிகமான் இளம்பருவத்திலேயே இவர்களுட் பலரின் பகைமைக்கு இலக்காகி விட்டான். 'இளைஞன்; இவனை அழித்துவிடுதல் எளிது' எனக் கருதிப் பகைவர் சூழ்ந்ததும், அவரை இவன் எதிர்த்து நின்று போரிட்டதும், இவன்பால் திண்ணிய போர் வெறியைக் கிளர்ந்தெழச் செய்திருத்தல் வேண்டும்.

வயதால் இளைஞனாயினும், பயிற்சியாலும், வலிமையாலும், போர்க்கலைத் தேர்ச்சியினாலும் அதிகமான் சிறந்தே விளங்கியிருந்தனன். இதனை உரைக்கும் ஔவையார்,

**போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை**
**ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்**
**நாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்**
**ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை**
**நுண்பல் கருமம் நினையாது**
**இளையனென்று இகழிற் பெறலரிது ஆடே.**

(புறம்-104)

என்று, அவன் படைஞருக்கு உரைக்கின்றனர். பகைவர் பலரும் தம் மன்னன் இளையன் என்று கருதி வந்து சூழ்கின்றனர்; படைமறவர் பலரும் அங்ஙனமே கருது கின்றனர்; இதனால் அவரைக் கவலை சூழ்கின்றது; 'இவன் நமக்கு வெற்றி தேடித் தருவானோ?' என்று கவலை கொள்ளுகின்றனர். அவர்களது எண்ணத்தை மாற்றுமுகத்தான் 'இவனை இளையவன் என்று உருவை

நோக்கிக் கருதிச் சோர்ந்துவிடாதீர்; இவனுடைய நுண்ணிய பல கருமத்தையும் நினையுங்கள்; இவன் வன்மை உங்கட்குப் புலப்படும்; அந்த நினைவோடு பகைவரை எதிர்த்துநின்றால் வெற்றியும் உங்கட்கே யாகும்' என்று ஔவையார் கூறுகின்றனர்.

அதிகமானின் போர்வன்மை பெரிது என்பதற்கு இவ்வாறு பற்பல செய்யுட்களும் சான்று பகர்ந்து நிற்கின்றன. இடையறாது போரின்கண் ஈடுபட்ட இவனது செயலது சிறப்பினை மற்றொரு சமயம் ஔவையார் மிகவும் தெளிவாகவே கூறிப் போற்றுகின்றார்.

தொண்டைமான் அதிகன்மீது பகைகொண்டு அவனை ஒழிப்பது கருதிப் படைதிரட்டி இருந்தான். இதனையறிந்த ஔவையார் அவனுக்கு அறிவுகொளுத்து தலைக் கருதினவராக, அவன்பாற் செல்லுகின்றார்.

அவரது புலமைக்கு மதிப்பளித்து அவரை வரவேற்றுப் போற்றினாலும், தொண்டைமானின் உள்ளத்திலே அவர் அதிகமானுக்கு வேண்டியவர் என்ற நினைவும் நிரம்பியே இருந்தது. 'தன்னைப் பகைத்தால் அதிகன் அழிவெய்துதல் உறுதியென்பதை' அறிவிக்க நினைக்கின்றான் அவன். ஔவையாரை அழைத்துச் சென்று தனது படைக்கலக் கொட்டிலைக் காட்டுகின்றான். அவனது எண்ணத்தைப் புரிந்துகொண்டனர் ஔவையார்.

''தொண்டைமானே! நின் படைக்கலங்கள் மிகமிக அழகியன! பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டு, உடலிடம் திரண்ட அழகிய காம்பை அழகுபடச் செய்யப்பட்டு, நெய்யிடப்பட்டுக், காவலையுடைய அகன்ற அரண்மனையிடத்தாக உள்ளன.

''ஆனால், அதிகமானின் படைக்கலங்களைப் பற்றி நீ அறியமாட்டாய். அவைதாம் பகைவரைக் குத்துதலால்

தம் கங்கும் நுனியும் சிதைந்தவையாய்க், கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தனவாகவே எந்நாளும் விளங்குகின்றன.

"செல்வம் உண்டாயின் உணவுகொடுத்தும், இல்லையானால் உள்ளதனைப் பலரோடும் படுத்துண்டும், வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனாகியவன் எம்முடைய வேந்தன். அவனுடைய கூரிய நுனியுடைய வேலின் தகைமை இதுதான்."

ஔவையாரின் சொற்கள் தொண்டைமானைச் சிந்திக்கத் தூண்டுகின்றன, தன் போர்முயற்சி பலன் தராது என்று உணர்வதற்கு அவனுக்கு நெடுநேரம் பிடிக்கவில்லை. ஔவையாரின் சொற்கள் உண்மையானவை என உணர்ந்த அவன், அந்நிலையே தன் படையெழுச்சிக் கருத்தினைக் கைவிட்டுவிடுகின்றான். அதிகனோடு நட்புக்கொள்ள நினைக்கின்றான். அதற்கு ஔவையாரே உதவுகின்றனர். இந்தச் செய்தியைக் கூறும் ஔவையார்,

இவ்வே, பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து
கடியுடை வியனகர் அவ்வே; அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணலெங் கோமகன் வைந்துதி வேலே.

என்கின்றனர். (புறம்-95)

ஔவையார்பால் அதிகனுக்கிருந்த அன்பின் எல்லையைக் காட்டுவது, அவன் அரிதிற்பெற்றதும் நெடுநாள் வாழச் செய்வதுமான நெல்லிக்கனியைத் தானுண்ணா

தும், அதனைத் தருங்கால் உண்மையுணரின் ஒளவையார் ஏற்கார் எனக் கருதியும், அதனை முதற்கண் அவருக்கு உண்ணக் கொடுத்து, அவர் உண்டதன் பின்னரே அது பற்றிய சிறப்பினைக் கூறி அவரைத் திகைப்படையச் செய்த பெருஞ்செயல் ஆகும்.

இதனை வியந்து போற்றும் ஒளவையார் :

**வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல்தொடி தடக்கை**
**ஆர்கலி நறவின் அதியர் கோமான்**
**போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி**
**பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி**
**நீல மணிமிடற் றொருவன் போல**
**மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்**
**பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா**
**தாத னின்னகத் தடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கீந் தனையே.** (புறம்-93)

என வாய்குளிர வாழ்த்திப் பாடுகின்றனர்.

இங்ஙனமாகப் பெரும்புகழுடன் திகழ்ந்த அதிகமான், சேரரின், அதுவும் தன் குடியினரின் பொறாமைக்கும் பகைமைக்கும் உள்ளானதில் வியப்பேதும் இல்லை. சேரரின் நேர்குடியினனான இரும்பொறை தன்னுடைய மேலாட்சியை அதிகன் ஏற்கவேண்டும் எனக் கருதியதும், அதிகன் அதற்கிசையாது தன் நாட்டைக் காத்துநின்று உயிர்விட்டதும், தமிழக வரலாற்றில் ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும். போர்மறத்தின் மாண்பினாலே செம்மாந்து நின்ற தமிழ்வேந்தர்கள், தம்முள் தாமே போரிட்டு மாய்ந்த நிலைமையை நினைக்கும்போது, உண்மையாகவே நாம் வருந்தாமலிருக்க இயலவில்லை.

இந்திய வரலாற்றின்கண், இதேபோன்று நாம் காணும் மற்றோர் இனத்தவரான இராசபுத்திரர்களையும்

இவ்விடத்தில் நினைவு கூர்தல் வேண்டும். ஒரு நாட்டின் நிரந்தரமான புகழுக்கு இத்தகைய உள்நாட்டுப் பூசல்கள் எத்துணை இழுக்கினைத் தந்துவிடுகின்றன என்பதற்கு இராசபுத்திரரின் வீழ்ச்சி நல்ல சான்றாக எடுத்துக் காட்டப்படும். அதே நிலையில்தான், தமிழகத்தவரின் மறமாண்பினையும் நாம் கருதி வருந்தி அமைய வேண்டிய தாக இருக்கின்றது.

பெரும்புகழால் சிறப்புற்ற குதிரைமலைக் கோமானான அதிகமானுக்குச் சேலம் மாவட்டத்தே சிறந்ததொரு நினைவுச்சின்னம் ஏற்பட வேண்டும். அதன் கண் அதிகனின் ஆற்றலும், அவன் அழிதற்குக் காரண மாகிய தகடூர்ப் பெரும்போரது குறிப்பும் பொறிக்கப்படல் வேண்டும். தமிழகத்தே ஒற்றுமை நிலவுதல் வேண்டும். தமிழர் ஒருவர்க்கொருவர் பகைமையும் காழ்ப்புங் கொண்டு மோதிக் கொண்டால், அது தமிழினத்தின் கேட்டுக்கே காரணமாகும் என்ற சிறந்த உண்மையினை என்றும் விளக்கிக் கூறும் சிறந்த நினைவுச் சின்னமாக அது விளங்கும்.

**'கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி**
**நல்லிசை நிறுத்த நயம்வரு பனுவல்**
**தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்**
**எண்ணுமுறை நிறுத்த பண்ணின் உள்ளும்**
**புதுவது புனைந்த திறத்தினும்'**

(அகம்-352)

என வரும் அஞ்சியத்தைமகள் நாகையாரது வாக்கும்,

**'நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி**
**கடுமுனை அலைந்த கொடுவில் ஆடவர்**
**ஆடுகொள் பூசலின் பாடுசிறந்து எறியும்**
**பெருந்துடி'**

(அகம்-372)

என வரும் பரணரின் வாக்கும். அதிகனின் பெருமைக்கு மேலும் சான்று பகர்வனவாகும்.

# 5. பாடிய சான்றோர்கள்

தகடூர் யாத்திரை, உரைநடையும் இடையிடையே செய்யுட்களுமாகப் புலவர்கள் பலராலும் பற்பல நிகழ்ச்சிகளைக் குறித்துப் பாடப்பெற்ற ஒரு நூலாகும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டினளவில் இந்த நூல் எழுந்ததாகலாம். ஏன் எனில், அதுவே தகடூர்ப்போரின் காலமாக அறிஞர்களால் கொள்ளப்பெற்றுள்ளது.

இந்த நூற்செய்யுட்கள் எனத் தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் காட்டுவனவற்றால், அரிசில் கிழாரும் பொன்முடியாரும் பல செய்யுட்களைச் செய்ததாக அறிகின்றோம். ஔவையார் பாடியவாக விளங்கும் புறநானூற்றுச் செய்யுட்கள் பலவற்றையும் நோக்கும் போது தகடூர் யாத்திரையின் செய்யுட்களாக இவற்றுள் சிலவும் விளங்கியிருக்கலாமோ என்ற ஐயம் நமக்கு ஏற்படாமல் இல்லை. இந்த மூவரின் வரலாற்றுக் குறிப்புக்களைச் சிறிதளவு இப் பகுதியில் அறிந்து கொள்ளுதற்கு நாம் முயல்வோம்.

### அரிசில்கிழார்

அந்நாளில், கொள்ளிடத்தின் வடபால், கும்பகோணத்திற்கு அண்மையில், அரிசிலாறு பிரியும் இடத்தில் 'அரிசிலூர்' என்றொரு ஊர் இருந்தது. இவ்வூரிடத்து வேளாண்குடியில் பிறந்தவர் இவர். இவருடைய புலமையது புகழ் பரவுதற்குத் தொடங்கிய பின்னர், இவரது இயற்பெயர் மறைந்து, அரிசில்கிழார் என்னும் ஊர்ப் பெயரே நிலைபெறலாயிற்று.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய பேகனை, அவன் மனைவி பொருட்டாகப் பாடிய புலவர்களுள் இவரும் ஒருவர். ஆதலால், இவரைக் கபிலர், பரணர், பெருங்குன்றூர்க்கிழார். பொன்முடியார் ஆகிய சான்றோர்களின் காலத்தவர் எனலாம்.

பேகனைப் பாடியபோது, அவன் செல்வக்குவை நல்கி இவரைப் பாராட்ட, அதனை ஏற்காது, எனக்குப் பரிசில் தருவதற்கு நினைத்தாயாகில், நின் மனைவியின் துயரைத் தீர்ப்பதற்கு இப்பொழுதே தேரேறிச் செல்வாயாக (புறம். 149) எனக் கூறுகின்ற இவரது சால்பினை நினைத்தால், இவரது செழுந்தமிழ்ச் சால்பினது சிறப்பும் புலனாகும்.

பெருஞ்சேரல் இரும்பொறைபால் அன்புற்று அவனுடன் இருந்தவர் எனினும், அதிகமானின் வீழ்ச்சியை எண்ணி வருந்திப் பாடிய இவரது செய்யுள், தமிழ்ச் சான்றோரின் உளமாண்பைக் காட்டும் தகைசிறந்த உயிரோவியம் ஆகும்.

**'விலங்கு பகை கடிந்த கலங்காச் செங்கோல்**
**வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாட்**
**பொய்யா எழினி'**

எனவுரைக்கின்ற இவரது மாண்புதான், எத்துணை உயர்வாக இலங்குகின்றது!

அண்ணன் போரில் முதல்நாள் இறந்தவனாக, அதனாற் சினங்கொண்டு அவன் தம்பி பிற்றைநாளில் வஞ்சினங்கூறிப் போக்கு எழுவதாக இவர் உரைக்கும் 300, 304 ஆவது புறநானூற்றுச் செய்யுட்கள், படைமறவரின் மறமாண்பிற்குத் தக்க சான்றாக நிலவுவன.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பதிற்றுப்பத்துள் எட்டாம் பத்தாற் பாடி, அவன் புகழை

நிலைபெறச் செய்தவரும் இவரே! அதற்கு அவன் கோயிலாளுடன் புறம் போந்து நின்று கோயிற்கண் உளவெல்லாம் கொள்கவென்று கூறி, ஒன்பது நூறாயிரம் பொன்னையும் அரசு கட்டிலையும் அளிக்க, அதனைப் பெறாது, அவனை இரந்து வேண்டி ஆள்க என அமைச்சுப்பூண்ட செவ்வியரும் இவர் ஆவர் என்று அறிதல் வேண்டும்.

**பொன் முடியார்**

இவர், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலத்தவர். மறக்குடி முதியோரின் கூற்றாக இவர் பாடிய,

**ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே**
**சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!**

என்னும் புறப்பாட்டு (312), தமிழ்நாட்டின் கடமையுணர்வைக் காட்டும் சிறந்த செய்யுள் ஆகும்.

**பருத்தி வேலிச் சீறூர் மன்னன்**
**உழுத்ததர் உண்ட ஓய்நடைப் புரவி**
**கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ**
**நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்திற்**
**றண்ணடை மன்னர் தாருடைப் புரவி**
**அணங்குடை முருகன் கோட்டத்துக்**
**கலந்தொடா மகளின் இகழ்ந்துநின் றவ்வே.**

(புறம்-299)

என உரைக்கும் இவரது பாடல், தறுகண்மையுடன் சேரப் பெரும்படையை ஊடுருவிச்சென்ற அதிகமானின் குதிரை

மறத்தைப் போற்றுவதாக இருக்கலாம் போலும்! குதிரையின் அழகினைக்காட்டிலும் அதன் மறமாண்பே சிறந்தது என்று உரைக்கின்ற இச் செய்யுள், உருவப் பொலிவினும் ஒருவரது செயற்கரிய செய்யும் திறப்பாடே போற்றுதற்குரியதெனக் காட்டுவதாகும்.

இவரது, 'கார்த்தரும் புலனென' எனத் தொடங்கும் தகடூர் யாத்திரைப் பாட்டும், 'கலையெனப் பாய்ந்த மாவும்' என்னும் தகடூர் யாத்திரைப் பாட்டும், இவர் தகடூர்ப் பெரும் போர்க்காலத்து அரிசில்கிழாருடன், சேரமானது பாசறைக்கண் இருந்தவர் என்பதனைக் காட்டுவனவாகும்.

**ஔவையார்**

பாணர் குடியினரான இவர் அதிகமானிடம் பேரன்பு உடையவராக, அவன் அரசவைக்கண் நெடுநாள் வீற்றிருந்து, அவனையும், அவன் மகன் பொகுட்டெழினியையும் பாடியவர். இவராற் பாடப்பெற்ற பிறர், நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோராவர். இதனால், தகடூர் யாத்திரைக் காலத்தே இவர்கள் தமிழகத்தில் வீற்றிருந்த பிற மன்னர்கள் என நாம் அறிகின்றோம்.

அதிகனின் சார்பாகப் பகைமன்னர்பால் பலமுறை இவர் தூதுரைத்துச் சென்ற செய்திகளை, அதிகமான் வரலாற்றிற் கண்டோம்.

சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரைக் கண்டு உவந்து பாடிய சிறப்பினர் இவர் (புறம்;367). இந்த ஒருமை என்றும் நிலவியிருந்தால், எவ்வளவு சிறப்

புடன் தமிழக வரலாறு விளங்கியிருக்கும் என நம்மை நினைக்கத் தூண்டுகின்ற செய்யுள் அது. இது, உக்கிரப் பெருவழுதி கானப் பேரெயில் வேங்கை மார்பனை வென்று, மதுரை நகர்க்கண் கொண்டாடிய வெற்றி விழாவின்போது எனக் கருதப்படுவதனால், ஔவையார் அதுசமயம் மதுரை நகர்க்கண் சென்றிருந்தனர் ஆதலும் வேண்டும்.

நாஞ்சில் வள்ளுவனையும், தொண்டைமானையும் பாடியுள்ள இவரைத், தமிழகம் முழுமையும் சென்று, வேந்தர் பலரானும் பாராட்டப் பெற்று விளங்கிய சான்றோர் எனக் கருதலாம்.

வரலாற்றுக் குறிப்புக்கள் பற்றிய செய்திகளை இந்த அளவில் நிறுத்திக் கொண்டு, இனித் தகடூர் யாத்திரைச் செய்யுட்களாக நிலவுவனவற்றைப் பற்றி அறிவதற்குச் செல்வோமாக.

# தகடூர் யாத்திரைச் செய்யுட்கள்

# 1. வெண்மையும் ஒண்மையும்

'வெண்மை' எனப்படுவது அறிவு முதிராமையோடு விளங்கும் ஒரு தன்மையாகும். 'ஒண்மை' என்பது அறிவு முதிர்ச்சியைக் குறிப்பது. அறிவு முதிராமை, முதிர்ச்சி என்னும் இத் தன்மைகளையொட்டி மக்களை வெண்மையர் எனவும் ஒண்மையர் எனவும் ஆன்றோர் பகுத்து உரைப்பார்கள்.

**'வெண்மை' எனப்படுவது யாதெனின்? ஒண்மை**
**உடையம்யாம் என்னும் செருக்கு.**

என்று கூறுகின்றது திருக்குறள் (844). 'புல்லறிவு உடைமை என்பது யாதென்றால், யாம் நல்லறிவுடையோம் எனத் தம்மைத்தாமே நன்கு மதிக்கும் மயக்கம்' என்பது இதன் பொருள்.

இதேபோல, ஒரு நூலைச் செய்யும் சான்றோர்க்கு, அதனைத் தாம் வியத்தற்குரிய சிறப்பினதாகச் செய்தோம் என்னும் செருக்கு ஒருபோதும் ஏற்படுவதில்லை. ஆனால், புல்லறிவினர்க்கோ இந்த மயக்கமே மிகுதியாக இருக்கும்.

"தாம் செய்து முடித்த ஒன்று வியந்து பாராட்டுதற்குரிய ஒன்று அல்லவென்றாலும், அறியாமை உடையவர்கள், தம்மைத் தாமே வியந்துகொள்வது போல, தம் செயலின் முயற்சிகளை எல்லாம் வியந்து பேசிக்கொண்டு இனிமை அடைவார்கள்."

ஆனால், அறிவு முதிராமை எனப்படும் வெண்மையினின்றும் முற்றவும் தீர்ந்தவரான மெய்யறிவினரோ, அங்ஙனம் தம்மை என்றும் வியந்து உரைப்பதிலர்; பிறர்

செயறகண் வியத்தற்குரியன காணும்போதுதான் அதனை வியத்தற்குரிதாகக் கூறி வியந்து பாராட்டுவார்கள்.

ஆகவே, தாம் செய்த செய்யுட்களையும், சான்றோர் ஏற்றுத் தம்மைப் பாராட்டுதல் வேண்டும் என விரும்புகின்றார் ஆசிரியர். இந்த முறையிலே அறிஞருலகினை வேண்டுபவராக, அவையடக்கம் உரைக்கின்றார்.

**வியத்தக்க காணுங்கால் வெண்மையில் தீர்ந்தார்**
**வியத்தக்க தாக வியப்பர்—வியத்தக்க**
**அல்ல வெனினும் அறியாதார் தாம்போல**
**எல்லாம் வியப்பர் இனிது.**

(புறத்-10)

புறத்திரட்டுள் 'அவையடக்கம்' என்னும் பகுதியுள் சேர்க்கப்பட்டிருக்கும் தகடூர் யாத்திரைச் செய்யுள் இதுவாகும்.

'வெண்மையில் தீர்ந்தார், வியத்தக்க காணுங்கால் வியத்தக்கதாக வியப்பர்: வியத்தக்க அல்லவெனினும், தாம் அறியாதார்போல அமைந்தவராய், எல்லாவற்றையும் இனிதாக வியந்து பாராட்டுவதும் அவர் இயல்பாம்' எனவும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

சான்றோர், பிறரது செய்யுட்களுள் காணப்படும் குறைகளைப் பாராட்டது, நிறைவுகளை மட்டுமே கண்டு பாராட்டி வியந்து பேசுவார்கள்' என உரைத்து அவையடக்கம் கூறுகிறது இச் செய்யுள்.

இச் செய்யுளின் முதலடி, 'வியத்தக்க காணுங்கால் வெம்மையில் தீர்ந்தார்' எனவும் வழங்கும். 'வெம்மை' என்பதனைப் பிறர்பாற் பொறாமை கொண்டு பழித்தலாகிய தன்மை எனப் பொருள்கொண்டு உரைத்தல் வேண்டும்.

## 2. நீத்தார் பெருமை

உலகப் பற்றுக்களை விட்டுத் தம்மைக் கட்டுப்படுத்தி வாழ்கின்ற சான்றோர்கள் பெரிதும் பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவர்.

பெருஞ்சேரல் இரும்பொறை, ஒரு சமயம், உயர் நிலை உலகம் புகுந்த சான்றோர்களின் பொருட்டாக வேள்வியொன்று செய்தனன். அந்த வேள்வியிற் கலந்து கொண்டு பயன்பெறுவது கருதியவராக இரு பிறப்பாளர் கள் பலரும் கொங்குவஞ்சிக்கண் ஒன்று திரண்டனர்.

அவர்களுட் பலரும், வளமான உடலினராகவும் உடையினராகவும் விளங்க, ஒருவர் மட்டும் மிகவும் எளி மையான தோற்றத்துடன் விளங்கினர். அவையிடத் திருந்த பலரும் அவரைக் கண்டு நகையாடி ஒதுங்கி அவர் பால் தமக்குள்ள வெறுப்பினைக் காட்டியவண்ணம் இருந்தனர்.

வேள்வி இனிதாக இயற்றிய பின்னர்ச் சேரமான் இரு பிறப்பாளர்கட்கு வேண்டுவன வழங்கிச் சிறப்பிக்கத் தொடங்கினான். அப்போது, அவன் அருகிருந்த அரிசில் கிழார், அவர்களுள் எளிமைத் தோற்றத்துடன் விளங்கிய அந்தணாளரின் உண்மையான செவ்வியை உணர்ந்த வராக, முதற்கண் அவரைச் சென்று சிறப்பிக்குமாறு பெருஞ்சேரலிடம் கூறுகின்றனர்.

''கிழிந்து நைந்து போயின பழங் கந்தையினைத்தான் உடுத்திருக்கின்றனர். மிகவும் இழிந்த தன்மையினை உடையவரைப் போலப் பிச்சையேற்று உண்டும் திரிகின் றனர்.

''ஆனால், இவர் தம்முடைய அறிவின் பெருக்கத் தால் நூற்றிதழ்த் தாமரையைப் போன்ற சிறப்பினை உடையவராவர்.

"தாம் உண்பதாயின், முதற்கண் அவ்வுணவின் ஒரு பகுதியைச் செந்தீயின்கண் அவியாகப் பெய்து, அதன் பின்னரே உண்கின்ற தன்மையர் இவர்.

"தீயவைகளான இச்சைகளை எல்லாம் அவற்றைச் செலுத்தும் முறைமையறிந்து செலுத்தியவராக, அவற்றை முற்றவும் நீக்கிவிட்ட தோற்றத்தினையும் கொண்டிருப்பவர்.

"ஒளி சிதறும் பூவினையுடைய முருக்கமரத்தினது கொம்பினைத் தோலினை உரித்து நீக்கிவிட்டு, அதனைத் தம்முடைய கைக்கோலாகக் கொண்டிருப்பவர் இவர்.

"துவர்நிறம் மிகுந்த ஆடையினை உடையவர்; பாடினராயின் அரிதான மறையினையே பாடுகின்ற தன்மையர்.

"நெடிது நிலைபெறுதலற்ற தம் உருவத்தையும்' தமக்குத் தாமே உரிமையுடையதாகக் கொண்டிருப்பவர் இவர்.

"இத்தகைய தன்மையராகிய இருப்பிறப்பாளரான இச் சான்றோர்க்கே, முதற்கண் சிறப்புச் செய்தற்குப் பிறரினின்றும் நீங்கிச்சென்று முற்படுவாயாக."

கிழிந்த சிதாஅர் உடுத்தும்; இழிந்தார்போல்
ஏற்றிரந்து உண்டும்; பெருக்கத்து நூற்றிதழ்த்
தாமரை யன்ன சிறப்பினர்; தாமுண்ணின்
தீயூட்டி யுண்ணும் படிவத்தர்; தீயவை
ஆற்றுழி யாற்றிக் கழுவுபு தோற்றம்;
அவிர் முருக்கந் தோலுரித்த கோலர்; துவர்மன்னும்
ஆடையர்; பாடின் அருமறையர்; நீடின்
உருவந் தமக்குத்தா மாய
இருபிறப் பாளர்க்கு ஒருஉகமா தீதே

(புறத்: 19)

சிதா அர்-சீரை. நீனிறச் சிதர் அர் களைந்து (புறம் 385 கல்லாடனார்); தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கி (புறம் 393 நல்லிறையனார்); துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைப் புகைவிரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ (புறம் 398 திருத்தாமனார்); என்பவற்றும் இதே பொருள்படச் 'சிதாஅர்' வருதலைக் காணலாம்.

'ஏற்றிரந்து உண்டல்' துறவுநிலையின் தன்மை.

'நூற்றிதழ்த் தாமரை' தாமரையுள் சிறந்தது; மலருள் சிறந்தது தாமரை; அதனுள்ளும் சிறந்தது நூற்றிதழ்த் தாமரை; அதைப் போன்ற சிறப்பினர் எனவே, மிகவும் சிறப்பான துறவுநிலையினைக் கொண்டவர் என்பதாம்.

'தீயவை ஆற்றுழி ஆற்றி' என்பதற்கு முத்தீ வகை களையும் முறைப்படி பேணிச் செய்யும் கடமைகளைச் செய்து எனலும் பொருந்துவதாம்.

'துவர்'—கருஞ்சிவப்பு நிறம்.

'உருவம் தமக்குத் தாம் ஆய' நிலையாவது, உடற் பற்றினின்றும் நீங்கி அதனைத் தம் கருத்தாற் கழித்தற்கும் சக்தியுடைய யோகநிலையினர் என்பதாம்.

'ஒரூஉகமாதீதே'- இதனைச் செய்தலைக் குறித்தே நீங்கிப் போக என்பது கருத்து.

இச்செய்யுளால், நீத்தாரது பெருமை கூறப்பெற்றது.

## 3. இரத்தலின் இழிவு!

இரத்தல் என்பது மிகவும் இழிவான ஒரு செயலாகத் தமிழ்ச்சான்றோரால் ஒதுக்கப்படும். இதன் இழிதகைமை யையும் உணர்ந்து, அதனையும் மேற்கொள்ள ஒருவர்

துணிந்தனர் என்றால், அவரது நிலைமை மிகவும் வருந்து தற்கே உரியதாகும். அங்ஙனம் வந்து இரந்தவர்க்கு மனமுவந்து ஈவதுதான் மனிதரின் கடமை எனப்படும்.

நூற்றுவர் இல்லங்களுள் சென்று தோன்றி இரந்து நிற்கும் துணிவுடையவர்க்கு ஒருபோதும் பசிக் கவலை கிடையாது. அத்தகைவர் ஆயிரம் பேர் திரண்டிருந்து ஒரு செயலைச் செய்வதற்குக் கூடியிருக்கும் அவையிடத் தாயினும், அவர்தம் பசிக்கு மாற்றந்தரும் ஒரு பொருளை உவந்து கொடுக்கின்ற மகன் ஒருவன் நாட்டிடத்தே தோன்றாமற் போகான். ஆகவே, அவர் உணவிற்குக் கவலைப்படுதல் வேண்டாம் என்பதும் மெய்தான்.

என்றாலும்,பரந்த கடலாற் சூழப்பெற்ற உலகிடத்து ஒழுக்கம் அனைத்தையும் முற்றவும் ஆராய்ந்தாலும், ஒன்று மட்டும் தெளிவாகும். அது 'இரந்துண்பாரை இழிவாகக் கருதாத ஒருவன் எவனுமில்லை' என்பதுதான். இதனால் இரத்தல் மிகவும் இழிந்த தென்பது நன்கு உணரப்படும்.

நூற்றிவரிற் றோன்றும் தறுகண்ணர் ஆயிரவர்
ஆற்றுளித் தொக்க அவையகத்து மாற்றமொன்று
ஆற்றக் கொடுக்கு மகன்தோன்றுந் தேற்றப்
பரப்புநீர் வையகந் தேரினும் இல்லை
இரப்பாரை எள்ளா மகன். (புறத்:227)

'இரப்பாரை எள்ளா மகன் இல்லை' எனக் கூறி ஈகையின் கடமை வலியுறுத்தப்பட்டது.

'நூற்றுவரில் தோன்றும் தறுகண்ணர்' எனவே, அவரது பெரும் பசியது தன்மையும் கூறப்பட்டது. 'அத்தகையவர் ஆற்றுளித் தொக்க அவையகத்து மாற்ற மொன்று ஆற்றக் கொடுக்கும் மகன்தோன்றும்' எனவே அத்தகையானின் பெரிதான வள்ளன்மையும் கூறப் பட்டது.

சேரமானின் உணவுக் கொடையை வியந்து கூறியது இதுவென்று கொள்க.

அன்றி, அதிகனிடம், 'நீ பெருஞ்சேரலிடம் சென்று பணிந்து நின்று. நின் தகடூர் நாட்டை நினக்குத் திறையின்றித் தந்தருள இரந்து கேட்பின், அவன் உவப்புடன் நல்குவன்' என்று சொன்னவருக்கு, அவன் இரந்து நிற்றலின் இழிவை உரைத்து அதனை மறுத்தது எனவும் கொள்ளலாம்.

## 4. செங்கோன்மை

தமிழகத்தில் மன்னரசு அந்நாளில் நிலவியது என்றாலும், அந்த அரசு இன்னின்னபடி நிலவுதல் வேண்டுமென்கின்ற விதிமுறைகளும் இருந்தன. அவ்விதிகளுக்கு ஏற்ப விளங்கிய அரசு செங்கோன்மை கொண்டதெனவும், மாறுபட்டது கொடுங்கோன்மை உடையதெனவும் சொல்லப்பட்டன.

அவற்றுள் செங்கோன்மைபற்றிய இரண்டு தகடூர் யாத்திரைச் செய்யுட்கள், புறத்திரட்டுள் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று இது.

சேரமான் தகடூர்ப் போருக்கு எழுகவென்று ஆணை பிறப்பித்து விட்டான். தகடூர் மன்னன் பெருவலிமையும் மறமாண்பும் உடையவன் என்பதை அறிவானாகவே, சேரமான் பெரும்படை ஒன்றைக் கொண்டு செல்லுதலையே விரும்பினான்.

போர்க்குரிய எல்லை தொலைவிடத்து ஆதலாலும், போர் கடுமையாக நிகழ்தல் கூடும் என்பதை அறிந்தமையாலும், சேரமானுக்குத் தான் விரும்பிய அளவிற்குப் படை திரளுமோ திரளாதோ என்ற கவலையும் ஏற்படத் தொடங்கியது.

அதனைக் குறிப்பிட்டு அவன் உரையாடியபோது, அருகிருந்த சான்றோருள் ஒருவர் கூறியது இது.

"அரசே! அறநெறி வழுவாத செங்கோன்மை யினாலே, ஆர்வமும் செற்றமும் கொண்டு முறைபிறழ்த லின்றும் தன்னை விலக்கிக் கொண்டு, யாவர்மாட்டும் துன்பந்தருவன செய்தலை விரும்பாத மாறுபாட்டைக் கொண்ட வேலினைக் கைக்கொண்ட மறமன்னர்களது சிறப்பினை, நீயும் அறிவாய் அல்லவோ!

"அத்தகையர், பகைவர்க்கு எதிராக உயர்ந்த படை யெழுச்சியானது, படைவீரர்களால் மிக்குப் பெருகியதாக விளங்கிப் புகழ்பெறுவதாக அமையுமே அல்லாமல், தம் சிறப்பினின்றும்குன்றிப் போவது என்பதும் உளதாகுமோ?

"ஆகாதாதலின், நின் கவலையை விட்டருள்க" என்று அச்சான்றோர் உறுதியுரை கூறுகின்றனர்.

**இறப்பப் பெருகி இசைபடுவ தல்லாற்**
**சிறப்பிற் சிறுகுவ துண்டோ, அறக்கோலால்**
**ஆர்வமும் செற்றமும் நீக்கிமற் றியார்கண்ணும்**
**இன்னாத வேண்டா இகல்வேல் மறமன்னர்**
**ஒன்னார்க் குயர்த்த படை** (புறத்: 666)

இறப்ப-மிகுதியாக. இசைபடுவது - புகழ்பெறுவது. அறக்கோல்-செங்கோல் இகல்-மாறுபாடு. மறமன்னர்-மறமாண்பினரான மன்னர். ஒன்னார்-பகைவர். அவர்க்கு உயர்த்த படையாவது, அவரை ஒழித்தலைக் கருதி உயர்த்த வேற்படை.

## 5. அரசிற் பிறத்தல்

'தன் செங்கோன்மை வழுவாத சிறப்பினால் தனக்கு மிகுதியான படைவலு உண்டாகும்' என்ற சான்றோரின் சொற்களைக் கேட்டதும், சேரமான் புன்முறுவலுடன் கூறுகின்றான்.

அறம் புரிந்தன் றம்ம அரசிற் பிறத்தல்
துறந்த தொடர்பொடு துன்னிய கேண்மை
சிறந்தார்க்கும் பாடு செயலீயார் தத்தம்
பிறந்தவேல் வென்றிப் பொருட்டு. (புறத் : 668)

''சான்றோரே!

''தாங்கள் சொல்வது தங்களளவில் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், அரச குடியில் வந்து பிறத்தல் என்பது, முன் செய்த அறத்தின் பயனாக அமைவது என்பார்களே, அது உண்மையன்று.

விட்டுப்போகிய தொடர்புடைய பலரோடும் செறிந்த நட்புறவு மேற்கொள்வதற்கும் முடியவில்லை. சிறந்த தன்மையுடைய சான்றோர்க்குக் கொடுத்து உதவி செய்து விளங்குதற்கும் இயலவில்லை.

''தங்கள் தங்கள் பிறந்த குடியின் புகழைக் கருதித் தத்தம் வேலாற்றலால் வென்றிபெறுவதன் பொருட்டாக மட்டுமே வேந்தர்களாகப் பிறந்துள்ளோம்'' என்கின்றான் அவன்.

படையெழுச்சி என்பது அறத்தொடு பட்டதே ஆயினும், தன் குடியினனான அதிகனை அழிப்பதற்குச் செல்லுகின்ற போது, சேரலனின் உள்ளம் அதனை விரும்பாது வேதனைப் படுகின்றது. அறம் புரிந்தவர் உயர்நிலை உலகம் புகுவர் என்பதும், பிறவாப் பெருநிலை பெறுவர் என்பதும் சான்றோர் கூற்றுக்களாக, இப்படிப் பிறந்து வேலாற்றல் காட்டி வெற்றி பெறுவதன் பொருட்டாகச் செயலாற்றிக் கவலையுறுகின்ற பிறப்போ அமைதல் வேண்டும், என்று கலங்குகின்றான் அவன். இதனால், அரசப் பிறப்பு 'அறம்புரிந்ததன் பயன் அன்று; முற் செய்த வினைப் பயனே காண்' என்று கூறியும் துயருறுகின்றான்.

அதிகன் இவன் குடியினன். இருந்தும், தொடர்பு விட்டுப் போயதும், அவனை அழித்ததற்குப் பொருந்திய புதுநட்பினரைக் கொண்டு மேற்செல்லுமாறு நேர்ந்ததும், சேரமானை வாட்டுகின்றன. தன் மனைவி மக்கட்கும் மற்றும் சிறந்தாரான சான்றோர்கட்கும் செய்தற்குரிய கடமைகளைச் செய்யாது போர்மேற்கொண்டு போதலை அவன் உள்ளம் இனிதெனக் கொள்ளவில்லை.

தத்தம் படையாக வடித்துக்கொண்ட வேலினுக்கு வெற்றி தேடுவதன் பொருட்டாகச் சென்று, உறவினரையும் பிறரையும் அழித்தலை அவன் மனம் மிகவும் துயரத்தோடுதான் ஏற்கின்றது. அந்த நிலையிலே, அவனுடைய அரசப் பிறப்புங்கூட அவனால் வெறுக்கப்படுகின்றது.

தமிழ் முழுதுணர்ந்த சேரமானின் உள்ளச் செவ்வியிலே, மறநெறி மாண்பைப் பெறுவதினும் காட்டில், அறநெறி பெருக்கிச் சிறப்பெய்துகின்ற ஆண்மைச் செவ்வியே மேலெழுந்து விளங்கக் காண்கின்றோம்.

இந்த நிலை பாரதப் போர்க்களத்துள் அருச்சுனன் நின்று கவலையுற்றுச் சேர்ந்த நிலைக்கு ஒப்பாகும். 'இவர்கள் பலரும் உறவினரும் நட்பினரும் மற்றும் அன்பினரும் ஆவர். இவரைக் கொன்று பெறும் வெற்றி எனக்கு வேண்டுவதில்லை' எனச் சொல்லித் தளருகின்ற அருச்சுனனுக்கு ஒப்பாகவே, அதிகன்பாற் போர்க்கு எழுகின்ற சேரலனும் வருத்தமுறுகின்றான். இதனை நாம் அறிந்து போற்றல் வேண்டும்.

## 6. புல்லலின் ஊடல் இனிது

தகடூர் அதிகமானின் அளவிறந்த பெரும் புகழையும், பெருந்தன்மையையும், பேராண்மையையும் நன்றாக உணர்ந்து, தன் குடியினருள் ஒருவன் அத்தகு சிறப்பினனாகத் திகழ்தலை எண்ணி ஒருபால் மகிழ்ச்சி கொண்ட

வனும் சேரமான் பெருஞ்சேரல் ஆவான். எனினும், அரசின் கடமை, தனக்கு உட்பட்ட நாடொன்று தன் மேலாட்சியை உதறித்தள்ளி நிமிர்ந்து நிற்கும்போது, அதனை வணக்கித் திறைகொள்ளும் கடனிற் செலுத்த, அதனை ஒதுக்க முடியாதும் அவன் கவலையுறுகின்றான்.

அவனுடைய மனநிலையை நன்குணர்ந்த சான்றோர் அரிசில் கிழார். ஆகவே, அவர் தாமே நேரிற் சென்று அதிகனைக் காண்பதாகவும், நிலைமையை விளக்கி அவனை நெறிப்படுத்த முயல்வதாகவும் கூறச் சேர மானும் அவரது முயற்சிக்கு ஆதரவு தருகின்றான்.

தகடூர் சென்ற அரிசில்கிழாரை அதிகமான் தமிழ்ச் சான்றோர் என்ற வகையில் உவப்புடன் வரவேற்று உபசரித்தனன் எனினும், அவனுடைய ஆண்மைப் பெருக்கம் சேரலனுக்குப் பணிந்து வாழ்வதற்கு இசைய மறுக்கின்றது. அவன், தன் நிலையில் உறுதியாகவே இருக்கின்றான்.

அரிசில்கிழார் ஔவையார் போன்ற அறிவுடைச் சான்றோர்களது உரைகள், அவனை ஒருவாறு தன்னை உணரச் செய்தபோதும், அவனுக்கு அணுக்கராயிருந்த அரசகருமத் தலைவர்கள் பலரும், சேரமானுக்குப் பணிவதினுங்காட்டில், அவனை எதிர்த்து அழிவதே சால்பெனப் பேசி உறுதியோடு அமைகின்றனர். அவர் களுடைய உறுதி இயல்பிலேயே மாவீரனாகிய அதிக மானையும் திண்மை கொள்ளச் செய்கின்றது.

அரிசில் கிழார் தம்முடைய முயற்சியிற் பயன் காணாதவராக வேதனையுடன் திரும்புகின்றனர். சேரல் அவரிடம் தூதின் முடிபை வினவ, அதனை யுரைத்து அமைகின்ற அவருள்ளம், தமக்குச் சார்பாக பேசிநின்ற அதிகனின் தேவியை அச்சமயத்திலே நினைக்கின்றது.

'அம்மையே! அதிகன் மாவீரன் எனினும், பெருஞ் சேரல் இரும்பொறையோடு பொருது வெற்றி கொள்ளும்

வாய்ப்பு இல்லாத குறுநில வேந்தன் என்பதனை மறந்து விடுகின்றனன். என் சொற்களின் பயனையும் உணர்ந்தா னில்லை. சொல்லுக்குச் சொல் வெல்லுஞ் சொல்லறிந்து சொல்லியும், பலரும் பழித்த சொற்களை விலக்கிச் சொல்லியும் அமைகின்றனனே அல்லாமல், எம்போல் தூய்மை சிறந்த நல்லநெறிக்கு இசைந்த உறுதியினைச் சொல்லக் கேட்டு நிற்பார்க்கு இனிதான இசைவினைச் சொல்வான் அல்லன்' எனக் கூறி நொந்துகொண்ட நிகழ்ச்சியையும், அதனைக் கேட்டதும் அதிகனின்தேவி தன் தோழிபால் தன் நிலையை வெறுத்துக் கூறிய சொற் களையும் அவர் நினைவு கூர்கின்றார்.

தன் கணவனின் நல்வாழ்விற் கவலைகொண்ட அந்தத் தேவியின் சொற்கள், அவரைப் பெரிதும் இரக்கங் கொள்ளச் செய்த அந்த நிலையையும் நினைக்கின்றார். அவர் கண்கள் நீரால் நிரம்புகின்றன.

'ஐயன்மீர்! நம் முயற்சி பலன் தரவில்லை. இனிப் போர்தான் செய்தற்குரியது. தாங்கள் கலங்குவதேன்?' என்கின்றான் சேரமான்.

அதிகனின் தேவி சொன்ன சொற்களை நினைவிற் கொண்டேன்; என் உள்ளத்தை விட்டு அகலாத அச் சொற்கள் என்னைக் கசிந்து உருகுமாறு செய்கின்றன என்றவர், அதனை அவனுக்கும் உரைக்கின்றார்.

**சொல்லுங்காற் சொல்லின் பயன்காணும்; தான்பிறர்**
**சொல்லிய சொல்லை வெலச்சொல்லும்:-பல்லார்**
**பழித்தசொல் தீண்டாமற் சொல்லும்; விழுத்தக்க**
**கேட்டார்க்கு இனியவாச் சொல்லானேல்-பூக்குழலாய்**
**நல்வயல் ஊரன் நறுஞ்சாந்து அணியகலம்**
**புல்லலின் ஊடல் இனிது.**

(புறத். 756)

'நம்மைப் பிரிந்து போர்மேற் கொண்டு செல்லல் வேண்டாவென ஒரு சிறந்த சொல்லைக் கேட்டுப் பணி

வுடன் நின்ற நமக்கு இனிமை தரும்படியாக, அதனைக் கருதிலோம் என்று அவன் சொன்னான் இல்லை. பூக்குழலாய்! நன்மைப் பொலிவுடைய வயல்வளத்தாற் சிறந்த அத்தகைய நம் ஊரனின், நறிய சாந்தணிந்த மார்பினைத் தழுவுதலைக் காட்டினும், அவனோடு ஊடியிருத்தல்தான் நமக்கு இனிது' எனத் தன் தோழிக்கு அவள் உரைத்தனள் என்று கொள்ளுக.

எனினும், அதிகனின் சொல்லாற்றலும் பண்பும் அவளால் மறக்கக்கூடியவாகவும் இல்லை.

''சொல்லுங்கால் சொல்லின் பயன் காணும் திறன் உடையவன் அவன்; தான் பிறர் சொல்லிய சொல்லை வெல்லும் திட்பத்துடன் சொல்லுதற்கும் அறிந்தவன் அவன்; பலரும் பழித்த சொற்குற்றங்களைச் சாராமற் படிக்குச் சொல்லாடலினும் வல்லவன் அவன்.''

என, அந்தச் சிறப்பையும் கூறி, விதியின் வலியை நினைந்து நொந்துகொள்ளுகின்றனள்.

அதனைக் கேட்டதும் பெருஞ்சேரலிரும்பொறையின் கண்கள் கலங்குகின்றன. கற்பின் பெருஞ்செல்வியான அந்தத் தேவியின் கலங்கிய முகத்தை நினைவு எடுத்துக் காட்ட, அவன் சோர்கின்றான். 'அந்த அம்மைக்கும் துயர் விளைக்குமாறு இப்படிப் போர் வந்து மூண்டதே!' எனக்கூறி, அவள் விதியை நினைந்து வேதனை கொள்ளு கின்றான்.

## 7. நூல்கண்டார் கண்ட நெறி

தகடூர் நாட்டிற்குத் திறைகேட்டுச் சென்ற தூதுவர்கள் பெருஞ்சேரல் இரும்பொறைபால் வந்து, அவர் திறைதர மறுத்த செய்தியைக் கூறுகின்றனர்.

பெருஞ்சேரல் சீற்றங் கொள்ளுகின்றான். உடனே தகடூர் நோக்கிப் படையெடுக்குமாறு ஆணை பிறப்பிக் கின்றான். அருகிருந்த அரிசில் கிழார் பொன்முடியார் போன்றோர் கவலையுறுகின்றனர்.

"காலனைப்போலச் சினந்து எழுகின்ற பொறை யனே!" யாம் சொல்லும் இதனைக் கேட்பாயாக.

"யாது சொல்லினும் அவன் நினக்குத் தம்பியாகும் முறையினன். ஆகவே, இயன்றவரையும் அவனுக்கு அறிவுரைகளை எடுத்துச் சொல்லி, அவனது அறியா மையை போக்குதலே முதற்கண் மேற்கொள்ளற்கு உரிய தாகும்.

"அஃதன்றிச் சிறுமைப்பட்டதோர் அரசமுறையினை மேற்கொண்டு, அவன்மேற் படைகொண்டு செல்லுதல் வேண்டப்படுவதொன்று ஆகாது.

"அறிவுரை கூறித் தெளிவிக்கும் அதனைச் செய்தல் தான் அரசநெறியினை அறிந்துகூறும் சான்றோர் ஏற்புடைத்தாகக் கண்ட முறையாகும்" என்கின்றனர்.

**கால வெகுளிப் பொறையகேள் நும்பியைச்**
**சாலுந் துணையும் கழறிச் சிறியதோர்**
**கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா; அதுகண்டாய்**
**நூல்கண்டார் கண்ட நெறி.**

(புறத். 776)

இதன்மேற் சான்றோர் தூதுரைத்து வருதலை மேற் கொள்ளற்குச் சேரமான் இசைவளித்தனன் என்பதும், அவரும் சென்று முயல்வாராயினர் என்பதும் அறிய வேண்டுவதாம்.

'நூல்' என்றது, அரசியல் நூல்களை.

## 8. அடங்கல் வேண்டும்

சான்றோர்கள், பெருஞ்சேரல் இரும்பொறையின் இசைவோடு, தகடூர்க்குச் சென்று, அதிகமானிடம் தூது உரைத்து நிற்கின்றனர். திறை என்பது மேலரசின் தகுதியை ஏற்கும் ஒரு குறிப்பேயன்றி, அதனால் அதிகனுக்கு வந்துறும் இழிவு யாதுமில்லை எனவும் கூறுகின்றனர். மேலும், பெருஞ்சேரல் முறையால் அவனுக்கு அண்ணன் ஆகின்றதையும் எடுத்துக்காட்டி, மூத்தோனுக்கு இளையவன் பணிந்து போவதனால் வந்துறும் இழிவேதும் இல்லையெனவும் வாதிடுகின்றனர்.

அதிகமான் சான்றோரின் உரைகளைப் பொறுமையுடன் கேட்டாலும், அவன் உள்ளம், தன்னாண்மையுடன் மேலோங்கி நிற்கின்றது. 'தம்பி என்பவர், என் நாட்டை முழுவுரிமையுடன் திகழ்தற்குத் தாமே விட்டுவிடலாமே' எனச் சீற்றத்துடன் கேட்கின்றான். அதனால், சேரவரசு பிற குறுநில மன்னர்களிடையே தனது செல்வாக்கை இழந்துவிடல் நேரக்கூடும் என்பதையேனும், கழுவுள் போன்றோர் குறும்பு செய்து வருதற்குத் தகடூரின் நிலையே ஊக்கமூட்டுவதாக இருந்தது என்பதையேனும் அதிகமான் ஏற்கவில்லை.

'பெருஞ்சேரல், தனது ஆதிக்க எல்லையைத் தன் படைப் பெருக்கின் காரணமாகப் பிறவரசுகளின் மேற் செலுத்திப் பரப்பவே எண்ணுகின்றான்' என்று கருதி, அதற்குப் பணியாது எதிர்த்து நின்று, அதன்கண் அழிந்து படினும், அதுவே தன்னால் ஏற்கக்கூடியதெனச் சாதிக்கின்றான் அவன்.

அவனது போக்கு அவனுடைய அழிவுக்கே வித்திடுவதாக இருப்பதையுணர்ந்த சான்றோர் அவனுக்கு அறிவு கொளுத்துவாராகச் சொல்லிய செய்யுள் இதுவாகும்.

ஒளிவிடு பசும்பொன் ஓடை சூட்டிய
வெளிறில் வெண்கோட்ட களிறுகெழு வேந்தே!
வினவுதி யாயின் கேண்மதி, சினவாது
ஒருகுடர்ப் படுதர ஓரிரை துற்றும்
இருதலைப் புள்ளின் ஒருயிர் போல
அழிதரு வெகுளி தாங்காய், வழிகெடக்
கண்ணுறு பொழுதிற் கைபோல் எய்தி
நும்மூர்க்கு,
நீதுணை யாகலும் உளையே; நோதக
முன்னவை வரூஉம் காலை நும்முன்
நுமக்குத் துணையாகலும் உரியன்; அதனால்
தொடங்க வுரிய வினைபெரி தாயினும்
அடங்கல் வேண்டுமதி யத்தை; அடங்கான்
துணையிலன் தமியன் மன்னும் புணையிலன்;
பேர்யாறு எதிர்நீந்தும் ஒருவன், அதனைத்
தாழ்தல் அன்றோ அரிது! தலைப்படுதல்,
வேண்டிற், பொருந்திய
வினையின் அடங்கல் வேண்டும்;
அனைய மாகீண் டறிந்திசி னோர்க்கே.

(புறத்; 785)

இந்தச் செய்யுளை மிகவும் நன்றாகவே நாம் கவனிக்க வேண்டும். இதன்கண் சொல்லப்படும் அறிவுரை யானது, ஒன்றை எதிர்த்து ஒரு செயலைச் செய்யும் பொழுதெல்லாம், நம் உள்ளத்துள் ஆழமாகவும் அழுத்த மாகவும் நிலைபெறுதலும் வேண்டும். வெற்றிப்பாதைக்கு நம்மைச் செலுத்துகின்ற சிறப்பு இதற்கு உண்டு.

அதிகனிடம் போர்க்களிறுகள் ஏராளமாகவே இருந் தன. அவற்றின் கொம்புகளை அறுத்து, அக்கொம்புகட்கு மேலாக இருப்புப் பூண்களைப் பொதிந்திருப்பார்கள். அதனால் அக்கொம்புகள், தம்முடைய வெண்மைநிறம் வெளித் தோன்றாவாறு பூண்மட்டுமே தோன்ற விளங் கும். மேலும், ஒளி சிதறும் பசும்பொன்னாற் செய்த

நெற்றிப் பட்டங்களைச் சூட்டியவையாயும் அவை விளங்கும். இந்த யானைத்திரள் அந்நாளைய போரின் கண் மிகவும் முதன்மையான படைப்பகுதியாக இருந்தது. அதிகனின் இந்தப் படை வன்மையைக் குறிப்பிடு வாராகவே,

**ஒளிவிடு பசும்பொன் ஓடை சூட்டிய**
**வெளிறில் வெண்கோட்ட களிறுகெழு வேந்தே!**

என அவனை விளித்துத், தாம் சொல்லப்போகும் அற நெறியை ஆன்றோர் உரைக்கின்றனர்.

''இந்தச் சூழ்நிலையிற் செய்வதென்ன என்று கேட் பாயானால், அதனைப் பற்றியும் கூறுவோம் கேட்பா யாக'' என்ற பீடிகையுடன் செய்தி சொல்லப்படு கின்றது.

''இருதலைப் புள்'' என்ற ஒன்று. அதன் இருபுறமும் தலை இருந்தாலும் அதன் வயிறு ஒன்றேயாகும். அந்த ஒரு வயிற்றின்கண் இரு பக்கத் தலைகளானும் கொள்ளப் படுகிற உணவுதான் அதற்கு உணவாக அமைகிறது. இரண்டு தலைகளாலும் உண்ணினும், அந்த உணவு முழுதும் ஒரே வயிற்றிடந்தான் சென்று சேர்கிறது. அதற்கு உயிரும் ஒன்றே ஒன்றுதான். இங்ஙனம், இரண்டு தலையாற் கொள்ளப்படும் உணவுகள் ஒரே இடத்தை அடைகின்றதே என்பது குறித்து, அந்தப் பறவை ஒரு போதும் வருந்துவதில்லை. அதுதான் அதன் இயல்பு. அந்தப் பறவையைப் போன்றவன்தான் ஒரு வகையில் நீயும் ஆவாய்!

''பகைவர் படையணிகள் நின் நாட்டைச் சுற்றி வளைத்துள்ளன. நின் நாட்டகத்தினின்றும் நீ வெளி யேறிப்போதற்குரிய வழியும் ஏதும் இல்லாதாகப் போய் விட்டது. இங்ஙனம், வெளியே போய்வரும் வழியும் கெட்டுப்போதலைக் கண்ணுறுகின்ற பொழுதினும், நீ

அது கருதியும் அஞ்சிப் பகைவர்க்கு பணிந்து போவா யல்லை! நின்னைப் பற்றி நினக்கு அழிவைத் தருவதா கின்ற சினத்தையே நின்பால் மிகுதியாகக் கொண் டுள்ளனை! நின்னாற் பொறுத்தற்கு இயலாதவாறு அதுவும் வெளிப்பட்டு வருதலை யாம் நின்னிடத்தே காண்கின்றோம்.

''உடுக்கை இழந்தவன் கைப்போல, அவ்விடத்தேயே உதவுதல் சிறந்தது' என்பார்கள். அதுவும் நின்னளவில் உண்மையே யாகும். பகைவரால் வளைக்கப் பெற்றுத் துயர்வாய்ப்பட்டுள்ள நின்னுடைய ஊருக்கு, அங்ஙனம் கைபோலச் சென்றடைந்து நீ துணையாகி நிற்கின்ற அருளினையும் நின்பாற் கொண்டவனாக இருக் கின்றனை!

''சேரமானோ, நின்னினும் வேறுபட்ட குடியினனும் அல்லன். நின் குடியினையே சார்ந்தவன். நினக்கு அண்ண னாகின்ற ஓர் உறவுமுறையினனும் ஆவான். நினக்கு ஒரு துன்பமானது பிறரால் முற்பட்டு வருவதானால், நினக்குத் துணையாக அமைந்து, அதனை விலக்குதற்கு முற்படு கின்ற ஒரு கடமைப்பாட்டையும் அவன் உடையவன்.

''அத்தகைய அவனோடு பகைமை கொண்டு போரிட்டு அழிவதற்குத் துணிதல் நினக்குச் சிறப்பன்று.

''பகையாகி வந்து வளைத்துள்ளான்; அவன் அண்ணன் முறையினனே ஆயினும் ஆகுக; அவனை எதிர்த்து நின்று வெல்வது, அல்லது போரின்கண் அழிவது என்பதுதானே வீரனின் கடமை' என்று கருதி, நீ நின் கோட்டையைக் காத்து நிற்கும் முயற்சியில் உறுதியாக இப்போது ஈடுபட்டுள்ளனை. நீ தொடங்குதற்கு உரித் தான காத்தற்செயல் என்பது பெரிதான புகழுடையதே என்றாலும் நீ இங்ஙனம் கொதித்து எழாமல், நின் அண்ணனுக்கு அடங்கிப்போவது தான் நினக்கும் நின் நாட்டிற்கும் நன்மை தருவதாகும்.

"பேர் யாற்றின்கண் புதுவெள்ளம் கரைபுரண்டு ஓடிச் செல்லுகின்றது. அதனைக் கடக்கத் துணிவு கொள்கின்றான் ஒருவன். பிறர் வேண்டாவெனத் தடுக்கவும் அடங்கானாய், ஆற்று வெள்ளத்துள் குதித்தும் விடுகின்றான்.

"வேறு துணையாவாரும் எவரும் இல்லை. தன்னந் தனியாகவே அவன் நீந்துகின்றான். இடையிற் களைத்தால், அவனைத் தாங்கிக் காத்தற்கு ஒரு புணையும் இல்லை. அந்த நிலையில், அவன் ஆற்றின் போக்கோடு தாழ்ந்து சென்று, அதனைக் கடத்தலன்றோ செய்ய வேண்டுவதாகும். 'ஆற்றின் போக்கிற்கு எதிராகவே நீந்திச் சென்று கடப்பேன்' என அவன் சொல்லி முயல்வானாயின், அவன் ஆற்றைக் கடக்கமாட்டாது அழிவான் அல்லனோ? அப்படி எதிர் நீந்தத் தலைப்படுதல், ஆற்றைக் கடத்தற்கு அரிதாகிப் போகின்ற ஒரு செயலும் அல்லவோ?

"ஆகவே, நீ நின் அண்ணனைப் போரிடத்தே வெற்றி கொள்ளக் கருதினாய் ஆயினும், இவ்வேளையில் நீ மேற் கொண்ட போர்ச்செயலைக் கைவிட்டு, அவனுக்கு அடங்கிப் பணிந்து போகுதலே செய்யக்கூடியதாகும். அதுவே நீ அவனை வெற்றி கொள்ளுதற்குரிய சிறந்த வழியும் ஆகும். இவ்விடத்தே எதிரிட்டுப் பொருத முற்படும் உங்கள் இருவரது நிலைகளையும் சீர்தூக்கிக் காண்பார்க்கு, இதுவே செய்யத் தககதாகத் தோன்றுகின்றது. ஆகவே, அதிக நின் போர் முயற்சிகளைக் கைவிட்டுச் சேரலனுக்கு இவ்வமயம் தாழ்ந்து போவாயாக!"

இவ்வாறு, ஆன்றோர் அதிகமானின் நன்மை கருதிப் பலவாறாக எடுத்துரைக்கின்றனர். எனினும், போர் மறத்தால் மாண்புற்றிருந்த அவன்பால் இந்த அறவுரைகள் யாதும் பயனளிக்கவில்லை. பகையுணர்வும் வெஞ்சினமும் மிகுதியாகி உள்ளத்தே திண்மைகொண்டு நிரம்பி

யிருந்தன. அவனிடத்தே, 'போர்' என்னும் ஒன்றுதான் தன்னாற் செய்தற்கு உரியதென்ற முடிபும் அழுத்தமாக நிலைபெற்று விட்டது.

ஊழன் வலிமையை நினைந்து, அதன் வழியே தான் எல்லாம் நிகழுமென அமைந்து, சான்றோரும் தமக்குள் வருத்தி நலிபவராயினர்.

## 9. வேந்துடை அரண்

அதிகமானின் முடிபினைத் தெரிந்ததும், பாசறைக் கண் வீற்றிருந்த சேரமான் தகடூர்க் கோட்டையைக் கைப் பற்றுவதற்குரிய முயற்சிகளைக் கவனிக்குமாறு, தன் படைத் தலைவர்கட்கு ஆணை பிறப்பிக்கின்றான்.

ஆணை பெற்ற படைத் தலைவர்களும், போர் வெறி யாற் சினந்தாராகித், தகடூர்க் கோட்டையை அணுகுதற் கான முயற்சிகளிலே ஈடுபடுதற்குத் தம் கருத்தைச் செலுத்துகின்றனர்.

அவ்வமயம், பொன்முடியாரின் உள்ளம் பெரிதும் வேதனைப்படுகின்றது. தகடூர்க் கோட்டையின் காவல் மேம்பாட்டைக் கருதும் அவர், வெற்றி தோல்வி எவ்வா றாயினும், சேரமானின் படையும் அதனாற் பேரழிவிற்கு உள்ளாதல் உறுதியாகும் என்பதனை உணர்கின்றார்.

'அரசே! நின் தம்பிதானே அதிகன்! அவனை வளைத்து வெற்றி கொள்ளுதல் என்பதுதான் எதற்காக? அவன் உரிமையுடனே வாழட்டும் என, இந்த முற்றுகை யைக் கைவிட்டு நாம் நம் நாட்டுக்குத் திரும்பி விடலாமே' என்கின்றார்.

போர்முனைக்கண், வெற்றியொன்றே கருதுவதன்றி, உறவும் பிறவும் கருதிப் பார்ப்பது வீரரின் இயல்பாகுதல்

பொருந்தாது. ஆகலின், சேரமான் அவருடைய கருத்தினை ஏற்றுக் கொள்வதும் இயலாதாக, அங்ஙனமே உரைத்தும் விடுகின்றான். அவனுடைய உள்ளத்தின்கண் அதிகமான்பால் அத்துணைச் சினம் முதிர்ச்சியுற்று வயிரம் பெற்றிருந்தது! ஆகவே, அவனை மாற்றுவதற்கு வகை அறியாதவரான பொன்முடியார், அவன் உணருமாறு, தகடூர்க் கோட்டையின் வலிமையைத் தாம் அறிந்தபடியே அவனுக்கு உரைக்கின்றார்.

புறத்திரட்டு இதனைத் 'தூது' என்னும் பகுதியுட் சேர்த்துக் கொண்டிருப்பதனால், ஆன்றோர்கள் அதிகன்பாற் சென்று தூதுரைத்த நாளிற், பொன்முடியாரும் அவருள் ஒருவராக இருந்திருக்க வேண்டும் என்று நாம் கருதலாம். அதுகாலை, தகடூர்க் கோட்டையின் காவல் மேம்பாட்டைக் கண்டு வியந்தவருள் ஒருவரான இவர், அதிகன்பாற் கொண்ட தம்முடைய ஆற்றாமை காரணமாக, அதனைப் பற்றிச் சேரமானிடம் உரைக்கின்றார் என்றும் கொள்ளுக.

''சேரமானே!''

'தகடூர் கோட்டையைக் கைப்பற்றுக என்னும் நின் ஆணையினைப் பெற்றதும், நின்னுடைய படையணிகளின் போர் முரசங்கள் ஒய்யென எப்புறமும் அதிர்கின்றன. வேற்படைகள் நிறைந்த கையினரான நின் படைஞர்களும் போரை விரும்பியவராக ஆர்த்தெழுந்து செல்லுகின்றனர்.

''இவ்வுலகம் அனைத்தும் அறிய, ஓர் அரசன் தன்னுடைய படை வலிமையை மேற்கொண்டு சென்று, பகைவர் கோட்டைகளைக் கைப்பற்றி வாகைசூடுவது இந்த உழிஞை வகையினாற்றானே?' என நீயும் என்பாற் கேட்கின்றாய். ஒருவகையில் அதுவும் சரியாக இருக்கலாம்.

'விளங்கும் மாலையினைக் கொண்ட மார்பினை உடையவனே! ஆனால் ஒன்றை மட்டும் நீ நினைத்தாயில்லை. அதிகமான் என்னும் வேந்தனிருக்கும் அரணினை நீ எவ்வழியாற் சேர நினைத்தாலும், அது நின்னால் நெருங்குதற்கும் அரிதாகும் என்பதனை மட்டும் நன்றாக அறிவாயாக.

'இங்ஙனம் யாம் சொல்வது, நின் தகுதியைக் குறைவாக மதிப்பிட்டதாக ஆகாது. ஆயின், அதிகனின் படைமறவர்கள் அத்துணை மறமாண்பினை உடையவர்கள் என்பதனை யாம் அறிவோம்.

'திண்மையும் கூர்மையும் உடைய வேற்படையினை ஏந்தியவராகத், தம் மதிலை அணுகுகின்ற பகைவர்களைக் காணின் அதிகனின் மறவர்கள் பணிந்துபோகும் பான்மையர் அல்லர். இவ்வழி என்பதொன்றன்றி, எவ்வழியால் மதிலைப் பகைவர் அடைய முயன்றாலும், அவ்வவ் வழியிடம் எங்கணுமே தோன்றித் தடுத்துநிற்கும் போர் வன்மை கொண்டவர்கள் அவர்கள்.

'புண்பட்ட உடலினோடும் அயராது பகைவரிடைப் புகுந்து சென்று, பகைவரது பசிய தலைகளை அறுத்துக் களிக்கின்ற ஆண்மையாற் சிறந்தவர்களும் அவர்கள் ஆவர். அத்தகைய கைவன்மையினைக் கொண்டவரும், ஆண்மை சிறந்தவருமான மறவர்கள் மிகுதியாக விளங்குவது அதிகமானின் படை என்பதனையும், அதனால் தகடூர்க் கோட்டையைப் பிறர் அணுகுதற்கும் இயலாது என்பதனையும் தெளிவுறவே அறிவாயாக.

பொன்முடியாரின் இந்த உரையானது சேரமானின் போர் வெறியைத் தணித்துவிட வில்லை; அவன் சீற்றம் இதனைக் கேட்டதும் மிகுதியாகவே வெளிப்படுகின்றது. 'அத்தகைய வலிவுடையானை வெல்வது தான் எனக்கும் ஆண்மையாகும்' என்று கூறி, அவன் சிரிக்கின்றான். அது வஞ்சினத்தாற் கிளர்ந்து வரும்

சிரிப்பாதலை உணர்ந்த பொன்முடியாரும், 'விதிவிட்ட வழி' என நினைந்தாராக அமைகின்றனர்.

மொய்வேற் கையர் முரசெறிந் தொய்யென
வையகம் அறிய வலிதலைக் கொண்டது
இவ்வழி யென்றி இயல்தேர் மார்ப!
எவ்வழி யாயினும் அவ்வழித் தோன்றித்
திண்கூர் எஃகின் வயவர்க் காணின்
புண்கூர் மெய்யின் உராஅய்ப் பகைவர்
பைந்தலை எறிந்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்து, பிறர்
தீண்டற் காகாது, வேந்துடை அரணே! (புறத்-786)

இச் செய்யுளை, நச்சினார்கினியர், தொல்காப்பியப் புறத்திணையியலின், 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்' என்னும் சூத்திரைவுக்கண் எடுத்துக்காட்டி 'இது பொன்முடியார் தகடூரின் தன்மை கூறியது' என்பர். அவ்விடத்தே சில பாடபேதங்களுடன் இச் செய்யுள் காணப்படும். அது வருமாறு,

மொய்வேற் கையர் முரண்சிறந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்றார் மார்ப
வெவ்வழி யாயினும் அவ்வழித் தோன்றித்
திண்கூர் எஃகின் வயவர்க் காணின்
புண்கூர் மெய்யின் உராஅய்ப் பகைவர்
பைந்தலை யுதைத்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்து பிறர்
தீண்டல் தகாது வெந்துறை யானே!

'மொய் வேற் கையர் முரண்சிறந்து, ஒய்யென வையகம் அறிய வலி தலைக்கொண்டது எவ்வழி?' எனச் சேரமான் கேட்பதாகவும், அதற்கு, எவ்வழி யாயினும் என்பது முதலாகவரும் பகுதிகளைப் பொன் முடியார் கூறுவதாகவும் கொள்க.

## 10. வளம் பெருகுக!

ஒரு நாடு வளமும் வலிமையும் உடையதென்றால், அது அந்நாட்டின் விளைபொருள் பெருக்கத்தினது அடிப்படையில் கருதவேண்டிய தொன்றே யாகும். நாட்டின்கண் நெல்வளம் குன்றிப்போகப் படைவலிமை மட்டும் பெருகிற்றாயின், அந்நாடு விரைவில் அழி வெய்துதலே நேரக்கூடிய தென்பது ஆன்றோரின் முடிபு.

புறநானூற்றுள் வரும் ஓரேருழவரின் செய்யுள் இதே கருத்தினை வலியுறுத்துவதை நாம் காணலாம். உணவுப் பஞ்சத்தால் நலிந்து கொண்டிருக்கும் நாட்டின் படைப் பெருக்கம், விரைவில் தானாகவே நலிவெய் தலும் நிகழக் கூடியதாகும். இதனால், ஆட்சியாளர்கள் தம் நாட்டின் உழவுப் பெருக்கத்திற்கே தம் திட்டங் களுள் சிறப்புத் தருதல் வேண்டும் என்பதும் தெளி வாகும்.

பரவலாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பெற்ற இந்த அடிப்படைக் கருத்தினைத், தகடூர் யாத்திரைச் செய்யுள் ஒன்றும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. போர் மறத்தினால் மலிந்தவனாகிப் பகைவரை அழித்தல் ஒன்றையே கருத்தாகக் கொண்டு பாசறையிட்டு இருந் தவன் சேரமான். சேரநாட்டு வலியுடைய ஆடவர் அனைவருமே உழுதொழிலை மறந்தனராகிச் சேரப் படையணிகளிலே மறவராக விளங்குகின்றனர். எதிர் பார்த்தபடி போரும் விரைய நிகழ்ந்து முடிவு பெற்று விட்டதென்பதும் உண்டாகவில்லை. நாட்டின் செழு மைக்கு உழைக்க வேண்டிய நற்குடியினரான ஆடவர் பலரும், இப்படித் தம்முள் ஒருவரையொருவர் வெட்டி மாய்த்துக் கொள்ளுகின்ற போர்நாட்டத்தினராகக் குழுமியிருக்கும் பாசறைக் காட்சியினைக் காணும் போது, அறிஞரின் உள்ளம் பெரிதும் வேதனை அடை கின்றது. ஆக்கவேலையிற் செலுத்த வேண்டிய ஆண்

மையை அழிவின்கண் செலுத்தும் அரசுகளின் போக்கினை நினைந்து குமுறுகின்றது. அவர்களுள் ஒருவர் சேர மானுக்கு இந்த அடிப்படையினை உணர்த்துவாராக, 'நின் நாடு புது வருவாயினை உடையதாகுக' என வாழ்த்துகின்றனர்.

'அகன்ற இடத்தையுடையது சேரலாகிய அவனுடைய நாடு. அந் நாட்டின்கண் நீர்ப் பெருக்கம் விளங்குமாறு மழை வளம் சிறப்பதாக!

'பெரிய நிலத்தின்கண் இட்ட வித்துக்கள் குறைவின்றி முளைவிடுமாக! முளைத்த முளைகள் வளர்ந்து செழிக்குமாறு, மழையானது முட்டுப்பாடின்றி வந்து பெய்யுமாக!

'இங்ஙனம் காலத்தால் மழை பெய்து, ஏதும் வாட்டம் வந்து பொருந்தாமற்படிக்குப், பயிர்கள் கிளைத்து வளருமாக! அக் கிளைகளுள் எல்லாம் கதிர்கள் பாலேற்று முதிர்ந்து தலைதாழ்ந்து, முற்றிய கதிர்களை ஈனுமாக!

''அங்ஙனம் ஈன்ற கதிர்கள் அரிதலைப் பெற்று, ஏரினால் வளஞ்சிறக்கும் செல்வர்களுடைய களத்தின் கண் வந்து நிறைக! அக் களங்களின்கண் வந்து நிறைந்து இடப் பட்டுள்ள நெற்போர் எல்லாம் காவ வின்றியே விளங்குமாக!

'போரினை அடித்து நெல்லினைக் கொள்ளுங் காலத்துப் போர்க்களத்தே நின்றும் எழுகின்ற அச்சங்கெழுமிய உழவர்களின் ஆரவார ஒலியைக் கேட்டு, நாரையினங்கள் வெரீஇத் தம் பெடையோடு விளைவயல்களினின்றும் நீங்கிப் பறந்து போமாக'

'இங்ஙனம், அவன் அகன்ற நாட்டின்கண் எவ்விடத்தும் புதுவருவாய் பெருகுக!'

பெருநீரால் வாரி சிறக்க; இருநிலத்து
இட்டவித்து எஞ்சாமை நாறுக; நாறார
முட்டாது வந்து மழைபெய்க; பெய்தபின்
ஒட்டாது வந்து கிளைபயில்க; அக்கிளை
பால் வார்பு இறைஞ்சிக் கதிரீன; அக்கதிர்
ஏர்கெழு செல்வர் களம்நிறைக; அக்களத்துப்
போரெலாங் காவாது வைகுக; போரின்
உருகெழும் ஓதை வெரீஇப் பெடையோடு
நாரை யிரியும் விளைவயல்
யாணர்த் தாகவவன் அகன்றலை நாடே.

(புறத்-844)

களமர் போரடித்தலால் எழுகின்ற ஒலி பெருகி இருக்க வேண்டிய நாட்டிலே, மறவர் போர்முழக்கின் ஒலியே மிகுதியாக எழுந்து கொண்டிருந்தது கண்டு மனம் வருந்திச் சான்றோர் உரைக்கும் அருமையான செய்யுள் இது.

அன்றிச் சேரமானைக் கண்டு பரிசில் பெற்றோர் ஒருவர், அவன் நாடு வளம் பெருகுக என வாழ்த்திய தாகவும் இதனைக் கொள்ளலாம்.

## 11. புல்லறிவு

பேதைமையாவது ஓரளவு சகித்துக் கொள்ளக் கூடியது. ஆனால், தான் தவறாகக் கொண்ட தொன்றையே சரியெனச் சாதித்து நிற்கும் புல்லறிவோ மிகவும் வெறுக்கக் கூடியதாகும்.

தகடூர்ப் போருக்காக சேரர் படையினர் குழுமியிருந்த பாசறைக்கண், ஒரு சமயம் போர்த்திட்டத்தைப் பற்றிய ஒரு விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது, போரது பலவகைக் கூறுபாடுகளையும் ஆராய்ந்தறியாமல், தாம்

ஒன்றை தவறாகப் புரிந்துகொண்டு அதனையே வலியுறுத்திப் பேசிக்கொண்டிருக்கின்றனர் சிலர். இவர்களின் போக்கினைக் கண்டதும், அந்த ஆய்வுக்கூடத்தே யிருந்த அறிவுடைச் சான்றோர் ஒருவரின் பொறுமை எல்லை கடந்து போகின்றது. அவர்களின் வாயை அடைக்கும் வகையால், அவர் சொல்லிய செய்யுள் இதுவாகும்.

''அறிவாளர்களுள் இருவகையினர் உள்ளனர். ஒரு சாரார், அருமையுடைத்தான பொன்னைப் போன்றவர்கள். சுடச்சுட ஒளிறுகின்ற பொன்னைப்போலப் பிறர் கேள்வியால் மடக்குதற்கு முற்பட முற்பட, இவர்களது அறிவின் ஒளியும் மிகுதியாக வெளிப்பட்டுப் பிரகாசிக்கும்,

இவர்கள் அறிவின் செழுமையினை யாரிடத்தே தோன்றியிருப்பக் கண்டபோதும், அதனைத் தாமும் பெற வேண்டுமென்ற ஆர்வத்துடனே, பொறுமையாகக் காத்திருப்பவர்கள். கரும்பினைத் தின்பவரின் முன்பாகத் தனக்கும் ஒன்றிரண்டு துண்டுகள் கிடைக்குமென்ற ஆர்வத்துடன் காத்திருக்கின்ற நாயினைப் போன்று, அறிவுப் பேச்சுக்களத்தின்கண் கலந்திருக்கும் ஆன்றோர்களும் ஏதாவது நல்ல பொருள் பொதிந்த கருத்துத் தமக்குக் கிடையாதா என்று ஆர்வத்துடன் காத்திருப்பார்கள். பொருளற்ற புன்மையுரைகளை எல்லாம் அவர்கள் பாராட்டுவதே இல்லை.

''ஆனால் உள்ளத்தே கருமை படர்ந்துள்ள புல்லறிவினர்களின் நிலைமையோ இதற்கு முற்றவும் வேறானது. அவர்கள் கேட்கும் எல்லாவற்றையுமே அப்படியே மெய்ம்மொழிகளாக ஏற்றுக்கொண்டு போய் விடுவார்கள். அல்லது, எதனையும் கேட்டு அறிவதற்கில்லாமல் சோம்பலில் ஆழ்ந்துகிடப்பார்கள். அதுவும் இல்லையானால், தொடர்புள்ள செய்திகளை விட்டுத்

தொடர்பற்ற செய்திகள் பலவற்றையும் எடுத்துக் கொண்ட விவாதத்திற்கு மாறுபட்ட பொருள்களையும் விரித்துவிரித்துப் பேசிக்கொண்டிருப்பார்கள்.''

இதனைக் கேட்டதும், அறியாமையால் பதறிக்கொண் டிருந்தவரின் வாய் தானாகவே மூடிக்கொள்ளுகின்றது. விவாதமும் தொடர்கின்றது.

**அரும்பொானன் னார்கோட்டி யார்வுற்றக் கண்ணும்**
**கரும்புதின் பார்முன்னர் நாய்போற்—கரும்புலவர்**
**கொண்டொழிய வொன்றோ துயில்மடிப வல்லாக்கால்**
**விண்டுரைப்பர் வேறா விருந்து.**

(புறத்: 995)

இந்தச் செய்யுள் புல்லறிவால் பெருமை பேசிச் செருக்குற்றுத் திரிபவர் அனைவருக்குமே சிறந்தவொரு அறிவுரை ஆகும்.

## 12. விரிச்சி வேண்டாம்

தகடூர் முற்றுகைக்கான வேளையும் நெருங்கிக்கொண் டிருக்கின்றது. சேரர் படையணிகள் தகடூர்க் கோட்டை யைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டவாய்ப் பாடி தங்கி விட்டன. அவ்வேளையிலே, தகடூர் நாட்டின் ஆநிரைசுளைச் சென்று கவர்ந்து வருதல் வேண்டும் என்கின்ற ஆணையானது சேரனிடமிருந்து பிறக்கின்றது.

பகைப்படை வந்து தம்மை வளைத்துக் கொள்ளத் தொடங்கியதும், தகடூர் நாட்டினர் தங்கள் நிரைகளை எல்லாம் பாதுகாவலான இடத்திற்குக் கொண்டுசென்று, அவற்றைப் பகைவர் கவர்ந்துகொண்டு போய்விடா வண்ணம், மிகவும் விழிப்பாகக் காவல் காத்தும் வருகின்றனர்.

ஒற்றரின் வாயிலாகத் தகடூரார் ஆநிரைகளைக் காத்து நிற்கின்ற காவல் மேம்பாட்டினையும், அவை நிற்கும்

இடங்களையும் அறிந்துகொண்ட சேரர் படைத் தலைவர்கள், அவற்றைச் சென்று கவர்ந்து வருதற்கு வேண்டிய திட்டங்களை வகுக்கின்றனர். அப்பொழுது படைமறவர் செல்லுதற்கான நல்ல சொல்லினைக் கேட்கும் நிமித்தமாக, அவர்கள் காத்திருக்கின்றனர். அவர்கள் எதிர்பார்க்கும் நற்சொல் நெடுநேரமாகியும் அவர்கட்கு வாய்க்கவில்லை.

இந்த நிலையிலே, இளமையின் செருக்கினாலே துடிக்கின்ற உள்ளத்தவனாகிய ஒரு தலைவன், நற்சொல் கேட்டலுக்காக நாம் காத்திருத்தல் வேண்டா; உடனேயே அரசனின் ஏவலை நிறைவேற்றற்கு எழுவோம் என்கின்றான்.

விரிச்சி (நற்சொல்) விலக்கிய வீரக் குறிப்பான இதனைக் காணும் ஆன்றோர், அந்த ஆண்மையாளனின் ஊக்கத்தை வியந்து. இந்தச் செய்யுளைச் சொல்லுகின்றனர்.

**நாளும் புள்ளும் கேளா ஊக்கமொடு**
**எங்கோன் ஏயினன் ஆதலின் யாமத்துச்**
**செங்கோல் வெட்சியும் தினையும் தூஉய்**
**மறிக்குரற் குருதி மன்றுதுகள் அவிப்ப**
**விரிச்சி யோர்தல் வேண்டா**
**எயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே**

(புறத்:1241)

'நன்னாள் எதுவென்பதையும், நன்மை தருகின்ற புள் நிமித்தம் யாதென்பனையும் கேட்டறியாதானாக, உள்ளத்தின் ஊக்கமே தன்னைச் செலுத்த, எம் தலைவனான சேரமானும், எம்மை நிரைகவர்ந்து வருக வென்று ஏவினான்.

''ஆதலின், யாமப்பொழுதாகிய இவ்வேளையிலே, சிவந்த கால்களையுடைய வெட்சிப் பூக்களையும்

தினையரிசியையும் தூவி; ஆட்டுக்குட்டிகளை அறுத்துப் பலியிட்டு வழிபட்ட நாம் நற்சொல் கேட்டலை நாடுதல் வேண்டாம். அறுபட்ட மறிகளின் கழுத்துக்களினின்றும் சோரும் குருதி மன்றிடத்தெழும் புழுதியை அவிக்கும் படியாக, மீண்டும் மீண்டும் பலியிடலும் வேண்டாம்.

''பகைவர் நாட்டிடத்துள்ள நிரைகளையெல்லாம், யாமே சென்று இந்தக் கோட்டைப் புறத்தே கொண்டு தருவோம். எமக்கு விடை தருக.''

இவ்வாறு கூறி, ஆர்ப்பரித்து எழுகின்றான் மறவர் தலைவன் ஒருவன்.

''நாளும் புள்ளும் கேளா' என்பதற்கு, 'நன்னாளும் நற்சொல்லும் கேட்டறிந்து' எனவும் பொருள் கொள்ள லாம். அப்போது, மன்னனே கேட்டறிந்து, ஊக்கமோடு எம்மை ஏவினதன் பின்னர், விரிச்சி கேட்டலும் வேண்டுமோ என்று உரைத்ததாகக் கொள்க.'

## 13. நின்று செவியேற்றன!

சேரர் படைத் தலைவர்கள், தம்முன் வீரவாசகத்தைப் பேசிநின்ற அந்தப் படைதலைவனது ஆண்மையின் மேம் பாட்டினை நன்றாக அறிந்தவர்கள். ஆதலின், அவனுடைய ஊக்கத்திற்கு இசைந்தவர்களாக, அவனைச் செயன்மேற் சொல்லுமாறு ஏவுகின்றனர். அவனும், தன்னோடு ஊக்கமுடைய உறுதியாளர் சிலருடன் சென்று, தகடூரார் ஆநிரைகளைப் பேணி வைத்திருந்த இடத்தினை அவரறி யாதே சென்று அடைந்து விடுகின்றான்.

நள்ளிரவு வேளையிற் காவலர் கண்ணயர்ந்திருக்கும் நேரத்தில் தகடூர்க் காவன்மறவர்கள் மேற் பாய்ந்து வெட்டி வீழ்த்தத் தொடங்குகின்றனர் சேரநாட்டார். தகடூர்க் காவன்மறவர்கள், தாம் எதிர்பாராத நிலையிலே

வந்து தாக்கிய சேரநாட்டாரின் செயலால், ஒருகணம் திகைப்புற்று நின்றனராயினும், அடுத்து அவர்களை எதிர்த்துக் கடுமையாகப் போரிடுகின்றனர். எனினும், எண்ணிக்கையில் குறைந்த தொகையினராக விருந்த அவர்களால், வந்து தாக்கிய சேரநாட்டாரின் கடுமையான தாக்குதலை நெடுநேரம் தாக்குப்பிடிக்க இயலவில்லை. ஒவ்வொருவராக அவர்கள் வீழத்தொடங்கினர். சேரநாட்டாரும் வெற்றிக்களிப்புடன் நிரைகளைக் கைப்பற்றிக்கொண்டு, தம்முடைய பாசறையை நோக்கி ஓட்டிக்கொண்டு போகத் தொடங்குகின்றனர்.

இந்தச் செய்தி தகடூர்ப் படைமறவர்க்கு வெகு விரைவில் கிடைத்துவிடுகின்றது. அவர்கள் கொதித்து எழுகின்றனர். போராண்மையாலும் நாட்டுப்பற்றாலும் மேலோங்கி நின்ற ஒரு படையணி உடனே திரளுகின்றது. வேகமாகச் செல்லக்கூடிய குதிரைகளின்மீது ஏறியவராகத் தகடூர் மறவர்கள், தங்களது நிரையை மீட்டு வருதலின் பொருட்டாகக், கவர்ந்து சென்றுகொண்டிருக்கும் சேரநாட்டாரைப் பின்தொடர்கின்றனர்.

வேளையோ நள்ளிரவு கழிந்த பொழுது; சேரநாட்டவர் இன்னமும் தகடூர்ப் பகுதியினைக் கடந்துபோய் விடவில்லை. வழியில் அவர்களைக் கண்ட தகடூர்ப் படையினர், அவர்களை வளைத்துக் கொண்டு, கொல்லும் புலிகளைப்போலச் சீற்றத்துடன் போரிடுகின்றனர்.

வெற்றிக் களிப்போடு சென்ற சேரப்படையினர், எதிர்பாராத அந்தத் தாக்குதலை எதிர்நின்று வெற்றி காண முடியாமல் சிதைந்தும், அழிந்தும் போகின்றனர். நிரையை மீட்டுக் கொண்டவராகத் தகடூர் மறவர்கள் தம் நாட்டிற்கு மீள்கின்றனர்.

அங்ஙனம் திரும்புகின்றபொழுது, தாம் நிரைமீட்ட போரிடையே நிகழ்ந்த பற்பல நிகழ்ச்சிகளையும் ஒருவரோடொருவர் சொல்லி மகிழ்ந்தவண்ணமாக, அவர்கள்

களிப்புடன் வருகின்றனர். அவர்களுள் வீரமறவன் ஒருவன், தன் அருகே வருகின்ற மற்றொருவனிடம் உரைப்பதாக அமைந்த செய்யுள் இது.

''நண்பனே! பெரிதான இந்த உலகத்திடத்தே எத்தகைய உயிர்வகையாகப் பிறந்தபோதும், மாலைப் பொழுது வந்து பொருந்துமாயின், அது அனைத்திற்கும் இனிதாக இருக்கும் என்பார்கள்.

'ஆனால் நமக்கோ, இந்த இரவின்கண் சென்று பகைவரைப் பொருதி வெற்றியுடன் மீள்கின்ற இதுவும் இனிதாகவே இருக்கிறது.

'பசுக்களைக் கவர்ந்துகொண்டு போகிய சேரநாட்டு மள்ளர்கள், தம் வெற்றிச் செருக்கினால் நிரைகளை ஓர் புறத்தே நிறுத்திவிட்டுக், கானிடத்தே தம்முள் அளவளாவியிருந்த போதில், நாம் சென்று அவர்களின் புறத்தே சூழ்ந்து, அவர்களை வளைத்துக் கொண்டோம்.

''அப்போது, அவர்கள் வசப்பட்டுச் சென்ற நம் ஆக்கள், தாம் தம்முடைய கன்றுகளின் குரலைக் கேட்டன போல, நம் ஆரவார ஒலியைக் கேட்டவையாய்த் தம் செவிகளை உயர்த்து நின்றனவே! அந்தக் காட்சியை என்னென்பது?'

ஆண்மையாளனாகிய அவனது அந்த வியப்பு, அவன் உடனிருந்த வீரனைமட்டுமல்லாது, நம்மையும் இன்று இன்புறுத்துகின்றது. இந்த வகையில், அதன் நிலை பேற்றை உறுதிசெய்தனர் தமிழ்ச் சான்றோர்.

**இருநிலம் மருங்கின் எப்பிறப் பாயினும்**
**மருவின் மாலையோ இனிதே இரவின்**
**ஆகோள் மள்ளரும் அளவாக் கானத்து**
**நாம்புறத் திறுத்ததென மாகத் தாந்தங்**
**கன்றுகுரல் கேட்டன போல**
**நின்றுசெவி யேற்றன சென்றுபடு நிரையே!**

(புறத்-1251)

'ஆவினம்கூடத் தம் நாட்டவரிடம் அத்தகைய பாசத்தைக் கொண்டிருந்தன' என்று கூறுகின்ற தகடூர் மறவனின் நாட்டுப்பற்று, நம்மைப் பெருமிதங் கொள்ளச் செய்கின்றது. 'கன்று குரல் கேட்டன போல' என்று கூறும் வாசகம், அந்த நாட்டுப்பற்றின் பெருமிதச் செறிவிலே எழுந்த ஒப்பற்ற வாசகம் ஆகும்.

## 14. அதிகனின் கொடை!

அதிகமானின் கொடையைப் பற்றிய சிறப்பினை ஔவையாருக்கு அருநெல்லிக்கனி வழங்கிய அந்த ஒப்பற்ற அரிய செயல் ஒன்றே என்றும் அழியாமல் நிலைபெறுத்து வதாகும். எனினும், அவனுடைய அந்த வள்ளன்மையின் மற்றொரு நிலையினை நமக்குக் காட்டுகின்றார் தகடூர் யாத்திரைச் செய்யுள்களைப் பாடிய சான்றோருள் ஒருவர்.

அதிகமானைக் கண்டு அவனைப் பாடிப் பரிசில் பெற்று மகிழவேண்டும் என்ற விருப்புடன் செல்கின்றார் ஒரு புலவர். அவர் சென்று சேர்ந்த வேளையோ மிகவும் பொருத்தமற்ற வேளையாக இருந்தது.

தகடூர் நாட்டுள் புகுந்து கொடுமை செய்துகொண் டிருந்த சேரநாட்டவரால், தன் மக்கள் படுகின்ற துயரங் களைக் கேட்டுப் பொங்கியெழுந்த சினத்தால், அவர்களது செருக்கினை அடக்கி மீள்வேன் என்று கொதித்து எழுந்து வருகின்றான் அதிகமான். அவனுடைய ஆண்மையின் பெருமிதமும், பேராற்றலின் சிறப்பும், தகடூர் மற்றவர் கட்குப் பேரூக்கத்தைத் தர, அவர்களுள் குறிப்பிட்ட சிலர் அவனைத் தொடர்ந்து துணையாகின்றனர்.

இப்படிப் பகைவரைத் தாக்குதற்கான போர் வெறி யுடன் சென்ற அதிகன். ஓரிடத்தே பாசறையிட்டுத் தங்கியிருந்தபோதுதான், புலவர் அவனைப் பாடிப் பரிசில்

பெற்று மகிழவேண்டும் என்று சொல்கின்றார். அவன் புகழைப் பாடிப் போற்றியும் மகிழ்கின்றார்.

அதிகமான் புலவரது புலமையை வியந்து பாராட்டு கின்றான். தன்முன் பகுத்துக்கிடக்கின்ற படைக்கலன் களை நோக்குகின்றான். அவை புலவர்க்குப் பயன் படாதனவென்று ஓர்கின்றானில்லை. பகுத்துப் பக் கங்களில் அணிகலன் பூட்டிய சிறப்புடன் விளங்கும் குதிரைகள் பூட்டிய தன்னுடைய தேரினை நோக்கு கின்றான். அதனை வழங்குவது சிறப்பாகத் தோன்றவே,

'புலவர் பெருமானே! இதோ இந்த தேரினையும், கழித்துக் கிடக்கும் இந்தப் படைக்கலங்களுள் பலவற்றை மிகுதியாகவும் பெற்றுக்கொள்க' என வழங்குகின்றான்.

பகைவரை வென்று பறித்துவந்த அந்தப் படைக்கலக் குவை, அவனுடைய வெற்றிமிடுக்கைப் பறைசாற்றுகின் றது. புலவரின் உள்ளமும் அதனாற் பெருமிதங் கொள் கின்றது.

**வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டும்**
**ஏத்தினர்க் கீத்துமென் றெண்ணுமோ—பாத்திப்**
**புடைக்கல மான்றே ருடனீத்தா னீத்த**
**படைக்கலத்திற் சாலப் பல.** (புறத்-1257)

''வேற்றரசரோடு போர்செய்வதனை மேற்கொண்டு செல்பவனான அதிகமான், களத்தினின்றும் மீண்டு வந்த தன்பின்னர், தன்னைப் போற்றிய இரவலர்க்குப் பரிசில் தருவோம் என்று எண்ணுவானோ? எண்ணுவான் அவன் அல்லன்.

''அவ்விடத்தில் அவன்பால் இருந்ததான, பகுத்துப் பக்கங்களில் அணிபூட்டிய குதிரைகளுடன் விளங்கிய தேரினை உடனேயே கொடுத்தானே! அத்துடன் கழித்துக் கிடந்த படைக்கலங்களில் மிக அதிகமாக எடுத்துக் கொள்க என்றும் சொன்னானே!''

இவ்வாறு போற்றுகின்றார் கவிஞர். போர்க்களத்தினும் உவந்து உள்ளதை அளித்து உவக்கின்ற அதிகமானின் உள்ளச்சால்பு ஈகைச் சிறப்பு நம்மையும் வியப்பில் ஆழ்த்துகின்றது.

## 15. மறவர் உயிர் நேர்ந்தார்

பழந்தமிழகத்தில் போர் நிகழ்ச்சி என்பதும் இன்னின்னபடிதான் நடைபெற வேண்டுமென்கின்ற ஒரு மரபு இருந்திருக்கிறது. வெட்சியாராயினும், கரந்தையாராயினும், உழிஞையாராயினும், நொச்சியாராயினும் தாம் மேற்கொள்ளவிருக்கும் போருக்கு முன்னால் பற்பல நடைமுறைகளை மேற்கொண்டவர்களாகவே இருந்திருக்கின்றனர். இப்படிப்பட்ட மரபுகளுள் ஒன்று, படை மறவர்க்குப் பெருஞ்சோறிட்டும் தண்தேறல் வழங்கியும் மன்னன் அவரைச் சிறப்பித்தல் ஆகும்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை தன்னை அழிக்கக் கருதிப் பெரும்படையுடனே வந்து, தன் நாட்டின் எல்லைப்புறத்தே பாசறையிட்டு, வெட்சிப் போரைத் தொடங்கியதும், தகடூர் அதிகமான் தன் நாட்டின் மானத்தைக் காத்து நிற்கின்ற பெருஞ்செயலிலே ஈடுபட வேண்டியவனாகின்றான்.

போர்முரசு முழங்கத், தொடர்ந்து வாள் நாட்கோள் குடை நாட்கோள் என்பன நிகழ்கின்றன. மறவர் கூட்டங்கள் வந்து கூடுகின்றனர். அவர்களை உரிய படையணிகளுள் அமைத்துப் படைவரிசைகளை ஒழுங்குபடுத்துவதும், தக்க பயிற்சிகளை அளிப்பதும், அடுத்து மிகவேகத்துடன் நடை பெறுகின்றன.

இவற்றையடுத்து, மன்னன் தன் மறவர்களுக்குப் பெருஞ்சோறிட்டுப் பாராட்டும் விழாவும் ஆரவாரத்துடனும் ஆடம்பரத்துடனும் நிகழ்கின்றது. அந்த விழாவின்

கண், மன்னன் தானும் வந்து கலந்து கொள்கின்றான். அந்த விழாவினைக் கண்ட சான்றோர் ஒருவர், மறவரின் மாண்பினை வியந்து பாடுகின்றார்.

"அதிகமான் உண்டிகொள்வதில், தான் தன் படைகளுக்கு முந்தியவனாக உண்டானில்லை. அவர்களுடன் அமர்ந்தே தானும் உண்டான்.

'தண்ணிய கள்ளினை, நிறையத் தன் வீரர்களுக்குத் தானே வார்த்தும் வழங்கிப் போற்றினான். இங்ஙனம் அவன் தன் பெருநிலையினின்றும் தாழ்ந்து தன் படை மறவரோடு தானும் ஒருவனாகக் கலந்து கொண்டான்.

'அவனுடைய இந்தச் செயலுக்காகவோ, ஆற்றலுடைய மறவர்கள் பலரும் கூற்றுவனுக்குத் தம் உயிரை வழங்குவதற்கு இசைந்தார்கள்!

"இவர்கள் தம் மன்னர்க்கு உறவினராக இல்லாதவரிடம், சற்றும் ஓர்ந்து கண்ணோட்டம் கொள்ளாத தன்மையினராகவும் காணப்படுகின்றனரே!"

போர்க்கண் பகைவரை அழித்தலொன்றே குறிக்கோளாகக் கொண்டு செருக்கி எழுந்த வீரரது பேராரவாரத்தைக் கண்ட புலவர், அந்த மறவரது நாட்டுப் பற்றையும், நாட்டுக்காக உயிரைத் தருவதற்கும் முன்வருகின்ற தியாகநிலையினையும் வியந்து போற்றுகின்றனர்.

**உண்டியின் முந்தான் உடனுண்டான் தண்தேறல்**
**மண்டி வழங்கி வழீஇயதற்கோ—கொண்டி**
**மறவர் மறலிக் குயிர்நேர்ந்தார் மன்னர்க்**
**குறவிலர் கண்ணோடார் ஓர்ந்து** (புறத்:1258)

மன்னர்க்கு உறவிலர் எனின் அவர்பால் ஓர்ந்து கண்ணோடலைச் செய்யார்: மறலிக்கு உயிர்நேர்ந்தார், இக் கொண்டி மறவர்' என உரைத்துப் போற்றுகின்ற புலவர் அதிகமானின் உள்ளச் செவ்வியையும் சிறப்பாக உரைத்து வியக்கின்றனர்.

## 16. கடனாற்றிய புகழோன்

தகடூர்ப் பெரும்போர் இருதிறத்து மறவர்களும் தமக்குள் பொருதுகின்ற ஒரு கடுமையான கட்டத்தையும் அடைந்து விடுகின்றது. சேரரின் முன்னணிப் படையினர் அணியணியாக வந்து தகடூர்க் கோட்டையை அணுகுவ தற்கு முற்படுகின்றனர்.

தகடூர் மறவர்கள் பகைவரைக் கண்டதும் பயந்து கோட்டைக்குள் அடைத்துக் கிடக்கவில்லை. காவற் காட்டின் எல்லையை அடையும் முன்பாகவே சேரரின் படையணிகளுக்கு எதிராக வந்து தடைசெய்து நின்றனர் தகடூர் மறவர்கள். கடல்போலத் திரண்டுவருவது சேரரின் பெரும்படையானாலும், மானவுணர்வினால் செருக்குற்ற தகடூர் மறவர்கள் அதனைக் கண்டு அஞ்சிவிட வில்லை. தம் வலிமை தோன்றப் பகைவர்களிடையே புகுந்து, தம்மால் இயன்றவரை பகைவரை அழித்துக் களத்தில் விழுப்புண்பட்டு வீழ்தலையே உளங்கொண்டு உறுதியாகப் போரிட்டு வந்தனர்.

'இங்ஙனம் நிகழ்ந்த போரின் கடுமையான போக்கி னால், தகடூர் நாட்டுத் தலைநகரை அடைவதற்குமுன் ஒவ்வொரு காலடியளவான இடத்தைக் கைப்பற்றக் கூடச் சேரர்கள் தம் படைமறவர்கள் பலரைப் பலிதர வேண்டி யிருந்தது.

வீரத் திருமகனாக விளங்கிய ஒரு மறவன், தகடூர்ப் படையணியைச் சேர்ந்தவன், பகைவரிடையே புகுந்து வாளாற்றல் காட்டிக் கணக்கற்றோரை வெட்டி வீழ்த்தித் திரிந்தான். அவன் வரவைக் கண்டதும் சேரர் அணிகள் கலகலத்தன. அவனுடைய வாளாண்மை பகைவரையும் திடுக்கிட்டு அஞ்சித் தளரச் செய்தது. முடிவில் அவனைப் பலராகக் கூடி வளைத்துக்கொண்டு அவன்பால் தம் ஆயுதங்களை எறிகின்றனர். அவனும் களத்தில் விழுப்புண் பட்டு வீழ்ந்தான்.

அன்றையப் போரின் முடிவில், அவனைத் தூக்கிக் கொணர்ந்து, அவன் புண்கட்குத் தகடூர்க் கோட்டையுள் மருந்திட்டு நலப்படுத்த முயல்கின்றனர். ஊரெல்லாம் அவனது வீர விளையாட்டையே பேசிக் களிக்கிறது. அவனை வந்து கண்டார் தமிழ்ச் சான்றோர் ஒருவர். அவர் கண்கள் வற்றாத கண்ணீர்க் குளமாகின்றன. அவனுடைய உடலினை உற்று நோக்கிய அவர், அவனை வியந்துவியந்து தம்மை மறக்க, அங்கே தமிழ் வீரச் செறிவுடன் வெளிவந்து ஒரு பாடலாகின்றது.

**குழிபல வாயினும் சால்பா னாதே**
**முழைபடு முதுமரம் போலெவ் வாயும்**
**அடைநுழைந் தறுத்த விடனுடை விழுப்புண்**
**நெய்யிடை நிற்றல் ஆனாது பையென**
**மெழுகுசெய் பாவையிற் கிழிபல கொண்டு**
**முழுவதும் பொதியல் வேண்டும் பழிதீர்**
**கொடைக்கடன் ஆற்றிய வேந்தர்க்குப்**
**படைக்கடன் ஆற்றிய புகழோன் புண்ணே.**

(புறத்: 1274)

'இவன் உடலிடத்தே காணப்படுகின்ற குழிகள் பலவாயினும், அவை அவனுக்குச் சிறப்பையே தருவன வாகின்றன. பொந்துபட்ட முதிய மரத்தைப் போல, எவ்விடத்தும் முற்றவும் நுழைந்து கிழித்த இடங்களை உடையனவாக விழுப்புண்கள் தோன்றுகின்றன.

'புண்ணுக்கு நெய்யிட்டு மருத்துவஞ் செய்தால், நெய்யும் அவ்விடத்து நிற்றற்கு இயலாதாக வழிந்து போகின்றது. மெல்லென மெழுகினாற் செய்தமைக்கும் பாவையைப் போலத் துணிகள் பலவற்றைக் கொண்டு அவன் உடலினை முற்றவுமே பொதிந்து வைத்தல்தான் செய்தல் வேண்டும்.

''பழியினின்றும் நீங்கியவரும் கொடைக்கடனைச் செவ்விதே ஆற்றியவருமான தம்முடைய வேந்தருக்குப்

படைக்கடன் ஆற்றிய புகழினை உடையோன் அவன். அவனுடலின்கண் தோன்றும் விழுப்புண்களின் மிகுதியை, எங்ஙனம் கூறி அவன் படையாண்மையைப் போற்றுவது!'

இங்ஙனம் வியக்கின்றார் தமிழ்ச் சான்றோர். அந்த வியப்பினாலே, ஓர் அரிய மறமாண்பினனான மாவீரன் ஒருவனது புகழமைந்த போர்க்களச் செயலது மேம்பாட்டையும் நமக்குக் காட்டுகின்றார்.

## 17. கைபார்த் திருப்பன்!

தகடூர் மறவன் ஒருவனின் தறுகண்மையினை மேலே கண்டோம். சேரரது படைமறவன் ஒருவன் தன்னுடைய படைத் தலைவனின் மெய்க் காப்பாளனாகச் சென்று, களப்போரிற் கலந்து கொள்ளுகின்றான். அவனைப்பற்றி இங்கே காண்போம்.

தலைவன் மதஞ் சொரியும் களிற்றின்மீது அமர்ந்தவனாகப் படையினை நடத்திச் சென்று கொண்டிருக்கின்றான். அப்பொழுது, தகடூர் மறவர்கள் சிலர் குதிரைகளைச் செலுத்திக் கொண்டு சேரப் படையணிகளைப் பிளந்து ஊடுருவியவராகக் கூற்றுவனின் தூதர்களைப் போலக் கடுவேகத்துடன் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒருவன் எறிந்த வேல் ஒன்று, அந்தப் படையணித் தலைவனின் உயிரைக் குடித்துவிடுகின்றது.

அதனைக் கண்ட வீரன் சினங்கொள்ளுகின்றான். ''அந்த வேலுக்கு உரியவனைக் கொன்று, அவன் கைவேலை வெற்றிச் சின்னமாகக் கொண்டு வருவேன். அங்ஙனம் கொண்டு வராவிட்டால், பொழுது விடிகின்ற நேரத்திற் சென்று, எவ்வை கடிபட்டுக் கிடக்கும் இல்லகத்தே சென்று, என் கையினைப் பார்த்தபடியே கோழைபோல முடங்கிக் கிடப்பேன்'' என்கின்றான்.

செவ்விக் கடாக்களிற்றின் செம்மற் றகத்தெறிந்த
கௌவை நெடுவேல் கொணரேனேல்—எவ்வை
கடிபட்ட வில்லகத்து கைபார்த் திருப்பன்
விடிவளவிற் சென்று விரைந்து.

(புறத்: 1301)

'செவ்விய பேராற்றலையுடையதும் மதம்பொழிவது மான களிற்றினது, செவ்விய மத்தகத்திடத்தே எறிந்த ஆரவாரத்தையுடைய நெடிதான வேலினை, மீளவும் சென்று பற்றிக் கொணராது போவேனேல், எவ்வை கடிபட்ட இல்லகத்து, விடிவளவில் விரைந்து சென்று, கைபார்த்து இருப்பன்' என்பது பொருளாகும்.

'எவ்வை கடிபட்ட இல்' என்றது பேய்வந்து விழுப் புண் பட்டானை வருத்தாது வேம்பும் வெண்சிறு கடுகும் தூவிக் காவற்குட்பட்டதாக விளங்கும் வீடு, 'அங்குச் சென்று விடிவளவிற் கைபார்த்திருப்பேன்' என்றதனால், அம் முயற்சியில் அழிவெய்திப் புண்பட்டுக் கிடந்து சாவை எதிர்நோக்கி இருப்பேன் என்று வஞ்சினங் கூறிய தாகக் கொள்க.

'தன் கைவேலினைப் பகைவரது களிற்றின் மத்தகத் தெறிந்து களித்த தகடூர் மறவன் ஒருவன், அதனைக் கொன்று போக்கிய தன் நெடுவேலினை மீட்டுவருவதாக ஆண்மை கூறியது இது' வெனவும் உரைக்கலாம்.

எங்ஙனமாயினும், பழந் தமிழரது போர்மற மாண்பு இதனாற் புலப்படுதலைக் கண்டு நாம் திளைத்தல் வேண் டும். மறமாண்புடன் நாட்டைக் காக்க முன்வருதல் நம் கடமை என்னும் உணர்வு நம்மிடையே நிலைபெறு தற்கு இச் செய்யுளைப் பன்முறை கற்றுப் பாராயணம் செய்தல் வேண்டும்.

# 18. இரப்போனுக்குக் கரப்போன்

சேரரது முன்னணிப் படை, யானைத் திரள்களுடன் கூடியதாகத் தகடூர் நகரை நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கிறது. ஊரின் எல்லைக்கண், அதனைச் சென்று தன்னந்தனியனான ஒரு தகடூர் மறவர் தலைவன் தடுத்து நிற்கின்றான்.

அவனது தறுகண்மையைக் கண்டு சேரர் படையினர் வியப்புடன் திகைத்து நின்றாலும், அவனது அழிவை நினைந்து.அவனுக்கு அறிவுரை கூறி விலகிச் செல்லுமாறு செய்தற்கும் நினைக்கின்றனர்.

ஒரு வீரன் சொல்லுகின்றான் :

''கூற்றை யொப்பச் சினந்து வருகின்ற எம்முடைய களிற்றுப் படையினை எதிர்க்கத் துணிந்து முன்நிற்கும் அறியாமையாளனே! வீணின் அழிதல் வேண்டா! ஓடிப் போய்விடு'' என்று.

அதனைக் கேட்டதும், அங்ஙனம் தடுத்து நின்ற தலைவனின் சொற்களிலே நெருப்பெழுகின்றது. அவன் தோள்கள் பூரிப்புடன் நிமிர்கின்றன. அவன் கூறுகின்றான்:

''விரைய வரும் களிற்றின் மேலோனே! நாகத்தைப் போல நன்றாக நெடிதாகத் தொங்கும் பெரிதான துதிக்கையினையுடைய, காய்கின்ற சினத்தையுடைய கலிமானோயே!

''வெள்ளம்போலப் பெருகிவரும் தானையினை யுடைய நும் வேந்தனைப் போல, அதோ வருபவன் தோற்றுகின்றான். அவன் கண்முன்பாகவே உங்கள் படையணிகளின் உள்ளே புகுந்து அழித்து, உங்கள் நடுவிற் புகுவேன் யான். அங்ஙனம் புகாது போயினேனாயின், தன்னை வந்து இரப்போனது இல்லாமை நிலையைக் கண்ட பின்னரும், அவனுக்கு யாதும்

கொடாது தன்பாலுள்ள செல்வத்தை ஒளித்து வாழ் பவனின் சிறுமையைப் போன்ற பழியினை யானும் அடைவேனாக'' என்கின்றான்.

**கலிமா னோயே கலிமா னோயே**
**நாகத் தன்ன நன்னெடுங் தடக்கைக்**
**காய்சின யானைக் கலிமா னோயே**
**வெள்ளத் தானைநும் வேந்தொப் பான்முன்**
**உள்ளழித்துப் புகேஎ னாயின் உள்ளது**
**இரப்போன் இன்மை கண்டும்**
**கரப்போன் சிறுமை யானுறு கவ்வே!**

(புறத் : 1304)

இந்த மாவீரன் தானுரைத்த வஞ்சினத்திற்கு ஏற்பவே படையணிகளிற் புகுந்து, ஊடறுத்துச் சென்று பேரழி வினைச் செய்தனன் என்றும், அந்தப் போரிலே தானும் வீழ்ந்துபட்டனன் என்றும் நாம் கருதலாம்.

இவ்வாறு, தன்னாண்மை சிறந்த தறுகண்மையாளர் வாழ்ந்து சிறந்த தமிழினத்தைச் சார்ந்தவர் நாம் என்று நினைக்க, நம்மிடமும் இத்தகைய மறமாண்பு கால் கொள்ளும் அல்லவோ!

## 19. போரில் முனைக!

தகடூர்ப் போர் உச்சக் கட்டத்தை அடைந்து விடு கின்றது. தகடூர் நகரைச் சுற்றிலும் சேரர்களது பெரும் படை பாசறையிட்டுத் நகரை முற்றியிருக்கின்றது. அதிகமானோ, தன் நண்பர்களான சோழர்களது படைத் துணையை எதிர்பார்த்தவனாகக் கோட்டைக்குள் அடைத்திருக்கின்றான்.

சோழர் படை வருமானால், சேரர் படையின் பின்னணியில் அதுவும், கோட்டைக் குள்ளிருந்து வெளி

யேறித் தானும் இரு பக்கமுமாக நெருக்கிப் போரிடலாம் எனவும், அங்ஙனம் வாய்ப்பின் சேரர் அழிவர் எனவும் அதிகமான் கருதியிருந்தான்.

இந்த நிலையினால், போரிடத்தே ஒரு செயலும் அற்ற அமைதிநிலை சில நாட்களாக நிலவியது. அதிகனின் இந்த நிலையினைக் கருதியபோது, அது எந்நிலையில் அவனுடைய வெற்றிக்கு உதவுமாயினும், அதன் அடிப்படை தமிழ் மரபிற்குப் பொருந்தாததாகும் என்பதனைச் சான்றோர்கள் உணர்கின்றனர்.

அதிகமானிடம் சென்று, அவனிடம், போர்நிலை பற்றி உசாவுகின்றபோது, அவன், தான் கோட்டையை விட்டு வெளியேறிச் சேரர்களைத் தாக்கியழித்தற்கான தக்க சமயத்தை எதிர்நோக்கி இருப்பதாகக் கூறுகின்றான்.

தன் திட்டம் யாதென்பதனையும் அவனால் தெளிவு படுத்த இயலவில்லை. இந்தச் சூழ்நிலையில். ஒரு புலவர் அதிகனின் தன்மை பாராட்டக் கூடியதன்று என்பதனை வெளிப்படையாகவே கூறிவிடுகின்றனர்.

''கூற்றுவனை ஒப்பவனான பெருஞ்சேரல் இரும்பொறையானவன், நின் கோட்டை வாயிலினின்கண் வந்து முற்றியுள்ளான். நின்னை அழிப்பதையும் தன் முடிபாகக் கொண்டுள்ளான்.

''இங்ஙனம் செயலாற்றிய அவனைச் சென்று அடுதலே நீ செய்யவேண்டுவதான கடமையாகும். அங்ஙனம் அடுதற்கு நின்னால் இயலாது போகுமானால், அவன் போரினை எதிரேற்றுக் களத்திலே நீ சாதல் வேண்டும். இவ்விரண்டனுள் ஒன்றே நீ செய்ய வேண்டுவதும், நினக்குப் பெருமை தருவதும் ஆகும்.

''அங்ஙனம் சாவதற்கும் நீ விரும்பாயாகிக் கோட்டைக்கு உள்ளாக இருந்து வருவது நினக்குச் சான்றோ

ரால் மதிக்கப்படும் சிறப்பைத் தருவதும் அன்று. நினக்குப் புகழ் தருவதும் அன்று. இதனை அறியாயாய் நீ கேட்டார்க்கு மாற்றம் மிகவும் தந்துகொண் டிருப்பது முறையாகுமோ?

**கூற்றுறழ் முன்பின் இறைதலை வைத்தபின்**
**ஆற்றி யவனை அடுதல்; அடாக்காலை**
**ஏற்றுக் களத்தே விளிதல்; விளியாக்கால்**
**மாற்றம் அளவும் கொடுப்பரோ, சான்றோர்தம்**
**தோற்றமும் தேசும் இழந்து!**

(புறத்: 1314)

இங்ஙனம் அறமுறைத்த சான்றோரது சொற்கள் அதிகனின் தமிழ் மாண்பையே சுட்டிப் பழிப்பதாக அமைந்துவிட, அவன் பெரிதுஞ் சினங்கொண்டு எழுகின்றான். சேரரது படைகளிற் புகுந்து, அவற்றை அழிக்கும் செயலையும் மேற்கொள்ளுகின்றான்.

## 20. தாமாகவும் போகும் உயிர்!

தகடூர் முற்றுகையின் முதற்கட்டம் தொடங்கி விட்டது. பெருஞ்சேரல் இரும்பொறையின் படை மறவர்கள் தகடூர்க் கோட்டையைச் சூழவிருந்த காவற் காட்டினை அணுகிவிடுகின்றனர்.

தேர்கள், யானைகள், குதிரைகள் இவற்றின் மேல் அமர்ந்தவராகப் படையாண்மைமிக்க தலைவர்கள் பலர் அணியணியாக வருகின்றனர். காவற்காட்டை நெருங்கும் வரையும் பேராரவத்தோடு செருக்குடைய வீரமொழி களைப் பேசியபடியே மேல்வந்த உழிஞை மறவர்கள், காவற்காட்டை அணுகவணுக, இனந்தெரிந்துகொள்ள முடியாத ஐயத்திற்கு உள்ளாகின்றனர்.

காடடர்ந்த அந்தக் காவற்காட்டை எவ்வித எதிர்ப்பு மின்றித் தங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்குத் தகடூர்

மறவர்கள் விட்டுவிடுவார்கள் என்று அவர்கள் ஒரு போதுமே நினைக்கவில்லை. கடுமையான போரினை நிகழ்த்தித்தான் காவற்காட்டை அணுகவேண்டியதிருக்கும் என்று நினைத்திருந்தார்கள். ஆனால், எதிர்ப்பவர் எவரையும் காணாதுபோகவே அவர்கள் திகைப்புற்றனர். தகடூர் மறவர்களின் திட்டத்தை அறியவியலாதவராகப் பெரிதும் மனம் கலங்கினர்.

அந்த நேரத்தில், உழிஞைப் படையினர் காவற்காட்டை நெருங்கி விடுகின்றனர். திடுமெனத் தகடூர்க் குதிரை வீரர்கள் காட்டுக்குள்ளிருந்து கடுவேகமாகப் பாய்ந்து சேரப்படையினரை வெட்டி வீழ்த்துகின்றனர். அவர்களுடைய ஆவேசமான தாக்குதலாற் சேரரின் முன்னணிப்படை சிதறுகின்றது. பலர் வெட்டுண்டு வீழ்கின்றனர். இரத்த வெள்ளமும் குறையுடல்களும் எங்கணும் மலையெனக் குவிகின்றன. சாவைத் தழுவவதென்ற முடிபுடன் வந்து மோதுகின்ற நொச்சி வீரரான தகடூர் மறவர்களது வாளாற்றலுக்கு முன்னர்ச் சேரப் படையினர் நிலைகுலைந்து போகின்றனர்.

காவற்காட்டுப் போரை முன்னின்று நடத்திய சேரத் தளபதியின் உள்ளம், தன் படையின் பேரழிவைக் கண்டதும் கொதிப்படைகின்றது. அவன் கண்கள் அனலைக் கக்குகின்றன. குதிரையை வேகமாகச் செலுத்தியவனாகக் கலைந்து ஓடும் தன் படைமறவர்களைத் தடுத்து நிறுத்த முனைகின்றான்.

"போரின் கடுமை மிகுதியாக இருக்கின்றது. முறையாகத் திட்டமிட்டும், ஒற்றரைக் கொண்டு ஒற்றியறிந்தும் அதன்பின்னரே தாக்குதலில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். இன்றேல், நம் முன்னணிப்படை முற்றவும் அழிந்து போகும். காட்டின் மறைவிலிருந்து நொச்சி மறவர்கள் வெளிவருவதனால், அவர்களை முறையாக எதிர்த்து நிற்க நமக்கு வழியே இல்லை. ஆகவே, நம் படையின் அழிவைத் தடுக்க வேண்டுமானால், இப்போது

பின்வாங்கிப் போவதொன்றுதான் வழி' என்று தலைவனிடம் கூறுகின்றான் ஒருவன்.

அதனைக் கேட்டதும் தலைவனின் சீற்றம் மிகுதியாகின்றது. தன் மறவரைத் தடுத்துநின்று, அவன் கூறுகின்ற வீரவாசகம் இதுவாகும்.

'உயிரானது இந்த உடற்கூட்டிலே நிலைத்து இருந்துவிடக்கூடிய ஒன்றென்று சொன்னாலும், அதனைக் காத்துப் பேணுவதற்கு எந்தப் பழியினையும் நாம் மேற்கொள்ளலாம். ஆனால் அதுவோ, களத்தில் இல்லாவிட்டாலும், என்றாவது ஒரு நாள் தானாகப் போய்விடக்கூடியதாகவே இருக்கிறது.

'ஆகவே, உயிரைப் பேணுவதற்காகப் பின்வாங்குவதில் பொருளில்லை. போர்க்களத்தில் வெற்றி பெறுவதோ, அல்லது வீரமரணத்தைத் தழுவுவதோதான் சிறப்பாகும். பழி வருவதான புறமுதுகிடுதலைச் செய்வது சிறப்பே யாகாது, அந்தப் பழி என்றுமே மாறாது, வழி வழி வரும் சந்ததியினரையும் சூழ்ந்து நிலைத்த பழியினை உண்டாக்கும்.

''ஆனால், களத்தில் வீழ்ந்தாலும் வெற்றிபெற்றாலும் வருவது எப்போதும் மேன்மைதான். பலரும் போற்றுகின்ற தலைமைப்பாடும் அதனால் அடையப் பெறலாம். பலரும் தொழுது போற்றும் வானுறை வாழ்க்கையையும் அதனால் நாம் அடையலாம். ஆகவே, மேன்மைக்கு உரியனவே செய்யுங்கள். மீண்டும் களம் புகுந்து எதிர்ப்படையினை அழிப்பதிலேயே ஈடுபடுங்கள்''.

இவ்வாறு வீரமுழக்கம் செய்து நிற்கின்றான் தலைவன். அவனுரை, பின்னோக்கி ஓடத்தொடங்கினவரைச் சிந்திக்கவும். முன்னோக்கி ஆர்த்தெழவும் தூண்டுகின்றது.

181744

தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்கு
ஒற்கத் துதவினா னாகுமாற்—பிற்பிற்
பலர்ஏத்தும் செம்மல் உடைத்தாற் பலர்தொழ
வானுறை வாழ்க்கை இயையுமால் அன்னதோர்
மேன்மை யிழப்பப் பழிவருப செய்பவோ
தாமேயும் போகும் உயிர்க்கு. (புறத் : 1315)

'உயிரைப் பாராட்டாது சென்று கடனை நிறை வேற்றிப் புகழ் பெறுவீராக' என்று, தன் படைமறவரை ஊக்கப்படுத்துகின்ற சிறந்த செய்யுள் இதுவாகும். படை மறவரது மறமாண்பிற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டும் இது.

## 21. கண்ணும் படுங்கொல்!

தகடூர் நாட்டு மறவன் ஒருவன், காவற்காட்டின் ஒரு பகுதியைத் தன்னொத்தாரான வேறு சில மறவர் களுடன் ஒரு பகல் முழுதும் காத்து நின்றிருந்தான். அன்று பகல்முழுதும் அவனுடைய காவல் எல்லையருகே சேரப்படை எதுவும் வரவில்லை. வேறு பகுதிகளிலோ கடுமையான மோதல்கள் நிகழ்ந்தன.

மாலை வேளையில், தன் பகுதிக் காவலை ஏற்கவந்த சிலர்பால் ஒப்பித்துவிட்டு, அவன் சோர்வுடன் வீடு திரும்பு கின்றான். அவனோடு களப்போரிற் கலந்துகொண்டு திரும்புவாரான சிலரும் வந்துகொண்டிருக்கின்றனர்.

''நம்முடைய மறவருள் ஒருவன் இன்று சேரருள் இருபது மறவர்களை வெட்டிவீழ்த்தி நின்று முழக்க மிட்டான். யானைகள் இரண்டும் குதிரைகள் பலவும் அவன் வாளுக்கு இரையாயின. அவன் தோற்றத்தைக் கண்டதும் பகைப்படை மறவர்கள் கலங்கி ஓடத்தொடங் கினர். முடிவில், அவனும் வெட்டுண்டு வீரசுவர்க்கத்தைத்



0-,1A,T N91

தழுவினான். அவனைப்போலப் போரிடுவோமாயின், நம் தாயகத்தை எவர்தாம் கவர முடியும்'' என்று, தானறிந்த நிகழ்ச்சியை ஒரு வீரன் செருக்குடன் கூறிவருகின்றான்.

'மேலைமுனைப் பாதுகாவல் தலைவன் இன்று ஆற்றிய பெரும்போரை நினைந்தாலும் நம் நெஞ்சம் விம்முகின்றது. காலனைப்போலப் படையணிகளுட் புகுந்து கொன்று குவித்து வீரவிளையாட்டு விளையாடி நின்றான் அவன்! அவன் போராண்மைகண்டு திகைத்து நில்லாதார் தாம் யார்? அவன்தான் அதோ விழுப்புண் பட்டவனாகப் பிறர் தன்னைச் சுமந்து செல்ல, அதோ போய்க் கொண்டிருக்கின்றான்' என்று, புண்பட்டு வரும் மாவீரனைக் காட்டி ஒருவன் கூறுகின்றான்.

இப்படிப் பலரும் சொல்லிவந்த களத்து நிகழ்ச்சிகளை கேட்ககேட்க, வீரனின் உள்ளம் வெறிகொண்டு விடுகின்றது. இரவு முழுதும் உறக்கம் கொள்ளாதவனாகக் கிடந்து, அன்றைய போரில் தான் கலந்து கொள்ளும் வாய்ப்பற்றுப் போனதை நினைந்து, கவலை கொண்டிருக்கின்றான் அவன்.

தம் நாட்டின்மீது பகைவர்கள் படை கொண்டுவந்து முற்றியிருந்த கொடுமையினால் வேதனையுற்றிருந்த அவன் தாயும், பிற தாய்மார்களும் திண்ணையில் அமர்ந்தவராக, அன்றையப் போரைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

அப்பொழுது ஒருத்தி, 'நின் மகன் இன்னும் உறங்கவில்லையோ?' என்று கேட்கத், தாய் தன் மகனின் நிலையைக் கூறுகின்றாள்.

'வேற்றான் வந்து சூழ்ந்துள்ள போர்க்களத்திலே, ஒருவர் தம்மை எதிர்த்து நிற்கும் மற்றொரு சாராருக்கு எதிராகப் போர் மேற்கொண்டு சென்றனராயின், ஒன்று அவரை வீழ்த்தி வெற்றி கொள்ளல் வேண்டும்; அல்லது களத்தில் தாமாவது பட்டு வீழ்தல் வேண்டும்.

'இவை இரண்டும் நேராதவனாக, இவன் களத்தினின்று திரும்பி வந்துள்ளான். அந்தக் கவலையினால் மனம் நொந்தும் கிடக்கின்றான். அவன் தூங்குதலும் செய்வானோ?' என்கின்றாள்.

தம் மகனின் போர்மறத்தினும், கடமையுணர்விலும், அந்தத் தாய்க்கு அவ்வளவு நம்பிக்கை! அவ்வளவு பெருமிதம்! நாட்டைக் காப்பதில் அந்த இளைஞனுக்கு அவ்வளவு ஆர்வம்!

**நகையுள்ளும் நல்லவை எய்தார் பகைநலிய**
**... ... ... ... ... ...**
**வேற்றுக் களத்தில் ஒருவர்தம் மாறாகச்**
**சென்றால், ஒருவர் மேற்**
**புண்ணும் படுக்கலான், தான் படான், போந்தாரக**
**கண்ணும் படுங்கொல் கவன்று!** (புறத்: 1316)

காலையில், அன்றைப் போருக்கு அணிகொண்டு திரண்ட படைமறவர்களுள் ஒருவன், இரவெல்லாம் உறக்கமற்றவனாகி வந்துகொண்டிருந்த ஒருவனைக் கண்டு, அவனுடைய மறமாண்பினை வியந்து கூறுவதாகவும் இதனைக் கொள்ளலாம்.

## 22. அறியுநர் என்னும் செருக்கு

வேந்தரால் தாம் அறிந்து பாராட்டப் பெற்றவர் என்னும்போது, அந்தப் பெருமித நிலையால், படைமறவர் செருக்குடன் பேராண்மையில் ஈடுபடத் தொடங்குவர். களத்தில் பகைவரோடு போரிட்டு வீழ்ந்தாலும், அந்தப் பாராட்டு அவர்கட்குரிய பெறற்கரிய பேறாகக் கொள்ளப்பட்டு, அவர்களின் குலத்தவரால் மதிக்கப்படும். இப்படிப்பட்ட செருக்குடையராவதனையே மறவர்கள் அனைவரும் விரும்புவர். அன்றி, உயிரைப் பேணியவராக ஓடிஒளிதலை எவருமே கருதமாட்டார்கள்.

சேரரின் முன்னணிப் படையினை "எதிர்நின்று தடுத்துத், தமியனாக நின்று போரிட்டு, அந்தப் போரில் வீழ்ந்தும் போயினான் ஒரு மறவன். அவனுடைய மறச் செயலை அறிந்து வியந்த மன்னன், அவனுடைய பெயரினைப் போற்றி உரைத்துப் பூரிக்கின்றான். அந்தப் பூரிப்பினை அறிந்த மறவர்கள் ஆரவாரிக்கின்றனர். அவர்களுள் ஒருவன், தானும் அத்தகைய புகழ்ச் செயலை ஆற்றப் போவதாகக் கூறவே, அவன் அருகிலிருந்த ஒருவன், அந்தச் செயலினது அருமையினை விளக்குவான் போல, இப்படிக் கூறுகின்றான்.

''வேற்றாரின் வேற்படை வீரர்கள் வெள்ளம்போல் அணுகி வருகின்றனர். அப்பொழுது, ஆற்றின் கண் வருகின்ற கடுமையான வேகத்தையுடைய புதுப்புனலைத் தடுத்து நிற்கின்ற கல்லணையைப் போல, அவ் வீர மறவன், தானே தனியனாகத் தடுத்து நின்றான். எதிர்வரும் பெரும்படைக்கு எதிரே தான் ஒருவன் தடுத்து நிற்பதனால், தான் அழிவது உறுதி என்பது கருதி அவன் நடுங்கினானும் அல்லன். தளர்ந்து பின் நோக்கினானும் அல்லன். அசையாது நின்று, அணுகியவரை வெட்டி வீழ்த்திக்கொண்டிருந்தான்.

'அவனைப் போலத் தூசிப்படையைத் தாங்கி நிற்கும் துணிவுடையார்க்கு அல்லாமல், பிறருக்கு, அழகுமிகுந்த இளந் துளிர் மாலையினையும் முழவனைய தோள்களையும் உடைய மன்னரால் அறியப்பட்டார் என்னும் செருக்கினைப் பெறுதல் எளிதாமோ?

அஃது எளிதன்று என்று கூறி, அந்த வீரனின் தறுகண்மையினைப் போற்றுகின்றனர் மறவர்கள்.

**வேற்றானை வெள்ளம் நெரிதர யாற்றுக்**
**கடும்புனற் கற்சிறை போல நடுங்காது**
**நிற்பவற் கல்லால் எளியவோ-பொற்பார்**
**முறியிலைக் கண்ணி முழுவுத்தோள் மன்னர்**
**அறியுநர் என்னுஞ் செருக்கு.** *(புறத்: 1318)*

'மன்னர் அறியுநர் என்னும் செருக்கு எளியவோ?' என உரைத்து, அதனைத் தாமும் அடைவதனை விரும்பி நிற்கும் மறமாண்பினைச் செய்யுள் நன்றாக நமக்குக் காட்டுகின்றது.

## 23. மூத்தார் இளையவர்

சிலர் உடலளவில் மூத்தாராகி விளங்குகின்றனர். சிலர் அறிவினாலும் பண்பாலும் மூத்தாராகிச் சிறப்புப் பெறுகின்றனர். உடல் முதுமையானாலும் அறிவில் இளையராயிருப்போரும் உளர்; உடலின் இளமையா யினும், அறிவில் முதியராக விளங்குவோரும் சிலர்.

போர்மறத்தைப் பொறுத்தவகையிலும் இந்த முதுமை என்பதும் இளமை என்பதும் காணப்படும்.

'தாம் பிறந்துள்ள அந்த மிக்க சிறுபருவத்தேயும், பெய்யப்பெற்ற மலர்களையுடைய குளிர்ந்த மாலை யினை அணிந்த தம் மன்னவர்கட்குத் தம் உடம்பினைப் பரிசிலாகக் களத்தே கொடுத்துச் சிறந்தார்கள், முத்தோர் என்னும் மதிப்பிற்கு உரியவர்கள் ஆகின்றனர். இப்படித் தான் வீரர்களை ஆன்றோர்கள் அனந்தறியக் கருதுவார் கள்.

இந்தத் தகைமையை எடுத்துச்சொல்லி, அவரால் உயர்த்துப் போற்றப்படுகின்ற நல்ல சிறப்பைத் தானும் அடையப்போவதாக ஆண்மை பேசுகின்றான் ஒருவன்.

அவனது இளமை மாறாத வடிவைக் கண்ட வீரருள் ஒருவன், அவன்பாற் சென்று, 'நீ மிக்க இளையவன் தம்பி! நீ போர்க்கு வருதல் வேண்டா' என்று கூறவும், அந்தச் சிறுவன், தன் ஆண்மைதோன்ற உரைப்பது பொருளாக அமைந்த செய்யுள் இது.

**பிறந்த பொழுதேயும் பெய்தண்டார் மன்னர்க்கு**
**உடம்பு கொடுத்தாரே மூத்தார்-உடம்பொடு**
**முற்றுழிக் கண்ணும் இளையரே தங்கோமாற்கு**
**உற்றுழிக் காவா தவர்!** (புறத்: 1319)

'பிறந்திருக்கும் அந்தப் பொழுதிலேயும், பெய்த தண்ணிய மலர்களையுடைய மாலையினை அணிந்த தம் மன்னவருக்குத் தம் உடம்பினைக் காணிக்கையாகக் கொடுத்தவர்களே, அறிவினான் மூத்தார் ஆவார்கள்.

'அன்றி உடம்பொடு முற்றியிருந்தும், மன்னர்க்கு ஓர் இடையூறு வந்தவிடத்து உதவாது அயர்ந்திருப்பவர் எவரோ அவரே இளமை உடையவர் ஆவார்கள்!

இங்ஙனம் ஆண்மை மிகுதி தோன்ற உரைத்துப் போர்க்கெழுந்த மறவர் இளைஞர்களைக் கொண்டிருந்தது தகடூர் நாடு. நாட்டுரிமைக்குப் போரிட முற்படும் அத்தகைய நல்லோரை உடையதாக இருந்தமையால் தான், இன்றும் நாம் அதன் புகழைப் போற்றுகின்றோம்!

## 24. வேந்தன் நீ ஆயினாய்!

தகடூர்ப் போர்க்கண் இருதிரத்தும் வெற்றி தோல்வி காணும் பொருட்டாக, உழிஞையாராகச் சேரரும், நொச்சியாராகத் தகடூர் நாட்டாரும் திகழ்ந்தனர். ஆயினும், இரு திறத்தார்க்கும் படைத்துணையாக வந்து மற்றும் பற்பல குறுநில வேந்தர்களும் அமைந்திருந்தனர். அவர்களுள், தகடூரார்க்குத் துணையாக அமைந்திருந்த வேந்தன் ஒருவன் ஒரு சமயம், தன்னுடைய படையணியுள் ஆற்றல் மிகுந்தவனாகிய ஒரு மறவனை அழைத்து, அவனுக்கு ஒரு பணியினையும் விதிக்கின்றான்.

''வீரனே! சேரரோ மிகவும் படைபலத்துடன் வந்து பாடியிட்டிருக்கின்றனர். யான் கூறும் செயலோ மிகவும்

இடர்ப்பாடானது. அவர்களது படையணிகளுள் ஆற்றல் மிகுந்தானாக விளங்கி, நம் பகுதிப் படைகளைப் பேரழிவுக்கு உட்படுத்தினான் கொடியவன் ஒருவன்; அவனைக் கொல்லுவது குறித்தே நின்னை ஏவுகின்றேன். அவனுடன், அவன் படையினையும் நீ சென்று அழித்து வருதல் வேண்டும்.

''இந்தச் செயலை இரவுப்பொழுதில் அவர்கள் பாடியிட்டு உறங்கியிருக்கும் வேளையிலே சென்று செய்தல் சிறந்தது. அயர்ந்த உறக்கத்தே ஆழ்ந்திருக்கும் அவர்களிடையே, காவலர் அறியாதபடி கரவாக மறைந்து சென்று, அந்தக் கொடியானையும் அவன் படைமறவரையும் கொன்றுவிடல் வேண்டும். இதனைச் செய்யத் தகுதி உடையவர் நின்னையன்றிப் பிறர் எவருமில்லை. ஆகவே, இதனை நம்முடைய நலத்தைக் கருதித் தகுந்த துணைவருடன் சென்று நிறைவேற்றி வருவாயாக'' என்கின்றான்.

வேந்தனின் ஆணையைக் கேட்டதும் வீறுகொண்டு எழவேண்டிய அந்த வீர மறவன், அங்ஙனம் எழாதது மட்டுமன்று, தன் வேந்தன்பாற் சீற்றமும் கொள்ளுகின்றான்.

படைமுகத்து எதிரியை எதிர்நின்று போரிட்டு வெல்வதோ, அன்றி அச்செயலுள் வீழ்வதோ ஆண்மையாகுமே அல்லாமல், கோழை போலப் பதுங்கிச் சென்று, அவர் உறங்கும் காலத்தே கொல்வது ஆண்மைச்செயலாக ஆகமாட்டாது.

ஆண்மையாளனாகிய தன்னை, 'இரவிற் செல்க' என்று கூறியது, தன்னுடைய ஆண்மையினைப் பழித்ததாகும் என்றே சீறுகின்றான் அவன்.

'கடல்போன்ற வேல் வீரர்களையுடைய பகைப் படையினரைப் பகலிற்சென்று பொருதுக என்று கூறின்

யான் அஞ்சி நிற்கும் தகையனோ? அல்லவே! அங்ஙன மாகிய என்னை நோக்கி, இரவோடிரவாகச் சென்று அழித்து வருக என்று ஏவுகின்றனை! மிக விரைந்து சென்று செய்க எனவும் ஆணையிடுகின்றனை!

'நீ என் வேந்தன் ஆயினாய். அதனால், என்பால் இத்தகைய இழிசெயலைச் செய்யக் கூறிய நின்னைப் பொறுத்தேன். அன்றிப் பிறர் யாவராயினும் இங்ஙனம் என்பாற் போந்து என்னை நோக்கிக் கூறியிருப்பின், அங்ஙனம் சொன்ன அவருடைய நாவானது, மீண்டும் அவர் வாயுட் புகுந்திருக்குமோ? அதனை வெட்டி வீழ்த்தி யிருப்பேனே!'' என்கின்றான் அவன்.

**பரவைவேற் றானைப் பகல்ஞ்சு வேனா**
**இரவே எறியென்றாய் என்னை—விரைவிரைந்து**
**வேந்தன்நீ யாயினாய் அன்றிப் புகுவதோ**
**போந்தென்னைச் சொல்லிய நா!** (புறத் : 1320)

பகைவரை அழித்தல்தான் படை மறவரது நோக்க மாயினும், அவ்விடத்தும், வஞ்சித்து அவரைக் கொன்றொழிக்க நினையாத பேராண்மை கொண்ட மறவனை, நாம் இந்தச் செய்யுளிற் காண்கின்றோம். தமிழரது மறமாண்பு, அதிலும் தகடூர்நாட்டு மறவரது செவ்விய மறமாண்பு, நம்மைச் சிந்தை சிலிர்க்கச் செய்வதாக விளங்குகின்றது!

## 25. நாணுத் தரும்!

''சேர நாட்டாரின் களிற்றுப்படை நம் நகரை நோக்கி விரைய வந்து கொண்டிருக்கின்றது. அதன் வரவினைத் தடுத்து நிறுத்தத் துணிவுடையார் விரைந்து செல்க'வென்று தகடூர்ப் படைத் தளபதிகளுள் ஒருவன், தன் தலைமையிலிருந்த படைமறவருக்கு ஆணையிடு கின்றான்.

அந்த ஆணை பிறந்ததும் படையினரிடையே ஆரவார ஒலி எழுகின்றது. அவர்களுள் களிற்றுப்படைப் போர்க்குப் போவாராக ஒவ்வொருவரும் முந்துகின்றனர். 'இன்று நம் வீரத்திற்கு ஒரு நல்ல வாய்ப்பு' என்று பெருமிதங் கொண்டு, தத்தம் குதிரையேறிச் செல்வதற்குப் புறப்படுகின்றனர்.

இங்ஙனம் திரண்டு சென்ற தகடூர் மறவர்களின் கூட்டம், கானத்துக் கடும்புலிகளைப் போலச் சென்று, வருகின்ற சேரரது களிற்றுப் படையணிகளுள் ஊடறுத்துப் புகுந்து அதனைக் கலக்குகின்றது. புகுந்தவர் சிறு கூட்டத்தவரே எனினும், அவர்களது போர் வெறியின் கடுமையாற் சேரப்படையணி சிதைகின்றது. வெட்டுண்டு வீழ்ந்தோரும், புண்பட்டுக் கிடப்போருமாகக் களத்தே ஒரே பேரொலி எழுகின்றது. 'வெட்க வெட்டுக எனவும்; குத்துக குத்துக எனவும்; கொல்லுக கொல்லுக எனவும்' ஒலிகள் நாற்புறமிருந்தும் எழுகின்றன.

இவ்வாறு நிகழ்ந்த போருள், தகடூர் மறவன் ஒருவன் பெரிதும் வெற்றி விளைத்துக் காலனைப் போலக் கடும்பரி செலுத்தி வெற்றியுலா வந்து கொண்டிருக்கின்றான். களிற்றின்மேல் வீற்றிருந்து போராடும் வீரர்களை வெட்டி வீழ்த்திக் கொக்கரிக்கும் அவன், களிறுகளைமட்டும் வெட்டாது விட்டுவிட்டுச் செல்லுகின்றான்.

அன்றைய தாக்குதலின் ஒரு நிலை ஒருவாறாக முடிவுறுகின்றது. சேரரின் களிற்றுப் படையணி முன்னேறுவது நின்றது. தம்முடைய இழப்புக்களைச் சரி செய்து கொள்வதிலே சேரர் படைத்தலைவர்கள் ஈடுபடுகின்றனர்.

தகடூர் மறவரும் அன்றுபெற்ற வெற்றியுடன் முழங்கியவராகத் தம் நகருக்குள் திரும்புகின்றனர். அங்ஙனம் திரும்புகின்றவர்கள், அன்றையப் போர் நிகழ்ச்சிகள் பலவற்றையும் பற்றி உரையாடியபடியே வருகிறார்கள்.

வரும் அவர்களுடைய வரவை எதிர்பார்த்துத் தகடூர் மக்கள் வெற்றிக் களிப்புடன் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையிலே, யானை வீரர்களைக் கொன்று, யானைகளை வெட்டாது விட்டுவிட்டுவந்த மறவனை நோக்கி, ஒருவன், 'தலைவனே! யானை வீரர்களை வெட்டி மாய்த்ததுடன், யானைகளையும் வெட்டி வீழ்த்தல் வேண்டுமென்றோ! அவைகளை வெட்டாது விட்டு வருவதனால், மீளவும் அவை சேரர்க்குப் பயன் படலும் கூடுமல்லவோ?' என்கின்றான்.

'நாம் கைப்பற்றிக் கொணர்ந்த சில யானைகளைக் கண்டிருப்பாய் அல்லவோ! அவை நமக்குப் பயன்பட மாட்டாவோ?' என்கின்றான் தலைவன்.

'எனினும், வெட்டிச் சாய்ப்பதுதான் நன்று' என்று கூறுகின்றான் அவ் வீரன்.

'நண்பா! வானையே வளைத்து வைத்திருப்பது போன்ற வலிமையினைக் கொண்ட நெடிய பெருங்கை யினை உடைய யானைக்கு, என் கையிலுள்ள இந்த வேற்படை உரித்தாகவேண்டும் என்பாய் நீ.

''அதனை வெட்டி வீழ்த்துதல் எனக்கும் எளிதாகவே இருந்திருக்கலாம். ஆனால், ஒன்றை மறந்து விட்டனை போலும்! எத்துணை வலியுடைதாயினும், அந்த யானை தானும் ஒரு விலங்காகும் அல்லவோ? அஃதன்றியும் ஒற்றைக் கையினை மட்டும் உடையதும் அல்லவோ? ஆகவே, அதனை வெட்டி வீழ்த்துதல் நன்று என்கின்ற ஒரு நன்மைப்பாட்டை யான் அறியமாட்டேன். அது என் வீரத்திற்கு நாணுத் தருகின்ற பழியுடைய செயலே யாகும்'' என்கின்றான் அவன்.

**வான்வணக்கி யன்ன வலிதரு நீள்தடக்கை**
**யானைக்கீ தென்கையில் எஃகமால்—தானும்**
**விலங்கால் ஒருகைத்தால் வெல்கைநன் றென்னும்**
**நலங்காணேன் நாணுத் தரும்.** (புறத்: 1320)

"யானை விலங்காதலினாலும், ஒரு கையினை மட்டுமே உடையதாதலினாலும், அதனை வெற்றி கொண்டு வெட்டிமாய்ப்பது தன் மறமாண்பிற்கு நாணுத் தருவதாகும்'' என்று உரைக்கின்றான் அந்தத் தலைவன்.

அவனுடைய மறமாண்பின் பெருமித நிலையினை நாம் இதனால் அறிகின்றோம். களப்போரின் இடையிலுங்கூட, இங்ஙனம் பண்புகொண்டு போரிடுவது, தமிழ் மறவரின் தறுகண்மையாக இருந்தது. இதனை அறியும்போது, அந்த மறவர் தலைவனை நாமும் நினைந்து போற்றி நெஞ்சிற்கொள்ளுகின்றோம்.

## 26. சான்றோர் மகன்!

சேரநாட்டுப் படை மறவர்களுக்கும் தகடூர் நாட்டுப் படை மறவர்களுக்கும் இடையே, நேரடியான கைகலப்பு ஏற்பட்டு விடுகின்றது. கொல்லும் புலிக் கூட்டங்கள் தம்முள் ஒன்றுடன் ஒன்று சினந்து மோதிக்கொள்வதைப் போல, இருதிறத்து மறவர்களும் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அந்தக் கடும்போரின் இடையேயும், ஒரு மறவன் தன்னுடைய குதிரைமீது அமர்ந்தவனாகச் சுற்றிச் சுழன்று திரிந்து கொண்டிருக்கின்றான். தன்னை எதிர்த்தாரை வெட்டி வீழ்த்திச் செருக்குடன் முன்னேறிச் செல்லும் அவன், தன்னைக் கண்டு ஒதுங்கிப்போகும் சேரர் படை மறவருக்கு யாதும் ஊறு விளைக்காது, எவரையோ தேடுவானைப் போலச் சென்றுகொண்டே இருக்கின்றான். முடிவில் அவன் எதிர்பார்த்ததும் வந்து கைகூடிற்று. சேரரது படையணிகளுள் அன்றையப் போர்க்குத் தலைமைவகித்து நடத்திவரும் தலைவனை நாடித்தான் அவன் சென்றிருக்கின்றான். அவனைக் கண்டதும் சிங்கக் குருளைபோலப் பாய்ந்து, அவனை

வெட்டி வீழ்த்தி, வீரமுழக்கம் இடுகின்றான். அவனுடைய வெற்றியைத் தகடூர்ப் படை ஆரவாரித்துப் போற்றுகின்றது. தலைவனை இழந்துபோன சேரர்படை சிதறுண்டு பின் வாங்குகின்றது.

வெற்றி முழக்கத்துடன் தகடூர் மறவர்கள் தம் ஊர் திரும்புகின்றனர். அந்த மாவீரன் பலரும் சூழ்ந்து தன்னைப் போற்றத் தருக்குடன் பவனி வருகின்றான். அவனுடைய செயலை வியந்து சான்றோர் பாடுகின்றனர்.

''பகைவரது காலாட்களுக்கு எதிராகத் தானும் ஒரு காலாளாகத் தன்னை நினைத்துக் கொண்டு, அவர்களை வெட்டி வீழ்த்துகின்றவனும் அல்லனாயினான்.

''களிற்றின் கழுத்துமேல் அமர்ந்துவரும் மேலாட்களைக் காண்பினும், அவரை வெட்டி வீழ்த்த முயல்வானும் அல்லன்.

''அவர்களையெல்லாம் வெல்வது தன்னுடைய மேதகு போராண்மைக்கு இழிவென்றே கருதினான் அவன். அச் செயல் தனக்கு நாணுத் தருவதென்றே ஒதுங்கினான் அவன்!

'வலிய போர்க்களிறுகளை வெட்டி வீழ்த்தலாமெனில், அவை விலங்கினமாக, அவற்றையும் வெட்டி வீழ்த்தாது மேற்செல்வான் அவன்!

'தலைவனை வெல்லவேண்டும் என்று தருக்குடன் மேற்செல்லும் அவன் சான்றோர் பெற்ற மகன்! செயற்கரிய செய்தலே சிறப்பெனக் கொள்ளும் செம்மாப்பு உடையவன்!'

**காலாளாய்க் காலா ளெறியான் களிற்றெருத்தின்**
**மேலாள் எறியான் மிகநாணக்—காளை**
**கருத்தினதே என்று களிறெறியான்; அம்ம!**
**தருக்கினனே சான்றோர் மகன்!** (புறத்: 1321)

''எண்ணியது முடிக்கும் ஆற்றலுடைய மறவர் பெருந்தகையாகிய அவன், தனக்கு நேரான தகுதியுடையா ராகும் வீரர்களுடன் மட்டுமே போருடற்றி வெற்றி கொள்வான்! தனக்குக் குறைந்த தகுதியினர் எதிரிட்டா லும், அவரைப் பாராட்டாது மேற்செல்வான்.'' இங்ஙனம் உரைத்துத் தகடூர் மறவரது தகுதி மேம்பாட்டைக் கூறி வியக்கின்றனர் சான்றோர்.

## 27. காப்பு அமைந்தனன்

தகடூர்க் கோட்டையின் வலியமைந்த காவல் அமைப் புக்கள் பலவற்றையும் பற்றி முன்னர்க் கூறினோம். தகடூர் மறவர்கள் எத்துணை மறமாண்பு காட்டியவராகப் போர் ஆற்றிய பொழுதும், அவர்களுடைய தறுகண்மைத் திறன் எல்லாம், கடல்போலப் பெருகி வந்து அலையலை யாக மோதிக்கொண்டிருக்கும் சேரர்படைகளுக்கு எதிரே நெடுங்காலம் நிலைநிற்க இயலவில்லை.

கோட்டை மதில்களை அடுத்துத் தொலைவாகக் காவற்காட்டை யொட்டிப் பல சிறுசிறு காவல் நிலையங் கள் இருந்தன. காவற்காட்டினுள் பகைப்படை நுழைந்து விடாதபடி தடுத்து நிற்கும் மறவர்கள் அவற்றைக் காத்து நின்றனர். இவற்றுள் சில பகைவர்க்கு வீழத் தொடங்கி விட்டன. மிகவும் கடுமையான போருக்குப் பின்னரே அவை வீழ்ந்தன. அவற்றைக் காவல் பூண்டிருந்த தலைவர் கள் ஒவ்வொருவரும் இறுதிவரை உயிரையும் பேணக் கருதாத உறுதியுடன் நின்று போரிட்டனர்.

புரிசைகள் பல இப்படி அடுத்தடுத்து வீழக் காவற் காட்டுள் அங்கங்கு நிறுவப்பெற்றிருந்த பலப்பல காவல் ஞாயில்களும் சரியத் தொடங்கின. கோட்டையைச் சார்ந்த அகழியிடத்தே நடந்த போரோ மிகமிகக் கொடி தாக இருந்தது.

அகழைக் கடக்க முயன்ற சேரநாட்டு மறவரும், அவரைத் தடுக்கமுயன்ற தகடூர் மறவரும், தத்தம் தறுகண்மையில் மேலோங்கி நிற்பாராயினர். இரு திறத்தாரும் ஒருவரை நோக்கி மற்றவர் எய்த கணைகளின் பெருக்கமோ சொல்லி முடியாது. கணைகளின் பெருக்கத்தால் அகழியே சில இடங்களில் தூர்ந்து போயிற்று என்றால், அங்கு நிகழ்ந்த போரின் தன்மையினையும், அதனிடத்து வீழ்ந்த தமிழ் மறவரின் பெருக்கத்தையும் எவ்வாறு கூறுவது!

வளத்தால் எங்கணும் கொழுமை மல்கத் திகழ்ந்த தகடூர்ப் பேரூர், இப்படிச் சூழவும் அழிபாடுற்றுக் கிடந்தது. மறவர்களின் வாளொலியும், போர்க்களத்துப் பிறபிற ஆரவாரங்களுமே எப்புறமும் நிலவின.

இந்த நிலையிலே களத்தே விழுப்புண்பட்டான் ஒரு வீர மறவனை, புண்ணுக்கு மருந்திட்டவராக, அவன் இல்லத்தார் பேணிக் காத்து வருகின்றனர். பேய்க் குற்றம் ஏற்பட்டு அவன் இறந்துபோய்விடக் கூடாதென்று கருதி வேம்பும் வெண்சிறுகடுகும் தூவியுள்ளனர். கருமையான தழையினையுடைய நொச்சி மாலையினைச் சூடியவனாகத் திருந்திய வேலினையுடைய அவன் ஆற்றிய போர்ச்செயல்களைப் பலரும் வியந்து பேசுகின்றனர்.

இப்படித் தொடர்ந்து பலகாலும் நிகழ்ந்து வந்த போரினாலே ஏற்பட்ட இழப்புக்கள், தகடூரார்க்கு மிகுதியாக இருந்தன. அவற்றை எண்ணி அவர்கள் வருந்திய வருத்தமும் மிகுதியாயிருந்தது. மக்கள் பலருமே வருந்துவார் ஆயினர். ஆரவாரத்தாலும் வளத்தாலும் சிறந்து விளங்கிய தகடூர் நகரம், களத்தே பட்டாரை நினைத்துக் கரைந்து புலம்பும் அவர்தம் உற்றாராலும், களத்தே விழுப்புண்பட்டு வந்தாரைப் பேணிக் காத்துவரும் உறவினராலும், எங்கணுமே சோகம் நிலவுகின்ற ஒரு தன்மையினையும் பெற்றது.

இந்த நிலைமையிலே தகடூர் மாறுபட்டதைக் கண்டு சான்றோர் வருந்தினர். தகடூர்ப் போரினை நிகழவிடாது செய்தற்குப் பெரிதும் முயன்ற அவர்கள், தம் முயற்சியின் தோல்வியால் ஏற்பட்ட போரினது அழிபாடுகளைக் கண்டு, பெரிதும் வேதனையுற்றனர்.

வீரன் ஒருவன் களத்தே பெரும்புண் பட்டான். பகைவர் எறிந்த கொல்படை அவனைக் கொல்லவில்லையாயினும், அவனுடைய உடலில் பெரியதொரு புண்ணினை ஏறபடுத்தத் தவறவில்லை. குன்றினும் உயரிய புகழினையுடைய சிறந்த புண் அது! ஏனெனில், பகைவரை எதிர்த்தழிக்கும் முயற்சியிலே பெற்றது! குன்றொத்த மார்பிடத்தே பெற்றது!

அந்த வீரனைக் கட்டிலில் இட்டு, இளையரும் முதியரும் நறிய நெற்றியையுடைய மகளிருமாகக் கூடியிருந்து விழிப்பாகப் பேணி வருகின்றனர். அவனுடைய கள மேம்பாட்டை உரைத்து உரைத்து, உவப்புடன் அவனைச் சூழவிருந்து அவனுக்குத் தொண்டு செய்கின்றனர். இரவின் யாமத்தே, ஊரினைக் காவல் செய்துவரும் காவலரும், அவன் வீட்டருகே வந்ததும், சில நற்சொற்களைச் சொல்லியவராகச் செல்கின்றனர்.

நெய் விளக்கு அணையாமல் எரிந்து கொண்டிருக்கின்றது. அவன் மனைவி அதன்கண் பஞ்சுத்திரியை இட்டும், நெய்யினை வார்த்தும் நிலையாகப் பேணி வருகின்றாள். இங்ஙனம், திருந்திய வேலினை உடையவனான அவன், கரிய தழையையுடைய நொச்சியைச் சூடிப் போர்மேற் சென்றவனான அவன், வீட்டாரின் காவலுக்குள் அமைந்து புண்ணுற்றுக் கிடக்கின்றனன்.

அவனைக் காணும் தமிழ்ச்சான்றோரின் நினைவோட்டம் எங்கெங்கோ செல்லுகின்றது. சான்றோர் பலரையும் விளித்து, அந்த நிலையைக் குறித்து வருத்தமுற்றுப் பேசவும் தூண்டுகின்றது. அங்ஙனம் ஒருவர் பாடிய செய்யுள் இதுவாகும்.

பல்சான் றீரே பல்சான் றீரே
வீழ்ந்த புரிசைச் சேர்ந்த ஞாயிற்
கணையிற் றூர்ந்த கன்றுமேய் கிடங்கின்
மல்லன் மூதூர்ப் பல்சான் றீரே
பலநாள் வருந்தி யிளையரும் முதியரும்
நன்னுதல் மகளிரு மின்னுங்கண் டுவப்ப
யாமங் கொள்பரும் மொழிய மேனாட்
கொல்படை பொய்த்த குன்றுயர் விழுப்புண்
நெய்யிடைப் பஞ்சு சேர்த்திப் பையெனக்
கருங்குரல் நொச்சி மிலைந்த
திருந்துவேல் விடலை காப்பமைத் தனனே!

(புறத்: 1341)

எயில்காத்தற் போரிடையே, விழுப்புண் பட்டான் ஒருவனைக் குறித்துச் சான்றோர் செய்த செய்யுள் இது வெனவும் கூறலாம். போர்நினைவு எழும்போது, இங்ஙனம் புண்பட்டுக்கிடக்கும் வீரமறவனின் நினைவும் எழுமானால், அந்தப் போரின் நினைவே எழமாற்போகுப் அல்லவா!

## 28. அவன் யார்?

தகடூரை வளைத்துக் கொண்டிருந்த சேரர் படைகள் தாம் எண்ணியபடியே கோட்டையை எளிதாகக் கைப் பற்ற இயலாது போயின. எதிர்பாராதபடி வந்து, தம்மைத் தாக்கும் நொச்சி மறவர்களின் கடுமையான போரினை, அவை அடிக்கடி சந்திக்கவேண்டியும் இருந்தன.

ஒரு நாள், சேரரின் களிற்றுப்படை மறவர், தகடூர்க் கோட்டையைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளிலே ஈடுபட்டிருந்தனர். தகடூர்க் கோட்டையின் கதவுகளை உடைத்து உட்புகுவதற்கான் முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தனர். பெரிய மரங்களைக் கொண்டவையாய், யானைகள் கோட்டைக் கதவுகளை மோதிக்கொண்டிருந்தன.

அந்த நேரத்திலே, திடுமெனக் கோட்டையின் மறை கதவு ஒன்று திறந்துகொண்டது. அதனின்றும் சில குதிரை வீரர்கள் கொடிய வேகத்துடன் பாய்ந்து வந்தனர். அந்தக் களிற்றுப் படையினரைத் தாக்கினர். சிறிது நேரத்தில், பல களிறுகள் அங்கே வீழ்ந்தன. களிறுகளின் மேலிருந்த மறவர்களுட் பலரும் சாய்ந்தனர்.

தகடூர் மறவரின் தலைவனாக வெளிப்போந்தவன் அவ்விடத்தே பேராண்மையுடன் போரிட்டனன். அவனுடைய வாளின் சுழற்சிக்கு எதிர்நிற்க மாட்டாத சேரர்கள் திகைத்துப் போயினர். தம் தலைவனின் ஆண்மையைக் கண்ட தகடூர் மறவர்களின் மறவெறி மிகுதியாயிற்று. அவர்கள், தாமும் வாளைச் சுழற்றிய வண்ணம் சேரர்களைச் சிதைத்துக் களித்தனர்.

சேரர்களின் படையணி தளர்ந்தது. அன்றையத் தாக்குதலை நிறுத்தவேண்டியும் வந்தது. சேரர் படைத் தலைவன் தன் முயற்சியின் சிதைவைக்கண்டு குமுறினான். அவன் சினம் பெருகிற்று. தானே முற்பட்டு வந்து, தகடூர்ப் படைத்தலைவனுடன் மோதினான். இருவரும் சற்று நேரம் கடும்போர் நிகழ்த்தினர்.

முடிவில் இரு படையணித் தலைவர்களும் களத்தில் வீழ்ந்தனர். தலைவர்களை இழந்த படைகளும் அன்றையப் போரினை அத்துடன் கைவிட்டவாய்த் தத்தம் பாடிநோக்கிச் சென்றன.

பிற்றை நாளில், மீளவும் சேரரின் படைமறவர் கோட்டைக் கதவினை நெருங்க முயலுகின்றனர். அப்பொழுது, தகடூர்மறவர் சிலர் அவர்களைத் தடுப்பது கருதி முன்வந்து நிற்கின்றனர். அவர்களுள் ஒருவன் குதிரைமீது அமர்ந்தவனாகச் செம்மாந்து வீற்றிருக்கின்றான். அவனுடைய தோற்றமே சேரர்களிடையே அச்சத்தை விளைவிக்கின்றது. சேரர் படைத்தலைவன்

தன்னருகே நின்ற ஒற்றனை நோக்கி, 'அதோ வந்து நிற்கும் அவன் யார்?' என்கின்றான், அப்போது வந்து நிற்கும் அவனைப்பற்றி உரைப்பதாக அமைந்த செய்யுள் இது.

''இவன் யாவன்? என வினவுகின்றனை.

''புள்ளிகளையும் கோடுகளையும் உடைய புலியைப் போன்ற. அசைகின்ற தலை யாட்டத்தையுடைய, வலிய குதிரைமேல் வீற்றிருக்கும் அவனை, யாரென வினவினாற் சொல்வேன் கேட்பாயாக.

''அவன் தோல்வி பற்றியே நினையாத திண்மை கொண்ட உள்ளத்தினன். பகைவர் அஞ்சி நடுங்கும் சுரையமைந்த நெடுவேலினைக் கைக்கொண்டிருப்பவன். ஒளி சிதறுகின்ற பொற்பூணினைப் பூண்டுள்ளவன்.

''அவனே எம்முடைய நாட்டுத் தலைவன்! அவன் வீற்றிருப்பது அவனுடைய போர்க் குதிரையே! வஞ்சங் கொண்ட நெஞ்சமானது தன்னைச் செலுத்துதலினாலே, அவன் இந்நாளைய போர்முனைக்கு வந்துள்ளனன்.

''யாவராயினும், அவனை நெருங்குதலைக் கைவிடு வீராக. வாள்நாள் குறைவுற்றுப் போய்விட்ட மறவர்களே! யாம் கூறுவதனைக் கேட்பீராக! நேற்றுப் பகலிலே, நரைத்தல் வருதலையுடைய கடுமையான ஆற்றல் கொண்ட பெரிய நமது மதயானையினைப் பதைபதைக்க வெட்டிக் கொன்று, அடுகின்ற களத்தில் தானும் வீழ்ந்து பட்டனனே ஒரு மாவீரன்! அவனை இதற்குள் மறந்திருக்க மாட்டீர்கள். அவனுடைய தம்பிதான் இவன்!

''தொடுத்த வீரக் கழலினையும், கட்டிய நொச்சி மாலையினையும் உடையவனான தலைமையாளன்! அச்சம் என்பதனையே அறியாதவன்! எதிர்த்தாருக்கு பெரிதும் அச்சத்தை விளைவிக்கும் பேராற்றலையும் கொண்டவன்!

"ஒற்றன் இப்படிக் கூறுகின்றான். அவன் உள்ளமும் அந்த வீரப் பெருந்தகையைக் கண்டதும், 'எம்மிறை' என்று வாய் குளிர எடுத்துச்சொல்லத் தூண்டுகின்ற சிறப்பைக் காண்கிறோம்.

**இவனே,**
**பொறிவரி யன்ன பொங்குளை வயமான்**
**மேலோன், யாரென வினவில், தோலா**
**உரனுடை யுள்ளத் தொன்னா ருட்குஞ்**
**சுரையமை நெடுவேற் சுடர்ப்பூ ணோனே!**
**அவனே எம்மிறை! யீதவன் மாவே!**
**கறுவுகொள் நெஞ்சம் கதுவவந் தனனே**
**யாவரும்**
**குறுகல் ஓம்புமின் குறைநாண் மறவீர்**
**நெருநல் எல்லி நரைவரு கடுந்திறல்**
**பரூமத யானை பதைப்ப நூறி**
**அடுகளத் தொழிந்தோன் தம்பி! தொடுகழல்**
**நொச்சித் தெரியல் நெடுந்தகை**
**அச்சம் அறியான் ஆரணங் கினனே!**

*(புறத்: 1342)*

செய்யுள், எதிர் வந்து நிற்கும் படைத்தலைவனை அறிமுகப்படுத்துகின்ற செவ்வியைப் பன்முறை சிந்தித்து மனத்தே கொள்வோமானால், அந்த மாவீரனின் வீரப் பெருமிதத்தை நன்றாக உணரலாம். இத்தகைய மறவர்கள் பலரை உடைத்தாயிருந்த தகடூரின் சிறப்பும் நம்பால் நிலைபெறும்.

அரிசில்கிழார் என்பவர் தகடூர் யாத்திரைப்பாடல்கள் சிலவற்றைச் செய்துள்ளனர் என்று நாம் அறிவோம். அவருடையதாக விளங்கும் புறநானூற்று 300-ஆவது செய்யுளும் இதே சம்பவத்தைக் குறிப்பிடுவதாக அமைந் திருக்கிறது.

தோறா தோறா வென்றி தோலொடு
துறுகன் மறையினும் உய்குவை போலாய்!
நெருதல் எல்லைநீ எறிந்தோன் தம்பி
அகற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்
பேரூ ரட்ட கள்ளிற்
கோரிற் கோரிற் றேருமா னின்னே.

(புறம்: 300)

இதன்படி அழிக்கப்பட்டான் தகடூர்த் தலைவனே என்பதும், அவனையழித்த சேரர்படைத் தலைவனை அழிக்கச் சினங்கொண்டு அவன் தம்பி எழுந்தனன் என்பதும் விளங்கும். ஆகவே, நாம் கூறியதுபோல இரு படைத் தலைவரும் களத்துப்படாது, பட்டவன் தகடூர்த் தலைவனே எனவும் கருதலாம்.

## 29. நோக்கி நகும்!

தகடூர்ப் பெரும்போர் நிகழ்ந்த காலத்தில் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை கட்டிளமையும் கண்கவர் தோற்றமும் உடையவனாக விளங்கினான். கார்மேகத்தை போன்ற கருமை வண்ணத்துடன் அவனுடைய புல்லிய தாடி விளங்கிற்று. பகைவர்தம் நோக்கிற்கு அஞ்சாது மேற்சென்று போரிடும் காளையைப் போன்று உரனும் சினனும் கொண்டவனாக அவன் விளங்கினான்.

தன்னுடைய படைகளைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் அவனுடைய தோற்றத்தைக் கண்டு பொன் முடியார் வியந்து பாராட்டுகின்றார். முனைப்படைக்கண் நிற்கும் அவனை நோக்கித் தம்முடைய வியப்பினைக் கூறவும் செய்கின்றார்.

"சேரமானின் கழுத்திலே வெற்றிமாலை விளங்குகின்றது. அது உழிஞைப்பூவால் தொடுக்கப் பெற்றது. தகடூரை முற்றப்போகும் அடையாள மாலை அது.

அதனை ஒரு கையால் பற்றியவனாக, அழகுமிகுந்த தன் தோள்களை நோக்கியபடியே அவன் பூரிக்கின்றான்.

‘‘முன்னணிப் படையினை இரு புறமும் நிற்ப நோக்கிப் பூரித்தவன், அதனையடுத்துப் போருட் கலந்துகொள்ளத் திரண்டு வந்திருக்கும் தன்னுடைய யானைத் திரளையும் நோக்குகின்றான்.

‘‘யானைத் திரளுக்குப் பின்னாகத் தேர்வீரர்கள் பலரும் திரண்டிருக்கின்றனர். அவர்களைக் கண்ணோட்ட மிட்டும் இரும்பூது எய்துகின்றான். அவர்களுக்குப் பின்னால், குதிரைப்படை வீரர்கள் விளங்குகின்றனர். அவர்கட்குப் பின்னால் வில்வீரர்கள் விளங்குகின்றனர். அவர்கட்குப் பின்னால் வேல்வீரர்கள் திகழ்கின்றார்கள்.

‘‘ஒவ்வொரு பகுதியினரையும் பார்த்துத், தன்னுள்ளத்தே வெற்றி தனக்கேயென்று உறுதிகொண்ட பின், தன்னுடைய பறை கொட்டுவோனை நோக்கிச் சிரிக்கின்றான் அவன்.

‘‘அந்தச் சிரிப்பு, ‘படைகள் மேற்செல்லுமாறு நின் கிணைப்பறை முழங்கத் தொடங்குக’ எனத் தனக்கு இட்ட ஆணையாகும் என்பதனை உணர்ந்த கிணைவனும், கிணையைக் கொட்டத் தொடங்குகின்றான். படைகள் செல்லத் தொடங்குகின்றன. படை செல்லும் ஆரவாரமும் எழுகின்றது.’’

கார்த்தரும் புல்லணற் கண்ணஞ்சாக் காளைதன்
தார்ப்பற்றி யேர்தருந் தோணாக்கித்—தார்ப்பின்னை
நாட்பினுள் யானைக் கணநோக்கி யானைப்பின்
தேர்க்குழாம் நோக்கித்தன் மானோக்கிக்—கூர்த்த
கணைவரவு நோக்கித்தன் வேனோக்கிப் பின்னைக்
கிணைவனை நோக்கி நகும்.

(புறத்: 1369

சேரப் படையின் பெருக்கமும், அது அணியணியாக வகுத்துநின்ற முறைமையும், இச் செய்யுளால் நன்கு அறியப்படும்.

'கூர்த்த கணை வரவு நோக்கி' என்பதற்குத், 'தகடூர்க் கோட்டையினின்றும் வருகின்ற அம்புகளை நோக்கி' எனவும், 'தன் வேல் நோக்கி' என்பதற்கு, 'அது கண்டு சினந்து தன் வெற்றிவேலை நோக்கி' எனவும் பொருள் கொள்ளலாம்.

## 30. ஏந்துவன் போலான்

படை மறவர்கள் தத்தம் படையணிகளுள் வருகின்ற மறமாண்பினரின் ஆற்றல்களைக் குறிப்பிட்டு, எதிர்ப் படையினருக்கு முன்னால் நின்று முழக்கமிட்டு ஆரவாரிப் பதும் இயல்பாகும். இதனால், பகைப் படையினர்பால் அச்சம் எழுதலும், தம் படை மறவர்பால் ஊக்கம் மிகுதலும் நிகழ்வனவாம். இங்ஙனம் வீரமுழக்கத்துடனே வருகின்றான் ஒரு தலைவன்! தகடூர் நாட்டுப் படையணி யைச் சேர்ந்தவன் அவன்!

''பண்ணுதல் அமைந்த போர்க் குதிரையினை உடை யவன் அவன்! அந்தக் குதிரையும் போர்க்களப் பயிற்சியிற் சிறந்ததும் வலிமிகுந்ததும் ஆகும்! கண்களை இமைக் கின்ற கால அளவினை 'நொடிப்பொழுது' என்பார்கள். வில்லினின்றும் வெளிப்படும் கணையானது அந்த நொடிப் பொழுதிற்குள் கடுவிசையுடனும் செல்லும் இயல்பினதாகும். கண் இமைப்பின் அளவிற் கடுமை யான விரைவோடு சென்று தைக்கும் கணையினைப் போலக், குறித்த இலக்கினை நோக்கி வேகமாகச் செல்லக் கூடியது அந்தக் குதிரை!

''ஒருநாட் பகற்பொழுதில் அவன் படையணியின் முன்பாக வந்து போரிடற்கு நிற்கின்றனன். அவனைக்

கண்ட தகடூர் மறவர் ஆரவாரிக்கின்றனர். தம்பால் வந்துள்ள தலைவனின் புகழைப் பேசி முழக்கமிடு கின்றனர்.

''சேரர் படையணிகளுக்குக் கேட்கின்றது அந்த முழக்கம். அவர்கள் அந்த வீரமுழக்கினை இகழ்ச்சியுடன் ஒதுக்கி மேல் வருகின்றனர். அப்பொழுது, தகடூர் மறவன் ஒருவன் செருக்குடன் கூறுவதாக அமைந்த செய்யுள் இது.

**இகழ்தல் ஓம்புமின் புகழ்சான் மறவீர்**
**கண்ணிமைப் பளவிற் கணைசெல் கடுவிசைப்**
**பண்ணமைப் புரவிப் பண்புபா ராட்டி**
**எல்லிடைப் படர்தந் தோனே, கல்லென**
**வேந்தூர் யானைக் கல்லது**
**ஏந்துவன் போலான்தன் இலங்கிலை வேலே!**

**(புறத்: 1370)**

''புகழ் மிகுந்த மறவர்களே! இகழ்தலைக் கைவிடுவீராக! கண் இமைப்பதன் அளவிற்குள் கணைபோலச் செல்லுகின்ற கடிய விரைவினைக் கொண்ட, பண்ணுதல் அமைந்த தன் குதிரையினது போர்மறத்தைப் பாராட்டியவனாகப் பகற்போதில் போர்முனைக்கு வந்துள்ளான் இவன்! ஆரவாரத்துடன் உங்கள் வேந்தன் ஊர்ந்து வருகின்ற யானையினை வீழ்த்தற்கல்லாமல், பிறவற்றைக் கொல்லுதற்கு, இவன், விளங்கும் இலையினையுடைய தன் வேலினை ஏந்துபவன் அல்லனைப்போல விளங்குகின்றான்!'' என்பது செய்யுளின் பொருள்.

## 31. யானை நவில் குரல்!

கோட்டை மதில்களின் மேலாக, அங்கங்கே உயரமுடன் அமைந்த சிறுசிறு அமைப்புக்கள் விளங்கும். அவை, கோட்டை மதிலின் காவல் வீரர்கள் தங்கியிருந்து

பகைவரது வருகையினைநோக்கி யிருத்தற்குரியன. அவற்றுள் ஒன்று சேரப்படையினரின் தாக்குதலுக்கு ஆற்றாது வெடிப்புக் கண்டது.

அந்த வெளியின் வழியாகக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் கோட்டைக்குள் நுழைந்து விழுந்தன. ஒளிசுடரும் அந்தக் கதிர்த்தோற்றத்தைப் போல விளங்கும் வெள்ளிய தன் வேலினை ஏந்தியவனாக, மறமாண்பினைக் கொண்ட இளையோன் ஒருவன், தன் குதிரைமீதமர்ந்தவனாக வந்து அவ்விடத்தே நின்றான்.

இடிந்து விழாது அற்றுப்போய் விட்டிருந்த அந்த நோக்கு ஞாயிலினுள்ளிருந்து வந்து நின்ற அவனைக் கண்டதும், படைமறவர் ஆரவாரிக்கின்றனர்.

''அவன் கையிடத்ததான ஒள்ளிய வேற்படையினை இகழ்தலைச் செய்யாதீர்கள். மிகுதியான சீர்மையினைக் கொண்ட, வானத்தைப் பொருதும் நெடிய கொற்றக் குடையினையுடையவன் நும் வேந்தன். அவன், இவன் கையிடத்ததான திண்ணியதும் கூரியதுமான வேற்படை திறத்தலால் புண்பட்ட மத்தகத்தையுடைய தன் யானை யானது கதறுகின்ற குரலைக் கேட்டே கண்ணுறக்கம் கொள்ளானாய்க் கலங்கியிருந்தனன் என்பதை மறவாதீர்.

''அதனை நினைவிற் கொண்டு, அஞ்சி ஒதுங்குவீராக!''

அதிராது அற்ற நோக்கு ஞாயிலுள்
கதிர்விடு சுடரின் விளங்கும் வெள்வேல்
எதிரிய திருவின் இளையோன் இன்றுந்தன்
குதிரை தோன்ற வந்துநின் றனனே
அவன்கை யொண்படை யிகழ்தல் ஓம்புமின்
விழுச்சீர் விண்பொரு நெடுங்குடை வேந்தன்
கண்படை பெறாஅன் வைகினன் இவன்கைத்

**திண்கூர் எஃகம் திறந்த**
**புண்கூர் யானை நவில்குரல் கேட்டே.**

(புறத்: 1371)

'பகற் போதிற் புண்பட்ட யானை இரவெல்லாம் கதறிக் கொண்டிருக்க, அதனால் வேந்தனும் கண்ணுறங் கானாய் இருந்தனன்' என்க. இதனால், 'முன்னாள் அவ்வாறு வேந்தூர் யானையைப் புண்படுத்திய அவன், இன்றும் தோன்றினன் எனில், நும் அரசையே கொல்லா மல் விடான்' என மறமாண்பு கூறியதாம். இவ்வாறு கூறத்தகும் தமிழ் மறவர்கள் பலர் இருதிறப் படையணி களுள்ளும் தலைமை தாங்கி நடத்தினர் என்பதும் இதனால் விளங்கும்.

## 32. யானை காமின்!

அந்த நாளிலே படையணிகளுள் யானைப்படைக்குத் தனியான ஒரு மதிப்பு இருந்தது. அதனை மிகுதியாகப் பெறுவதில் ஒவ்வொருவருமே ஆர்வம் காட்டினர், எதிர்ப் படும் எதனையும் அழித்து மேற்செல்லும் இயல்பினை யானைப்படை அந்நாளிற் பெற்றிருந்தது.

சேரமானிடம் யானைப்படை மிகுதியாகவே இருந்தது. படையணிகளுக்கு முற்பட்டுக் கம்பீரமாகச் செல்லும் அந்தக் களிற்றுப் படையினைப் பெரிதும் கவன மாகச் சேரர்கள் பேணியும் வந்தனர்.

களிறுகள் பிளிறிக்கொண்டு கோட்டை மதிலைச் சென்று மோதிக்கொண்டிருக்கின்றன. அப்போது திடு மெனக் கட்டிபோன்ற கருப்புக்குதிரை மேலாக ஒருவன் வந்து, அந்தக் களிறுகளைத் தாக்கி அழிக்க முயல் கின்றான். தகடூர் மறவனின் அந்த வீரச்செயலைக் கண்டு திடுக்கிட்டுச் சேரர் படைத் தலைவன், தன் படைஞருக்குப் பிறப்பிக்கின்ற ஆணை இச்செய்யுள் ஆகும்.

"கட்டி போன்ற காரிக் குதிரையின் மேலோனாக வருகின்றனன். அவன் காலிற் செறிந்துள்ளது பல போர்களை வென்றதன் அடையாளமாகிய வீரக்கழலே யாகும். அவன் கையிடத்து விளங்குவதோ வேற்படை. அவன் சுட்டிச் சென்று அளிக்க நினைப்பதும் களிறு களையே ஆகும். அதனால். நம் படை முழுவதையும் செலுத்தியாயினும் நம் யானைகளைக் காப்பீர்களாக! அவன் யானைகளையன்றிப் பிறவற்றை வீழ்த்தக் கருதுபவன் அல்லன்!" என்கிறான்.

**கட்டி யன்ன காரி மேலோன்**
**தொட்டது கழலே கையது வேலே**
**சுட்டி யதுவும் களிறே யொட்டிய**
**தானை முழுதுடன் விடுத்துநம்**
**யானை காமினவன் பிறிதெறி யலனே.**

(புறத்: 1372)

'கட்டியன்ன காரி' என்றது, குதிரையின் கருமை நிறத்தை. 'கட்டி'—பனை வெல்லம். 'யானை காமின் அவன் பிறிது எறியலன்' எனக் கூறும் சொற்கள், தமிழ் மறவரது தறுகண்மையின் மேம்பாட்டை நன்கு விளக்குவ தாகும்.

சேரர் படைத் தலைவருள் ஒருவனின் கூற்றாகக் கொள்வது போன்றே, சேரர்க்கு ஒற்றுரைப்பார் வந்து கூறிய எச்சரிக்கையாகவும் இதனைக் கொள்ளலாம்.

## 33. அஞ்சுதக்கனள்!

தகடூர் மறவருள் ஒருவன் களத்தில் காட்டிய பேராண்மை மிகவும் சிறப்புடைத்தாக இருந்தது. அவனுடைய அந்தச் செவ்வியை வியந்து பாராட்டுதலை நினைக்கின்ற சான்றோர், அவனை ஈன்ற தாயையும் வியந்து போற்றுகின்றனர்.

"அஞ்சுதற்கு உரியவள் இந்த மூதாட்டி! அறுவடைக் களத்துக் காவற்குரியவர் இட்டிருக்கின்ற அரிதாளின் பந்தரைப் போன்று விளங்கும், எண்ணெய்ப் பசையற்ற கூந்தலையுடைய மூதாட்டியான இவள், அஞ்சத் தகுந்தவள்!

"வெம்மை மிகுந்த போர் வருங்காலத்து என் செய்வேம் என்று வருந்தியிருக்கும் வேந்தருக்கு, 'அஞ்சேல்' என வுரைத்து, அந்தப் போரினை மேற்கொள்ளும் களிறு போன்ற மகனை இவள் பெற்றுத் தந்திருக்கின்றனள். அதனால், இவளும் அஞ்சத் தகுந்தவள்!"

**அஞ்சுதக் கனளே யஞ்சுதக் கனளே**
**யறுகா வலர் பந்த ரென்ன**
**வறுந்தலை முதியாள் அஞ்சுதக் கனளே**
**வெஞ்சமத்து,**
**என்செய் கென்னும் வேந்தர்க்கு**
**அஞ்சல் என்பதோர் களிறீன் றனளே!**

(புறத்: 1373)

'பகைவர்க்கு வீரத்திருவினனான இவள் மகன் மட்டு மல்லாது, இவளும் அஞ்சுதற்கு உரியவள்' என்று கூறி, வீரனைப் பயந்த அவள் சிறப்புப் போற்றப்பெறுகின்றது.

## 34. ஆற்றலோன் நிலை!

தகடூர்ப் படைமறவர்களுள் ஒருவன் மிகுந்த ஆற்றலுடையவனாகத் திகழ்ந்தனன். அவன் படைமுகத்து வரவும், அவனது வரவினாலே செருக்குற்றுத் திகழ்ந்த தகடூர் மறவர்கள், எதிரணியில் நின்றிருக்கும் சேரப் படையினரை நோக்கி, அவனுடைய பேராண்மையை உரைத்துக் களிக்கின்றனர்.

"வேல் வடித்தலிலே வல்லான் ஒருவன் செய்த வகைமைகள் அமைந்த அழகினையுடைய தன் வேலினைக்

கொல்லர் செய்யும் தொழில் முடியும்படி கருதிக் கூரிய இலையுடைய அவ் வெற்றிவேலினைக் கையிடத்தே வலமாகச் சுழற்றி ஏந்திக்கொள்க' என்று சொல்லின், அவ்வினையினை முடித்துக் கொள்ளுங்காலம் வரைக்கும், தன்னுடைய குதிரையையும் விரும்பாதவனாக, அந்த வேலினை வழங்கும் அதனிடத்தேயே கருத்தாயிருப்பவன் இவன்!

போர்த்தொழில் மேம்பாடு உடைய இவன், போர்ப் பயிற்சியாகிய அறிவோடும் சேர்ந்து விளங்கும் செவ்விய குதிரை மேலோனாகவும், காலிடத்தே விளங்கும் கழலினை உடையோனாகவும், இளையோனாகவும் விளங்குகின்றான்.

''புகழ்மிகுந்த மன்னர்களே! அழலினைப்போல எழுந்து விளங்கும் இவனுடைய வெகுளியினை இகழ்ந்து மேல்வருதலைக் கைவிடுவீராக!

''முன் ஒருகாலத்து நிகழ்ந்த போரினுள், இவன் கையிடத்து வேலினாற் பட்டு வீழ்ந்தோரின் தொகை அளவிடற்கரிது! வீழ்ந்தவரின் மனைவிமார்கள் கைம்மை பூண்பது குறித்து அறுத்த கூந்தற் சுமைகளை ஏற்றிய வண்டிகளுள், அச்சுமை தாங்காது முரிந்துபோயினவே பலவாகும் என்பதனை நீவிர் அறிவீர்களாக!

''அதனால், 'வலியுடையார் எதிரிட்டு நிற்பீராக. வீழ்ந்து நடுகல்லில் நிலைபெறுவீராக என, வெம்மையான போரினை நிகழ்த்த மிகுதியான ஆர்வத்துடன் இவன் வந்துள்ளனன்.

''ஆற்றல் உடையவனாகிய இவன் நிற்கும் நிலைதான் அஞ்சுதற்குரிய ஒரு தகைமையை உடையதாகும்!''

வல்லோன் செய்த வகையமை வனப்பிற்
கொல்வினை முடியக் கருதிக் கூரிலை
வெல்வேல் கைவலன் ஏந்திக் கொள்ளெனிற்

கொள்ளுங் காலும் மாவேண் டானே
மேலோன்
அறிவொடு புணர்ந்த நெறியிற் புரவி
கழற்கால் இளையோன் அழற்றிகழ் வெகுளி
இகழ்தல் ஓம்புமின் புகழ்சால் மன்னிர்
தொல்லை ஞான்றைச் செருவினுள் இவன்கை
வேல்வாய் வீழ்ந்தோர் பெண்டிர் கைம்மையின்
அறுத்த கூந்தற் பிறக்கஞ் சகடம்
பொறுத்தல் செல்லா பலமுரிந் தனவே!
அதனால்
வல்லோர் பூழை நின்மின் கல்லென
வெஞ்சமங் குரைப்பக் கூர்தலின்
அஞ்சுதக உடைத்திவ் வாற்றலோன் நிலையே.

(புறத்: 1374)

மறமாண்பில் தலைசிறந்தாரான மாண்புடைய மறவர்கள் பலர் இவ்வாறு இருதிறப் படையணிகளினும் மிக்கிருந்த காரணத்தால், தகடூர்ப் பெரும் போரும் வரலாற்றுச் சிறப்புடையதொன்றாக விளங்கிற்று என்று நாம் அறிதல் வேண்டும்.

'தொல்லை ஞான்றைச் செருவினுள், இவன்கை வேல்வாய் வீழ்ந்தோர் பெண்டிர், கைம்மையின் அறுத்த கூந்தற் பிறக்கஞ் சகடம் பொறுத்தல் செல்லா, பல முரிந்தனவே' என உரைக்கின்ற ஆண்மையின் மிகுதிப் பாட்டை அறிந்து இன்புறுக.

## 35. எறிந்தது களிறு!

தகடூர்க் கோட்டை மதிலைச் சேரரது வலிய களிறுகள் பலவும் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் மிகவும் மூரிப்புடைய களிறு ஒன்று மிக வன்மையாகத் தன் பூணிட்ட கொம்புகளால் குத்திக்

கொண்டிருக்கின்றது. கதவுகள் நடுங்குகின்றன. விரைவில் உடைபடும் என்ற அச்சம் எப்புறமும் பரவுகின்றது.

தகடூர் மறவர்கள் சேரரது அந்த முயற்சியை எப்படியும் தடுத்தாக வேண்டும் என்று நினைக்கின்றனர். அவர்களது அந்த நினைப்பிற்கு ஊன்றுகோலாக விளங்கினான் ஒருவன்! மாவீரனாகிய அவன், தன் குதிரை மேல் ஏறியவனாகப் பாய்ந்து சென்றான். தன் கைவேலினை எறிந்து அந்த வலிய களிற்றைக் கொன்று ஆரவாரித்தான். பயங்கரமான குரலிட்டபடியே அந்தக் களிறு வீழ்ந்து துடித்துச் செத்ததைக் கண்ட பிறகளிறுகள் நிலைகெட்டு ஓடின. தம் படைஞரையே மிதைத்தும் தூக்கியடித்தும் நாசப்படுத்தியவாறு சென்றன.

செயற்கரிய செய்த அந்த மாவீரனின் செயலினைத் தகடூர் மறவர் மட்டும் புகழ்ந்தனர் என்பதில்லை. சேரரும் தமிழ்ச் சான்றோரும் புகழ்ந்தனர். தமிழ்ச் சான்றோர் வியப்புடன் பாராட்டுகின்ற செய்யுள் இது.

''களிவெறி கொண்டானைப் போல அவன் வந்தனன். ஆனால், கள்ளுண்டு களித்தனனா எனில், அதுவும் அன்று. தனக்குப் போர் வாய்த்தது என்ற களிப்பினாலேதான் அவனுக்குக் களிவெறி பிறந்திருக்கின்றது.

''அவன் ஏறிவருவது குதிரைதான். பறவை எதுவும் அன்று. ஆயினும், அது வந்த வேகமோ பறவை ஒன்று பறந்து வந்தது போலத்தான் இருந்தது.

''திடுமென வந்து தோன்றின அவன், மேலுலகத்து வாழும் ஓர் தெய்வமோ எனில், தெய்வமும் அல்லன்; இவ்வுலகத்து மகனே அவன்!

''எளிமை தோன்றத், தெரிந்தெடுத்த பூக்களுடன் பசிய தழைகளையும் விரவிக்கட்டிய நொச்சி மாலையை அவன் சூடியுள்ளனன்!

"எதிர்ந்தார் கண்டு வெருவி ஓடுதற்குத் தக்க வேலாற்றலை உடையவன் அவன்! அவன், வேலினை எறிந்தால், அது பருந்து தன் இரையை நோக்கிப் பாய்ந்து வருவது போல விரைந்து வரும். பைய நிமிர்ந்து அவ்வேலும் அவன் கையினின்றும் புறப்பட்டுவிட்டது. அதனை அங்ஙனம் சுழற்றி எறிந்தவனாக அவன் ஆர்ப்பரிக்கின்றனன். அப்போது அவன் வீரக்கழல்கள் ஆர்ப்பொலி செய்கின்றன.

"தம் கால்களில் வீரக் கழல்களை அணிந்தவராக, உயரிய மலையிடத்து உலவும் புலியைப் போலச் சினமுடன் வேந்தர்கள் ஊர்ந்து வருகின்றவும், வெம்மையான சினமுடையவுமான களிறுகள்தாம் அவ்வீரனின் வேலுக்கு இலக்காகிப் பட்டன.

"இதனை அறிந்தாயினும் நீவிர் அகன்று போவீராக!" என்பது குறிப்பு.

**உண்டது**
**கள்ளும் அன்று களிப்பட் டனனே**
**ஊர்ந்தது**
**புள்ளும் அன்று பறந்தியங் கும்மே**
**மேலோர்**
**தெய்வம் அல்லன் மகனே நொய்தாங்குத்**
**தெரியலர் எடுத்த பாசிலைக் கண்ணி**
**வெருவத் தக்க வேலி னோன்வேல்**
**பைய நிமிர்ந்து பருந்தின் ஓடிக்**
**கழிந்தார்த் தன்றவன் எறிந்ததை கழறொட்**
**டேந்துவரை யிவரும் புலிபோல்**
**வேந்தர்வந் தூரும் வெஞ்சினக் களிறே.**

(புறத் : 1375)

கழிந்த போரின்கண் அவன் ஆற்றிய மறச்செயலினது மாண்பினை எடுத்துப் போற்றித், தகடூர் மறவர்கள், சேரர் அஞ்சுமாறு அங்ஙனம் முழக்கினர் என்று கருதுக.

# 36. யானைக் கூறு அளக்கும்!

தகடூர் மறவர்கள் இங்ஙனம் அணியணியாகக் களத்தே வந்து போரிட்டுச் சேரர்க்குப் பெரும் அழி பாட்டை விளைவிக்கின்றனர். எனினும், சேரரது படை மறவரும் ஒத்த ஆண்மையுடையவராதலாலும் பெருக்கத் தவராதலாலும் தம்முடைய குறிக்கோளை நிறைவேற்றும் உறுதியுடன் விளங்குகின்றனர்.

ஒரு சமயம், இளமையும் செருக்கும் கொண்டவனாக மறவன் ஒருவன், தகடூர்ப் படையணிகளின் முன்னணி யில் வந்து தோன்றுகின்றான். அவனுடைய தோற்றத் தைக் கண்டதும், சேரர் படையணி கலகலக்கிறது. தகடூர் மறவர்கள் களிகொண்டு ஆரவாரிக்கின்றனர்.

சேரத் தளபதிகளுள் ஒருவன், அந்தக் காட்சியைக் கண்டு மலைக்கின்றான். ''அவன் யார்?'' எனத் தன் அருகிருந்தாரை வினவுகின்றான். அவர்களுள் ஒருவன், அவனை முன்னர் நன்கு அறிந்திருந்தவன், கூறுகின்றான்.

''தலைவனே!

''வாயிற்கண் அமைந்துள்ள நெடிய திண்ணையின் மேலாக ஏறிநின்று, பெண்கள், நிலைவாயிலில் அழகுடன் புதுப்பூண் இடப்பெற்றுப் போர்க்குச் செல்லும் தம் கணவன்மாரோடு ஊடியவராகச் சிந்திய கண்ணீர் வெள் ளத்தைப்போல, ஒன்றுடன் ஒன்று கலந்து நெருங்கிக் கிடக்கும் அழகிய புள்ளிகளையுடைய காரிக் குதிரையின் மேல் வீற்றிருக்கும் அவன், மறமாண்புடைய வீரன் ஆவான்!

''தெளிவாக அவனை மனத்தே நினைத்தாலும் அந்த நினைவே நடுக்கத்தை விளைக்கும். அத்தகைய ஒப்பற்ற வேலினை ஏந்தியிருப்பவனும் அவன்!

''குழிபட்ட பள்ளத்திலே, நீர்க்கண் விளங்கும் கெண்டை மீனின் வருகையை எதிர்பார்த்திருக்கும் நீல

மணியின் நிறத்தைக் கொண்ட சிறிய சிரற்பறவைபோல, அவன் நம்முடைய நல்ல யானையணிகளின் ஒரு பகுதியைத் தன் திறையாக அளந்து போய்விடக்கூடியவன்!!'

நிலையமை நெடுந்திணை யேறி நல்லோரில்
நிலைபொலி புதுப்பூண் கணவனோ டுடிச்
சிந்தி யன்ன செருபடு வனப்பிற்
புள்ளிக் காரி மேலோன் தெள்ளிதின்
உள்ளினும் பனிக்கும் ஒருவே லோனே
குண்டுநீர்க் கிடங்கிற் கெண்டை பார்க்கும்
மணிநிறச் சிறுசிரல் போலநம்
அணிநல் யானைக் கூறளக் கும்மே!

(புறத்: 1376)

இதனைக் கேட்ட சேரர் தலைவன், அவனுடைய தாக்குதலை முறியடிக்குமாற்றால், தன் படையணிகளை மீளவும் முறைப்படுத்தினன் எனவும், அன்றைய போரும் கடுமையாயிருந்தது எனவும் கருதலாம்.

## 37. என்னதாகிலும் ஆக!

சேரர்க்குப் படைத்துணையாக வந்த குறுநிலத் தலைவர்களுள் ஒருவன், மிகுதியான பேராற்றல் உடையவனாகத் தகடூர்ப் படையினைத் தாக்கி அழித்து வருகின்றான். அவனுடைய ஆற்றலுக்கு முன்னால் தகடூர்ப்படை சிதையத் தொடங்குகின்றது.

தம் படையினரின் அழிவைக் குறித்த செய்தி விரைந்து வந்து அறிவிக்கப்படத் தகடூர் நாட்டுத் தலைவருள் ஒருவன், 'அவனை யானே அழித்து வருவேன்' எனக் கூறியவனாகத் தன்னுடைய போர்க் குதிரையின் மீதேறி விரைந்து களத்தை நோக்கி வருகின்றான்.

அவனுடைய வருகையால் தகடூர்ப் படைக்குப் புதிய ஊக்கம் பிறக்கின்றது. அவனும் வந்து முனையில் தோன்ற, அவனைக் கண்டதும், சேரர் பகுதித் தலைவன் தன் அருகிருந்தாருடன் இவ்வாறு கூறுகின்றான்.

"அவன் வருக! வருக!!

"அவனை எவரும் தடுத்தல் வேண்டா! எவரும் தடுத்தல் வேண்டா!

"அஞ்சத்தக்க குதிரை மீதமர்ந்து, ஒப்பற்ற கை வலினைக் கொண்டிருக்கும் யானோ, இருகையினரான மக்களைக் கண்டு அஞ்சுவதில்லேன். தொங்குகின்ற கையுடைய விலங்குகளான யானைகளின் வாழ்நாட்கள் அவன் கையால் முடிவதாகவெனப் பகுத்து வைக்கப் பெற்றிருக்கவும் இல்லை.

"அவனும் வீரன்தான். அசைந்தாடும் ஒளியெறியும் மணிகளையுடைய வளைந்த பூணணிந்த மார்பினையும், கரிய தலையினையுமுடைய என்னைக் குறித்தே வருகின்றனன்.

"யானும் மணங்கமழும் உவகையோடு, கைவல்லமை உடையவனாகத் தோன்றும் என் துடியனுக்கு, அவனுடைய அரையிடத்து விளங்கும் ஆடையைப் பரிசிலாகக் கொடுத்துள்ளேன்.

"அதனால்,

"என்னைக் கொன்று மீண்டுபோதல் என்பது அவனுக்கும் இவ்விடத்தே அரிதாகும். அங்ஙனமே அவனைக் கொன்று மீள்தல் என்பது எனக்கும் அரிதாகும்!

"அதனால்,

"இன்றைப் போரது முடிபு எவ்வாறாயினும் ஆகுக!

"நீரினைக் கொண்டிருக்கும் பெருங்குளமானது கலங்குமாறு, நாளைக் காலையில், நோயால் பொதியப்

பட்ட தன் நெஞ்சம் குளிரும்படியாக, அவன் தாய்தான் மூழ்குவாளோ? அன்றேல், என் தாய்தான் நாளைக் காலை மூழ்குவாளோ?''

''அன்றி, என் தாயும் அவன் தாயும் சேர்ந்து முழுகுதல்தான் நேருமோ? யாங்ஙனம் ஆயினும் ஆகுக!''

வருக வருக தாங்கன்மின் தாங்கன்மின்
உருவக் குதிரை ஒருவே லோனே
இருகை மாக்களை யானஞ் சலனே
நாற்கை மாக்களின் நாட்பகத் தில்லை
அவனும்,
தாரொடு துயல்வரும் தயங்குமணிக் கொடும்பூண்
மார்புடைக் கருந்தலை யெற்குறித் தனனே.
யானும்,
கடிகமழ் உவகைக் கைவல் காட்சியென்
துடியவற் கவனரை யறுவை யீந்தனனே.
அதனால்,
என்னெறிந்து பெயர்தல் அவர்க்குமாங் கரிதே
அவனெறிந்து பெயர்தல் எமக்குமாங் கரிதே.
அதனால்,
என்ன தாகிலும் ஆக முந்நீர்
நீர்கொள் பெருங்குளந் தயங்க நாளை
நோய்பொதி நெஞ்சங் குளிர்ப்ப வவன்தாய்
மூழ்குவள் ஒன்றோ? அன்றேல் என்யாய்
மூழ்குவள் ஒன்றோ? அன்றியவன்
தாயும் யாயும் உடன்மூழ் குபவே!

(புறத்: 1877)

இங்ஙனம் இரு தலைவர்கள் தம்முள் ஒருவரையொருவர் அழித்தலைக் கருதினராய்க் கடும்போர் இடுதலும் அந்நாளைப் போர் மரபாக இருத்தல் வேண்டும். ஒத்த தகைமையுடைய இருவர் இவ்வாறு பகைவரது தகுதிப்பாட்டை மதித்துப் போற்றும் பண்பாட்டினையும் கொண்டிருந்தனர்.

## 38. பாணியிற் கொட்டும்!

வீரன் ஒருவன் தன் குதிரைமேல் ஏறியமர்ந்தவனாகச் செருக்குடன் வந்து கொண்டிருக்கின்றான். குதிரையின் காற்குளம்புகளின் ஒலி தாளவமைதியுடன் கேட்கின்றது. இதனைக் கண்டு வியந்த சான்றோர் ஒருவர், அதன் சிறப்பை இப்படிப் பாடுகின்றனர்.

''அரசனுக்குரிய அரண்மனையிலே காலை முரசம் முழங்கும். போர்ப் பாசறையிலோ துடியனின் துடி முழக்கம் எழும். குற்றமின்றி நாள் புலர்ந்ததன் மகிழ்ச்சியை அறிவிக்க முழங்கும் துடியனின் துடிகொட்டும் முழக்கைப் போல, அந்தப் பாணியிலேயே ஒலித்துக் கொண்டிருந்தது, குதிரையின் குளம்படிகளின் ஒலியும்.

''அதன்மேல் ஊர்ந்து வருகிற அவனும், கொல்லும் திறப்பாட்டிலே வலியுடையோன் ஆவான். அவன் மிகவும் சினத்துடனே பகைவரை அழிப்பது கருதி வந்து கொண்டிருக்கின்றான். அவனால் வெட்டப்படும் தலை களைப் பருந்தினம் வயிறார உண்டு களிக்கும். வடித்த இலைத் தொழிலாற் சிறந்த வேலினை இருபாலும் வீசிய வனாக, அவன் களத்திலே உலாவருகின்றான்.''

போர்க்களத்திலே குதிரைமேலமர்ந்து இருபாலும் பகைவீரரைச் சுற்றிச் சுழன்று வெட்டி வீழ்த்திக் களிப் புடன் வருகின்ற வீரனின் போராண்மையை, அவனுடைய குதிரை அடியிட்டு வருகின்ற பாணியைச் சிறப்பிப்பதன் மூலம், இங்ஙனம் சான்றோர் போற்றுகின்றனர்.

**அடுதிறல் முன்பின் ஆற்ற முருக்கிப்**
**படுதலை பாறண்ண நூறி—வடியிலைவேல்**
**வீசிப் பெயர்பவன் ஊர்த்தமாத் தீதின்றி**
**நாண்மகிழ் தூங்குந் துடியன் துடிகொட்டும்**
**பாணியிற் கொட்டும் குளம்பு.**

(புறத்: 1381)

குதிரைகளைத் தக்கபடி போர்ப்பயிற்சி செய்வித்திருந்தாலன்றி, அவை களத்தே பயன்படாமற் போய்விடும் என்பார்கள். அந்த வகையில் மிகவும் சிறப்பான போர்க் குதிரை இது எனலாம். இதனாற் குதிரைப் படைகள் தகடூரோரிடம் மலிந்திருந்தன என்பதும் காட்டப் பெற்றது.

## 39. தருமம் தானம் கருமம்!

இந்த நாளிலே தம் மகன் போர்வீரனாகப் பணியாற்றச் செல்கின்றான் என்றால், நம் தமிழ் நாட்டில் பல பெற்றோர்கள் அதனை உவப்புடன் வரவேற்பதில்லை. இந்த நிலை தமிழ் நாட்டில் எப்படி ஏற்பட்டதென்பதே நமக்குப் புரியவில்லை. போர் மறத்தாற் சிறந்து விளங்கிய தமிழர் பரம்பரையினர் என்று பெருமைப்படும் நாம், போர்ப்பணியினை ஏற்க முன்வராதது என்றால், முன் வருவதை வேண்டா வெறுப்பாக மேற்கொள்வதென்றால், அது வருந்துதற்குரிய நிலைதானே! நாட்டிற்காகத் தம் உயிரையும் கொடுத்துக் காத்துநிற்கத் துணிவுடைய நல்ல வீரர்களையுடைய நாடுதான். நாடுகளுள் சிறம்புடையதாகிச் செம்மாந்து விளங்குவதற்கு உரியதாகும். அத்தகைய வீரர்கள் நம்மிடையே பெருகும் போதுதான், நாமும் நம்முடைய உரிமையைப் பேணி வாழுகின்ற சிறப்பினைப் பெற்று, வளமான வாழ்வினராகி உயர்வோம்.

இந்த வேளையில் தகடூர் நாட்டிலே ஒரு மூதாட்டி தன் மகனைப் போர்க்களத்திற்கு அனுப்பிவிட்டுக் கொள்ளுகின்ற பூரிப்பினை நாம் கருத்திற்கொண்டால், நம்முள்ளும் அந்த உணர்வு கிளர்ந்து எழுந்து ஒளிசெய்யத் தொடங்கும்.

தருமமும் ஈதேயாம் தானமும் ஈதேயாம்
கருமமும் காணுங்கால் ஈதாம்—செருமுனையிற்

**கோள்வாள் மறவர் தனலதுமிய என்மகன்**
**வாள்வாய் முயங்கப் பெறின்!**

(புறத்: 1403)

"தருமம் செய்வதனால் புண்ணியமுண்டு என்று சொல்லுகின்றார்கள். தானஞ் செய்பவன் பிற்பிறவியல் நற்கதி பெறுகின்றான் என்கிறார்கள. தனக்கு விதிக்கப் பட்ட கருமத்தைச் கைசோரவிடாதபடி மேற்கொள்பவர் சிறப்படைவர் என்கின்றார்கள்."

"என் மகனோ போர்முனைக்குப் போயிருக்கின்றான். அவன் ஏந்தியிருக்கும் வாளோ பகைமறவரின் தலைகள் வெட்டுண்டு வீழச் சுழன்று கொண்டிருக்கும். அந்தக் களத்திலே, என் மகன் பகைவரது வாள்வாய்ப்பட்டுச் சாவினால் தழுவப்பட்டான் என்றால், அதுவே எனக்குத் தருமமும் தானமும் கருமமும் ஆகும்!"

இந்த மூதாட்டியின் நெஞ்சத்திலே நிறைந்திருக்கின்ற உரிமை வேட்கையைப் பாருங்கள்! களத்திற்குச் சென்று தன் மகன் உயிரோடு பிழைத்துவர வேண்டுமே என்றுகூட அவள் கவலைப் படவில்லை. பகைமறவரை வெட்டிக் குவித்து, அவன் தானும் களத்திலே வீழ்ந்துபட்டால், அதுவே தனக்கு எல்லாப் பேறும் வாய்த்ததுபோல என்கின்றாள்!

## 40. அச்சம் பயந்ததே!

வீரர்கள் தாம் களத்திடையே சென்று கடுனமயாகப் போரிடுதலையும், அங்ஙனம் பகைவரோடு இடுகின்ற போரிடத்தே பட்டுவீழ்தலையும் தமக்குச் சிறப்புத் தருவ தாகவே கொண்டிருந்தனர். வீரனைப் பெற்ற தாயுங் கூடத் தன் மகனைக் களத்துக்கு உவகையுடன் அனுப்பி வைத்து இன்புறுகின்றனள்.

எனினும், களத்தையும் களப்போரையும் விருப்புடன் வரவேற்காது மயங்குவோரும் சிலர் அந்நாளில் இல்லாமல்

இல்லை. அவர்கள்தாம் களவீரரின் காதன் மனைவியர் ஆவர்.

தம் கணவன்மாரோடு உயிரற ஒன்றிக் கலந்த உழுவலன்பினை உடையவர் அவராதலின், அவர்களால் தம் கணவன்மாரை இழந்து விடுகின்ற கைம்மை நிலையினை ஏற்றிருப்பதென்பதும் இயலாதாகிறது. அவர்கள், அந்தத் துயரினைத் தாளாதவராகின்றனர். களத்திற்குச் சென்று வேல்பட்டு வீழ்ந்து கிடக்கும் தம் கணவனைக் காண்கின்றனர். அந்த வேலைப் பறித்து நாற்றி, அதன்பால் தாமும் வீழ்ந்து தம் உயிரையும் தம் கணவரது உயிரோடு ஒன்று சேர்த்துவிடுகின்றனர்.

இப்படிப்பட்ட ஒரு சிறந்த காதலன்புடையவளைக் காட்டுகின்ற செய்யுள் இதுவாகும். அந்தத் தலைவியின் தியாகம் நம்மை சிந்திக்கச்சிந்திக்கப் பெருமிதங் கொள்ளு மாறு தூண்டுகின்றது!

**இன்ப முடம்புகொண் டெய்துவிர் காண்மினோ**
**அன்பி னுயிர்மறக்கும் ஆரணங்கு—தன்கணவன்**
**அல்லாமை உட்கொள்ளும் அச்சம் பயந்ததே**
**புல்லார்வேல் மெய்சிதைத்த புண்.**

(புறத்: 1404)

"பகைவருடைய வேற்படை அந்த வீரனின் உடலினைச் சிதைத்துப் புண்படுத்திற்று. அந்தப் புண்ணினைக் காணக் காண அவள் உள்ளம் பேதலித்தது. தன் கணவன் தன் னருகே இல்லாமற்போவதான நிலையினை உள்ளத்தே கொள்ளவும் அவளால் இயலவில்லை. அதனால், அவள் பால் அச்சம் தோன்றிற்று. அவனின்றித் தான் தனிப்பதோ என்ற தனிமை நினைவின் அச்சம் அவளுடைய உள்ளத் தைப் பெரிதும் வாட்டிற்று.

"தன் உடம்பினை நோக்கினாள். அவன் தன்னைத் தழுவிக் கலந்து தந்த இன்பத்தின் தகைமையை நோக்கி

னாள். அவள் உள்ளம் ஆன்றோர் வாக்கு ஒன்றை நினைவிற் கொண்டது.

''அன்பின் மிகுதியால், களத்தே பட்டு வீழ்ந்த தம் கணவனைக் கண்டதும், அவனைப் புண்படுத்திய அந்த வேலிலேயே தாமும் வீழ்ந்து மடிகின்ற பெண்கள் பேரின்ப நலத்தைத் தம்முடைய உடம்பினைத் துறத்தலைக் கொண்டு அடைவார்கள்.

''இந்நினைவு எழுந்ததும், அவள் கணப்போதும் தாமதிக்கவில்லை. அந்த வேலின்பால் வீழ்ந்து அந்நிலையே தானும் உயிர் நீத்தாள்.

'அவளுடைய நிலையைக் கண்டவர் வியந்தனர். அவளுடைய தெய்வக் கற்பின் சீர்மையை நினைந்தனர். தாமும் மெய்ம்மறந்து அவளைப் போற்றினர்.''

இங்ஙனம் மறவர்களின் மனைவியர், தாமும் மறக் கற்பினால் மாண்புற்றுத் திகழ்ந்த செவ்வியையும் உடையவராயிருந்தனர். தகடூர் நாட்டின் இந்த மேதகுபண்பின் செழுமையினை நினைக்கும் போதெல்லாம், நாமும் அந்தத் திருநாட்டை நினைந்து நினைந்து பூரிப்படைகின்றோம்!

இந்தச் செய்யுளை நச்சினார்க்கினியர் 'மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்' என்னும் சூத்திர உரைக் கண் காட்டுவர்.

## 41. கழலின் திண் காய்!

தகடூர் நாட்டு மறவர்களின் மாண்புகளை நாம் மீண்டும் மீண்டும் நினைக்க நினைக்க, நம் கண் முன்னர், தமிழரின் வீரமரபு எத்துணை சிறந்ததாக இருந்து, காலப் போக்கில் எத்துணை மாறுதலுக்கு உட்பட்டிருக்கின்றது என்ற கவலைதான் அதிகமாகின்றது.

தன்னுடைய ஒரே பேறான செல்வமகனைப் போர்க் களத்திற்கு அனுப்பிவிட்டு, அவன் களத்தின்கண் ஆற்றி வந்த வீரத் திருவிளையாடல்கள் பலவற்றையும் கேட்டுக் கேட்டுத், தான் பெற்ற மகனை நினைந்து நினைந்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றாள் ஒரு தாய்! ஆண்டினால் முதிர்ச்சியுற்ற அவளது உள்ளம், தன் மகனின் பெருமையை நினைந்து பூரித்திருந்தது. அவள் பால் வந்து 'நின் மகன் களத்தே புண்பட்டு வீழ்ந்தான்' என்று சிலர் உரைக்கின்றனர்.

அந்தச் சொற்களைக் கேட்டதும் அவள் குமுறு கின்றாள். கொந்தளிக்கும் அவள் உள்ளம் அவளைக் களத்தை நோக்கி இழுத்துச் செல்லத் தளர்நடை கொண்ட அவள், தணியாத ஆர்வத்துடன் தன் மகனின் திருமுகத்தைக் கடைசி முறையாகக் காணும் ஆர்வத் துடன் விரைகின்றாள்.

அந்த வீரனின் பெயர் நெடுங்கோளாதன் என்று தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர் கூறுகின்றனர். நெடுங்கோளாதனின் தாய்தான் அந்த மூதாட்டி, அந்தத் தாயின் மனநிலைதான் எங்ஙனம் வேதனைப்பட்டு வெதும்பி அவளது உயிரையும் குடித்து விடுகின்றது! அவளுடைய புலம்பலின் ஒலி செய்யுளிலும் எதிரொலிக்கிறது! நம்மையும் சோகக் கடலுள் ஆழ்த்தி விடுகின்றது!

களத்தே அவளுடன் துணையாகச் சென்றோர், 'தாயே! இதோ கிடக்கின்றான் நின் மகன். அவனைப் பாருங்கள்!' என்கின்றனர்.

அந்தத் தாயும் பார்க்கிறாள். மகனைக் காணவில்லை அவள். அவனை மூடிக் கிடக்கின்ற அம்புக் கூட்டங் களைத்தான் காணுகின்றாள். அவ்வளவு அம்புகள் தைக்க அவன் வீழ்ந்தான் என்றால், அவனை அழிக்க எத்துணை பகை மறவர் கணை தொடுத்திருப்பார்கள்! அவர்கள் அங்ஙனம் திரண்டு நின்று கொல்லுமாறு, அவன்

எத்துணை அளவிற்கு அவர்கட்கு அழிவினை விளைத் திருப்பான்! செய்யுள் நம்பால் அந்த நினைவுகளையும் நிறைக்கின்றது.

"என் மகன் இவன் என்பதனை, எதனைக் கண்டு யான் அறிவேனோ! எதனைக் கண்டுதான் இவன் என் மகனென்று அறிவேனோ? இவன் என் மகன் ஆதலைத் தான் யான் எதனைக் கண்டு அறிவேனோ?

"கண்கள் கணைக் கூட்டத்தே மூழ்கிக் கிடக்கின்றன. தலையோ, அழகிய மாலை விளங்கும் கழுத்திடத்தே வாளால் வெட்டப்பட்டுச் சிதைந்து போய்க் கிடக் கின்றது.

"வாயோ, பொருதும் முனையையுடைய அம்புகள் மூழ்கிக் கிடத்தலினால், புலால் வழிந்ததாகி, அம்புக் கூட்டைப் போன்று, ஒரு நாழிகை நேரம் வந்து தைத்த அப்புகளின் செறிவோடு விளங்குகின்றது.

"நெஞ்சமோ கொடிய கணைகள் பாய்ந்து துளை பட்டுத் தோன்றுகிறது. துடைகளோ தம்முடைய நிறத் தையும் மறைத்துக்கிடக்கும் பலவான கணைகளால் நிறைந்தனவாகி விளங்குகின்றன.

"அதனால், கட்டவிழ்ந்த பூவினைப் போன்று அம்பு கள் செறிந்த பஞ்சணையிடத்தே கிடந்த இந்தக் காளையைக்கண்டு, இவன் என் மகனென எங்ஙனம் யான் அறிவேனோ?

"அழகுடன் கவிழ்ந்து விளங்கும் கழற்சியின் திண்ணிய காயைப் போன்று இவன் உடல் தோன்று கின்றதே!"

எற்கண் டறிகோ எற்கண் டறிகோ
என்மகன் ஆதல் எற்கண் டறிகோ
கண்ணே கணைமூழ் கினவே தலையே
வண்ண மாலை வாள்விடக் குறைந்தன
வாயே,

பொருநுனைப் பகழி மூழ்கலிற் புலால் வழிந்து
ஆவ நாழிகை யம்புசெறித் தற்றே
நெஞ்சே வெஞ்சரங் கடந்தன குறங்கே
நிறங்கரந்து பல்சர நிறைந்தன வதனால்
அவிழ்பூ வம்பணைக் கிடந்த காளை
கவிழ்பூங் கழற்றின் காய்போன் றனனே!

(புறத்: 1405)

இங்ஙனம் கதறிய தாய், தன் மகனைக் கண்ட அந்தக் காட்சியினாலே தன் உள்ளம் வெதும்ப, அந்நிலையே வீழ்ந்து உயிர் நீத்தனள். இதனை, 'இத் தகடூர் யாத்திரைச் செய்யுளைத் துறக்கத்துப் பெயர்ந்த நெடுங் கோளாதன் தாய் இறந்துபட்ட தலைப் பெயனிலை' என்று குறித்துப் போற்றுவர் நச்சினார்க்கினியர்.

## 42. கல்லாக் காளை!

ஒரு வீரன் போர்க்களத்திலிருந்து, போரின் இடையிலே வீட்டிற்குத் திரும்பி வத்துவிட்டான் என்றால், அவன் அப்படித் திரும்பி வந்ததை நினைந்து, அவனைப் பெற்றவள் எப்படி வேதனைப்படுவாள் என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது, இந்தச் செய்யுள் ஆகும்.

தன் மகன் களத்திலிருந்து திரும்பி உயிருடன் வந்திருக்கின்றான்; களத்திற் போரோ மிகவும் கடுமையாக இருக்கின்றது; தன் கைவேலைக் களிற்றின்மீது எறிந்து அதனைக் கொன்றுவிட்டுத், தன் கையில் வேறு ஆயுதம் இல்லாததால்தான் அவன் திரும்பியிருக்கின்றான்; இந்த நினைவெல்லாம் அந்தத் தாயின் உள்ளத்தில் அப்போது எழவே இல்லை.

அவள் உள்ளம் பெரிதும் வேதனைப்படுகின்றது; தன் குடிக்கு என்றுமில்லாதபடி பழியைக் கொண்டுவந்து விட்டானே தன் மகனென்று அவள் துடிக்கிறாள்;

அவனைப் பெற்ற வயிற்றிலே அடித்துக்கொண்டு, தன் தீவினைக்கு நொந்தும் கொள்ளுகின்றாள்.

அவளுடைய குமுறலைப் பார்த்தால், அப்படிப்பட்ட பழிச்செயலைச் செய்த மகனை ஏன் பெற்றோமென்று அவள் அடைந்த துடிதுடிப்பும் மனக்கொதிப்பும் நமக்கு நன்கு புலனாகும்.

''வாதனைப் படுவதிலே வல்லமையுடைய வயிறே! வாது விளைத்தலில் வல்லமைகொண்ட வயிறே! நீ நோன்பு செய்யாது போயினைபோலும்! அதன் காரண மாகத்தான் நின்னிடத்திலிருந்து அவன் வந்து உலகிடத்தே தோன்றினான் போலும்!

''தம்முள் மனம்பொருந்தாது போயினர் சேரமானும் தகடூர் அதிகமானும். அதன் காரணமாகக் கொடிய போரினும் அவர்கள் ஈடுபட்டனர். அதன்கண், அரிதான போர்த் தொழிலைச் செய்து, அந்தக் களத்திலே, மகனே! நீ செத்தொழிலைச் செய்யாது போயினையே!

''மிகுதியான புள்ளிகளையுடைய முகத்தைக்கொண்ட களிற்றினை, வேலினால் எறிந்து கொன்றனை என்பார் கள். ஆனால், நின் கை வேல் அந்த யானையினது முகத் திடத்திலே ஒழிந்துபோக, நீயும் அந்தக் களத்தினின்றும் வெளிப் போந்தவனாகத் திரும்பி வந்துள்ளனையே!

''தமிழ்ப் பண்பினைக் கல்லாத நின்னைப் பெற்றது இந்த வயிறு! எம் இல்லத்து இதுவரை எவரும் செய்யாத பெரும் பழியினைச் செய்துவிட்டதே!

''வருத்தம் அந்தத் தாயின் மானவுணர்வினைப் பெரி தும் புண்படுத்த, அவள் அந்நிலையே உயிரினைவிட்டுச் சிறந்தனள்'' என்றும் நாம் அறிதல் வேண்டும்.

வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோலா வதனகத் துன்னீன் றனனே
பொருந்தா மன்னர் அருஞ்சம முருக்கி
அக்களத் தொழிதல் செல்லாய் மிக்க

புகர்முகக் குஞ்சரம் எறிந்த வெஃகம்
அதன்முகத் தொழிய நீபோந் தனையே
எம்மில் செய்யா அரும்பழி செய்த
கல்லாக் காளைநின் னீன்ற வயிறே!

(புறத்-1406)

'கரியிடை வேலொழியப் போந்தற்குத் தாய் தபவந்த தலைப்பெயல் நிலை' என்று இச் செய்யுளை, 'மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்' என்னும் சூத்திர உரையிற் காட்டிக் கூறுவர், தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர்.

## 43. அழுகையும் துடிமுழக்கும்!

இரவலர்களுக்கு ஒப்பற்ற புரவலனாக இருந்த அதிகமான் இறந்துவிட்டான். தன் நாட்டின் உரிமையினைக் காத்துநின்று களத்திலே வீழ்ந்து விட்டான். சேரன் போரினை வென்றான்; ஆனால் அதிகமானோ மக்களின் உள்ளங்களைத் தன்னுடைய மறைவினாலே வென்று விட்டான். அவனது வெற்றியின் சிறப்பு, அவனைக் கொன்று பெற்ற வெற்றியினால் மகிழ்ச்சி துள்ள வேண்டிய சேரமானின் உள்ளத்திலும், இழப்பின் வருத்தமாகவே கவியத் தொடங்கியது என்பதனால் அளவிறந்த சிறப்பெய்தி நிலை பெறுகின்றது.

அதிகமான் இறந்து விட்டான் அவன் இறப்பினை அறிந்தபோதும் தகடூர் மறவர்களின் உள்ளங்கள் தளர்ந்து போய் விடவில்லை. தம் தலைவனை இழந்ததும் சோர்வுற்றுப் பின்னடைய வேண்டிய படையினர், பகைவரை எதிர்த்துச் சாவைத் தழுவவே ஒருவரின் ஒருவர் முந்துகின்றனர். துடி முழக்கம் களத்திலே ஓய்ந்த பாடில்லை.

தகடூர் மறவரின் இந்தச் செயலை நோக்கும் சான்றோரின் உள்ளம் வேதனையாலும் வியப்பினாலும் ஒரு

சேர வெதும்புகின்றது. 'இரவலரே வருக வருக' என இசைத்துக் கொண்டிருந்த துடியின் ஒலியை அதிகனின் தகடூர்க் கோட்டையிடத்தே கேட்டவர்கள் அவர்கள். அந்த ஒலியே மறுபடியும் கேட்கின்றது. ஆனால், அது இரவலரை வருகவென அழைக்கும் ஒலியாக இல்லை. தகடூர்க் கோமான் அதிகன், புரவலனாக விளங்கிய இரவலர் புகலிடம், களத்திலே மாய்ந்து விட்டான்; அவன் பெற்ற வீர சுவர்க்கத்தைப் போற்றுமாறு முழங்குகின்றது துடிப்பறை.

அவன் அரண்மனையிடத்தே பெண்கள் அழுது புலம்புகின்றனர். வேல்போன்ற கண்ணினரான அவர்களுடைய கொடிய பூசலின் ஒலியோ மிகவும் கடுமையாக எழுகின்றது. அந்த ஒலியைக் கேட்டுப் புலவரின் உள்ளமும், அதிகனின் பிரிவை நினைந்து புலம்புதலைத் தொடங்குகின்றது.

அப்போதும் துடிப்பறை ஒலிக்கிறது!

அது எஞ்சியவர் செய்யும் போர்ப்பறை ஒலி!

புலவர் வருந்துகின்றார். புரவலன் மாய்ந்த போதும் இந்தப் போர்த்துடி முழங்கவேண்டுமா? வேற்கண்கள் அழுது புலம்புகின்றன! அதனைக் கேட்டும் பொங்கும் இத்துடி என்றால், அது, அதன் தோற்கண்ணாகிய தன்மையாற் போலும்!' என இரங்குகின்றார்.

**இரவலர் வம்மின் எனவிசைத்த லின்றிப்**
**புரவலன் மாய்ந்துழியும் பொங்கும்—உரையமுங்க**
**வேற்கண் ணியரழுத வெம்பூசல் கேட்டடங்கா**
**தோற்கண்ண போலுந் துடி.**

(புறத்: 1437)

இச் செய்யுளை நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் மேற்கோள் காட்டுவர்.

## 44. அணியில் புகழ்!

தகடூர்ப் போரிலே அதிகமான் வீழ்ந்த செய்தி தமிழகமெங்கணும் விரைவிலே பரவியது. சேரமானை வெற்றிக்காகப் பாராட்டுவோரினுங் காட்டிலும், தகடூர் அதிகமானின் வீழ்ச்சிக்கு வருந்துவோரே அதிகமாயினர். அப்படி வருந்துகின்ற ஒருவரின் கூற்று இது.

''இழும் என முழங்குகின்ற வெற்றி முரசத்துடனே கூடிவந்த பகைவர்களின் படைமறவர்கள் முற்றுகையிடத் தன் பழைமையான ஊராகிய தகடூர் என்னும் சிறையிடத்தே இத்துணைநாள் அடைபட்டுக் கிடந்தான் அதிகமான்.

'அதனை ஊடறுத்து வெளிவந்து, களத்திலே பகை வரது குருதியாற் சிவந்த வேலினை ஏந்தியவனாக, அவன் ஆற்றிய போராண்மை வீர விளக்கமாகி நிலை பெற்றது! அங்கே, அவனும் இறுதியிற் களத்திலே பட்டனன்.

''எவ்விடத்தே அவன் வீழ்ந்து பட்டனன்?

''அவன் மிகவும் பெரிய தலைமையாளன்!

''அவன் பட்டது தகடூர்க் களத்தில்! ஆனால், அவன் புகழோ பெரும்புகழ்! அது இவ்விடத்தும் நின்று நிலவுகிறதே! அது அவனின் வீழ்ச்சியைக் குறிக்கிற அழகற்ற புகழ்தான்! என்றாலும், அது களத்தில் வீழ்ந்த பெரும் புகழ்! அதனை யாமும் போற்றுவோம்!

**இழுமென முழங்கும் முரசமொடு குழுமிய**
**ஒன்னார் மள்ளர்த் தந்த முன்னூர்ச்**
**சிறையில் விலங்கிச் செவ்வேல் ஏந்தி**
**யாண்டுபட் டனனே நெடுந்தகை**
**ஈண்டுநின் றம்ம வணியில்பெரும் புகழே!**

(புறத்:1453)

என்றோ எங்கோ அதிகமான் இறந்தான்! அவன் புகழ் அவனுடன் இறக்கவில்லை! அது இங்கும், தமிழகம் எங்கும் நிலவுகிறது! அழியாத பெரும் புகழ் பெற்று விட்டான் அதிகன்! தோல்வியிலும் அவன் கண்டது வெற்றியே! வீழ்ச்சியிலும் அவன் பெற்றது உயர்ச்சியே!!

## 45. தாயின் கனவு!

அதிகமான் தன்னுடைய கோட்டையைக் காத்த வாறு உள்ளிருந்தபடியே நெடுங்காலம் சேரரது படைகளின் தாக்குதலைச் சமாளித்து விட்டான். என்றாலும் சேரரின் பெரும்படைக்கு முன்னால் அவனது வீழ்ச்சி உறுதியாகிக் கொண்டே வந்தது. அங்ஙனம் அடைத்திருந்து, அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சோழப் படையும் வந்து சேரவில்லை. இறுதியில், மறுநாட் காலை தான் கோட்டையை விட்டு வெளிப்போந்து, போரின்கண் ஈடுபடப் போவதாக அவன் முடிவு செய்துவிட்டான். அவன் தாய்க்கு அன்றிரவு சரியான தூக்கமே இல்லை. தீய கனவுகள் பல அடுத்தடுத்துத் தோன்றின. அவள் கவலையோடும் கண்ணீரோடும் இரவை நீந்திக்கடக்க முயன்று கொண்டிருந்தாள்.

மறுநாள் களத்திலே அதிகமானும் வீழ்ந்து பட்டனன். அவள் தான் கண்ட கனவைச் சொல்லிப் புலம்புகின்றாள். கேட்கும் தமிழ்ச் சான்றோரின் கண்கள் கலங்குகின்றன. அவளுடைய அந்தப் புலம்பலை நினைந்து பாடிக் கசிகின்றார் அவர்.

''கனவு போலவும் இருந்தது; நனவுபோலவும் இருந்தது கண்ட அந்தக் காட்சி.

''யான் நினைத்ததும் அல்லாமல், என் உள்ளத்து உள்ளும் நடுக்கமுறும்படியாக அந்தக் காட்சி தோன்றியது.

"கருநிறக் காக்கையும் வெண்ணிறக் கூகையும், இரு வகையான உயர்திணைகட்கு அடையாளமாக எழு தப்பட்டு உயர்த்த கொடிகளோடும், அச்சந்தரத்தக்க தோற்றம் உடைய உருவைக் கொண்டனவாகப் பலப் பல கூளிக் கண்களும், இரத்தஞ் சிந்தும் தலைகளாகிய உண்கலங்களைச் சுமந்தவைகளாகக் களிப்புடன் ஆடிக் கொண்டிருக்கக் கண்டேன்!

"பறையினைப் போல விளங்கும் விளித்த கண்களை உடையவள்; பிறையினைப் போல விளங்கும் பெரி தான கோரைப் பற்களை உடையவள்; குன்றுகளைப் போலத் தோன்றும் பெருத்த முலைகளை உடையவள்; இடையினையும் மறைத்த பெரிதான வயிற்றைக் கொண்டவள்; இடி முழக்கைப் போன்ற பெரிதான குரலினைப் பெற்றவள்; தடித்த வாயினையுடை யவள்; தசைகள் தொங்குகின்ற முதுகினைக் கொண்டவள்; கடலைப்போல விளங்கும் கருநிற மேனியினள்; காண்பதற்கு இன்னாததும் பிணநாற்றம் உடையதுமான மண்டையோட்டு மாலையினை அணிந்தவள்; வில்லைப் போன்ற புருவத்தாள்; அகன்று உயர்ந்து பரந்த அல்குலை உடையவள்; கார் மேகமும், வெண் மேகமும் காற்றும் போலச் செல்லும் விரைந்த செலவினைக் கொண்டவள்; ஒரு பெண்ணினைக் கண்டேன் (இவள் காளி).

"இவள் தன் தலையை விரித்துக் கொண்டு, அகன்ற தன் கையினைத் தொங்க விட்டவளாகப் போர்க் களத்திலே உலவினள். மறமாண்புகளை அழித்து, தம்முள் மாறுபாடு கொண்டறியாத அறிவினையுடைய சிறந்த தாயாகிய நின் அறிவுக்கு இந்த முறை நான் காட்டுவது இவ்வளவே என்று அறிவிப்பவளைப் போலத், தன் பூவிரலைக் காட்டி அவள் உலா வந்தனள். புழுதி

எழும்படியாகத் தன் கைகளால் நிலத்தே அறைந்து ஆர்ப்பரிக்கின்றனள். தகடூராகிய இந்தவூரையே தான் இடம் வலமாக அப்படிச் சுற்றி வந்தனள். பின்னர் தன் வாழிடமாகிய காட்டினைச் சென்றும் சேர்ந்தனள்.

இத்தகைய ஒரு காட்சியை யான் கண்டேன் என்று சொல்லும் கவலையினாலே மேற்பட்ட நெஞ்சத்துடனே, துயரக் கடலிடையே நீந்தியிருந்தனள் அதிகமானின் தாய்! அன்றிரவு அவளது நிலைமை அங்ஙனந்தான் இருந்தது.''

கனவே போலவும் நனவே போலவும்
முன்னிய தன்றியென் னுள்ளகம் நடுக்குறக்
கருநிறக் காக்கையும் வெண்ணிறக் கூகையும்
இருவகை உயர்திணைக் கேந்திய கொடியொடும்
வெருவந்த தோற்றத்தால் உருவின பலகூளிக்
கணங்கள் குருதி மண்டைசுமந் தாடவும்
பறையன்ன விழித்த கண்ணாள்
பிறையன்ன பேரெயிற்றாள்
குடவன்ன பெருமுலையாள்
இடைகரந்த பெருமோட்டாள்
இடியன்ன பெருங்குரலாள்
தடிவாயாள் தசைப்புறத்தாள்
கடலன்ன பெருமேனியாள்
காண்பின்னாக் கமழ் கோதையாள்
சிலையன்ன புருவத்தாள்
சென்றேந்திய வகலல்குலாள்
மழையும் மஞ்சும் வளியும் போலுஞ்
செலவினா ளொருபெண் டாட்டி
தலைவிரித்துத் தடக்கை நாற்றி
மறனெறிந்து மாறு கொண்டறியா
அறிவுக்கிம் முறைநா ளிவ்வள வன்றே
பூவிரல் காட்டி நீறுபொங் கத்தன்
கைகளால் நிலனடித் தூரை யிடஞ்செய்து

**காடு புகுதல் கண்டேன் என்னுங்**
**கவலை நெஞ்சமோ டவலம் நீந்தினாள்**
**அன்றது மன்றவ் வதிகமான் றாய்க்கு.**

**(தக்கயாகப் பரணி உரையில் உரையாசிரியர் காட்டும் தகடூர் யாத்திரைச் செய்யுள் இது)**

இந்தச் செய்யுள், அதிகமானின் தாய் தன் மகனின் அழிவுக்கு முன்னால் இப்படி முன்னதாகவே அவனழிவைக் குறித்த ஒரு தீய கனவைக் கண்டனள் என்கின்றது. இதனால், அதிகமானின் தாயும் அந்தப் போர்க்காலத்தே உயிரோடிருந்தவள் என்று நாம் அறிகின்றோம். 'கவலை நெஞ்சமோடு அவலம் நீந்தினாள்' என்ற சொற்கள்தாம் எத்துணை உருக்கமாக அந்த அம்மையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன!

## 46. நகுதலும் நகுமே!

அதிகமானுடைய தகடூர்க் கோட்டைப் படைத் தளபதிகளுள் ஒருவன் **பெரும்பாக்கன்** என்னும் பெயரினன்.

இவன் அதிகமானால் சிறப்பிக்கப் பெற்ற போர் மறவனும் ஆவான். இவனுடைய போராற்றலை மதியாது, சேரமான் தன்னுடைய முனைப்படையிலே வந்து நின்று போரிட முயல்கின்றான். அப்பொழுது அரிசில்கிழார், அவனை விலக்குவாராகக் கூறுகின்றார்.

"சேரமானே! மெய்யான ஆற்றல் நிறைந்த மனத்தின னாக, நம்முடைய எதிரே தகடூர்ப் படையினை நடத்தி நிற்பவன் பெரும்பாக்கன் என்பவன்! அவனை நீ அறிய மாட்டாய்.

"தகட்டால் பொதியப்பெற்ற செய்வினைத் திறனால் அழகுற்றுத் தோன்றிச் சுடர்விட்டுக் கொண் டிருக்கும் தேராகிய வண்டியினின்றும், கைகடந்து சீறி வரும். தைத்த தலையாட்டத்தையுடைய குதிரையின்

மேலாகத், தளையவிழ்ந்த கண்ணியினைச் சூடியவனாக வருகின்ற இளையோனாகிய, இந்தப் பெரும்பாக்கனை எளிதாக நினைத்தல் வேண்டாம்!

"இவன் சீறினால், வானளவு உயர்ந்த நெடிய மலையிடத்தே வந்து படியும் கார்மேகத்தைப் போலத் தோன்றுவதும், குளிர்ந்த நறுநாற்றத்தைக் கொண்ட மதநீரினை ஒழுக்கிக் கொண்டிருப்பதும், வெண்மையான கொம்புகளை உடையதும், தலைமையுடையதுமான, நம் போர்க் களிற்றை வெட்டிக் கொல்லுதலையும் செய்யக் கூடியவன்.

"இவன் தன் வீரத்தால் உடலெல்லாம் பூரிக்கும் உள்ளக் களிப்புடன் திகழ்பவன். அப்பக்கமாக அவன் வருகிறான். கடிப்பினையுடைய கள்ளினை உண்ணும் செய்வினையில் வல்ல தோற்றத்தையுடைய துடியனே! நீ எறிகின்ற நுண்ணிய துடியின் கண்ணினை நோக்கிச் சிறிய கொலை மொழியினை. மின்னல் சிதறுவதுபோலக் கூறியவனாகச் சொல்லிவந்து, தன் வேலினைச் சுழற்றியிட்டு, நின்னைக்கொன்று, அந்த் வெற்றியால் நகைத்துத் திரிகின்ற தன்மையினையும் உடையவன் அவன்!"

அரிசில்கிழார் சேரமானுக்கு இப்படிச் சொல்ல, அவனும் தன் துடியனுடன், முன்னைப் படையினின்றும் அகன்று, காவலான பின்னணிப் படையுள் செல்கின்றனன்.

**மெய்ம்மலி மனத்தில் நம்மெதிர் நின்றோன்**
**அடர்வினைப் பொலிந்த சுடர்விடு பாண்டில்**
**கையிகந் தமருந் தையணற் புரவித்**
**தளையவிழ் கண்ணி யிளையோன் சீறின்**
**விண்ணுயர் நெடுவரை வீழ்புயல் கடுப்பத்**
**தண்ணறும் கடாஅம் உமிழ்ந்த வெண்கோடு**
**அண்ணல் யானை யெறித லொன்றோ**
**மெய்ம்மலி யுவகையன் அம்மருங்கு வருதல்**
**கடியமை கள்ளுண் கைவல் காட்சித்**
**துடிய நுண்கண் நோக்கிச் சிதறிய**

கொலைமொழி மின்னுச்சிதர்ந் தனையதன்
வேல்திரித் திட்டு நகுதலும் நகுமே!

(தொல்காப்பியப் புறத்திணை இயலின்கண்
நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள்)

## 47. நொந்து கை விதிர்க்கும்!

தகடூர்க் கோட்டை எவ்வளவு பாதுகாவலை உடையதாயினும் அது முடிவில் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறைக்கு வீழ்ந்துவிடக்கூடியதே என்பதனை நயமாக உரைக்கின்றனர் பொன்முடியார். அத்துடன், அந்தக் கோட்டையின் சிறந்த காவல் ஏற்பாடுகளையும் குறிப்பிடுகின்றனர்.

"மறமாண்புடையர் சேரப் படைமறவர் எனினும், அவர் ஏறிக் கடத்தலுக்கு இடமின்றி, எப்புறமும் நெய்யோடு வெண்சிறுகடுகை அறைத்து அப்பிவைத்து வழுக்கும்படியாகப் பேணப்பட்டிருப்பது, தகடூர்க் கோட்டையின் மதிலாகும்.

"எந்திரப் பறவைகளைப் பலவாகச் செய்து அங்கங்கே நிறுத்திவைத்துள்ளனர். அவை தம்மை நெருங்கி வருபவரை வதைத்துக் கொல்லக் கூடியன.

'கல்லெறியும் கவண்களும், கடுவேகத்துடன் மோதும் பொறிகளும், தாமே எறியும் வில்லும் அவற்றுக்கு ஏராளமான கணைகளும், மதிற்புறம் எங்கணும் பரப்பியிருக்கின்றனர். இவற்றால் விளையும் கேடுகளும் மிகுதியாக இருக்கும்.

"பந்தும் பாவையும் பசிய வரிகளையுடைய கம்புப் புட்டிலும் எனப்பட்ட பலவும் சென்றுசென்று எறிந்து கொண்டிருக்கும், முதிய மகளிரைப்போல விளங்கும் பொறிகள் பலவற்றையும் அமைத்துள்ளனர்.

‘‘இவற்றின் பின்னர்த், தாமே எய்யப் பெற்று வந்து தாக்கும் பெரும் பகழிகளையும் வாயிலிடத்தே தூக்கி வைத்துள்ளனர்.

‘‘இவற்றை எல்லாம் கருதல் இல்லாத நிலை இப்போது ஏற்பட்டுவிட்டது. என்றாலும்,

‘‘நாள்தோறும் வந்து வந்து மடிகின்ற வீரரின் மனைவிமார்கள், வட்டத் தீயிடத்தே மூழ்கி உயிர்துறக்கும் போது, அவர்கள்பால் தோன்றும் தெய்வக் கற்பு நலத்தைக் கண்ட சான்றோர். மீண்டும் மீண்டும் அத்தகையவரை நாள்தோறும் கண்டு கண்டு, அவரது அத்தகைய சாவிற்கு நொந்து நொந்து கைவிதிர்க்கும் நிலையும் உளதாகின்றது.

‘‘தாக்கியழித்தற்கரிய படைப் பெருக்கினை உடையவன் பெருஞ்சேரல் இரும்பொறை. அவன் உழிஞைப் பூவினைச் சூடி முற்றுகையிடுவதற்கு அடையாளமான, தண்ணுமையின் முழக்கினை நாள் தோறும் கேட்கும்பொழுதெல்லாம். எம் கண்கள் கலங்கி, அந்த நினைவினையே கொள்ளுகின்றவே!

மறனுடை மறவர்க் கேறவிட னின்றி
நெய்யோ டையவி யப்பி யெவ்வாயும்
எந்திரப் பறவை யியற்றின நிறிஇக்
கல்லும் கவணும் கடுவிசைப் பொறியும்
வில்லும் கணையும் பலபடப் பரப்பிப்
பந்தும் பாவையும் பசிவரிப் புட்டிலும்
என்றிவை பலவுஞ் சென்றுசென் றெறியு
முந்தை மகளிரை யியற்றிப் பின்றை
எய்பெரும் பகழி வாயிற் றூக்கிச்
சுட்டல் போயின் றாயினும் வட்டத்
தீப்பாய் மகளிர் திகழ்நலம் பேர
நோக்குநர் நோக்குநர் நொந்துகை விதிர்க்குந்
தாக்கருந் தானை யிரும்பொறை
பூக்கோள் தண்ணுமை கேட்டொறும் கலுழ்ந்தே!

'தாக்கருந்தானை யிரும்பொறை பூக்கோள் தண்ணுமை கேட்டொறும் கலுழ்ந்தே, வட்டத் தீப்பாய் மகளிர், திகழ் நலம் பேர நோக்குநர் நோக்குநர் நொந்துகை விதிர்க்கும்' எனக் கூட்டியும் பொருள் கொள்ளலாம்.

## 48. நாளை ஊர் கொள்வோம்

காவற்காட்டைப் பிடிக்குமுன் சேரப்படை தகடூர் மறவர்களின் கடுமையான தாக்குதலாலும், தகடூர் படைத் தலைவர்களின் போர் நுட்பத் திறனாலும், பெரிதான அழிபாட்டிற்கு உட்பட நேர்ந்துவிட்டது. தனது படையின் பேரழிவைக் கண்டதும் சேரமான் தன் அருகே இருந்த அரிசில்கிழாரையும் பொன்முடியாரையும் நோக்கு கின்றான். படை பட்ட தன்மையினைக் கூறுமாறு, கவலையுடன் விசாரிக்கின்றான். அப்போது அவர்கள் கூறுவதாக விளங்கும் செய்யுள் இது

''கலைமானைப் போன்று பாய்ந்து வந்தன குதிரை கள். மலைகளைப் போன்று ஒன்றுடன் ஒன்று மோதிப் போரிட்டன யானைகள். இன்னொலி எழ, வில்லினை நாணொலி எழுப்பியபடி வில்வீரர்கள் திகழ்ந்தனர்.

''இப்படிப்பட்ட இவைகளை எல்லாம் பலவாகப் புறமிடுமாறு வெற்றிகண்டவர்கள், முன்னாளிலே நம் படை மறவர்கள்.

'இனி, இவர்களுடன் வந்து, இந்தப் போரிலே, இன்று பகைவரைப் புறங்கண்டு, களத்திடத்தே பசும்புண் பெற்றும் விளங்குகின்ற வேந்தனாகிய சேரமானே!

'பெரிய களிற்றினைத் தாக்கிய கணை தைத்து விளங்கிய பகைவர் பசுந்தலைகள், மூக்கிடத்திருந்து வழியும் சளியைப்போல ஊற்றெடுத்தபடி நசுங்கி அயலிடத்தே கிடப்பக், கால்களிற் களையாத கழலினை

உடையவரான கரிய கண்ணினையுடைய நம் ஆடவர்கள், உருத்தெழுந்து மிகுந்த சினத்தையுடையவராகச் செறுத்தனராகக், களத்திலே நாளை வெற்றிகண்டு ஆரவாரிப்பார்கள்.

''இந்நிலையிலே, இந்நாள் காவற்காடு தகடூரோரிடமிருந்து போய்விட்டது. நாளை, நாம் இடிபோல முழங்குவதான மயிர்க்கண் முரசம் முழங்குமாறு சென்று தகடூரையும் கைப்பற்றிக் கொள்வோம்.

''அதனிடத்து ஐயுறல் வேண்டா. கவலையை விட்டு அமைதியடைக'' என்று தெரிவிக்கின்றனர்.

கலையெனப் பாய்ந்த மாவும் மலையென
மயங்கமர் உழந்த யானையும் இயம்படச்
சிலையலைத்து உய்த்த வயவரும் என்றிவை
பலபுறங் கண்டோர் முன்னாள்; இனியே
அமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே!
மாக்களி நுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றூற்றயற் கிடப்பக்
களையாக் கழற்காற் கருங்கண் ஆடவர்
உருகெழு வெகுளியர் செறுத்தனர் ஆர்ப்ப
மிளைபோ யிற்று நாளை நாமே
உருமிசை கொண்ட மயிர்க்கண்
திருமுர சிரங்க ஊர்கொள் குவம்மே!

(தொல்காப்பிய உரையிடத்து, நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டும் செய்யுள் இது.)

தகடூர் யாத்திரைச் செய்யுள்கள் முற்றவும் கிடைக்கவில்லை என்பது உண்மையானாலும், எங்காவது இருந்து புதைபொருள் கிடைத்தாற்போலக் கிடைத்து நமக்கு விருந்தாகும் என்ற நம்பிக்கையுடன், அதன் சில செய்யுட்களை அறிந்து இன்புற்ற அமைதியுடன், நாம் காலத்தின் கருணையை நோக்குவோமாக!

---

# தேன்மழையின்

## 1990-91ம் ஆண்டின் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| செவிசாய்க்க ஒருவன் | — | கு. அழகிரிசாமி |
| புதிய ரோஜா | — | ,, |
| கவியும் காதலும் | — | ,, |
| துறவு | — | ,, |
| தமிழ் தந்த கவியமுதம் | — | ,, |
| தமிழ் தந்த கவியின்பம் | — | ,, |
| தமிழ் தந்த கவிச்செல்வம் | — | ,, |
| வீர அனந்தன் | — | டாக்டர் ஏ. என். பெருமாள் |
| கடற்கரை பரதவர் கலைச் சொல்லகராதி | — | ச. முருகானந்தம் |
| பொழுது புலர்ந்தது | — | ,, |
| அகவெளிப்புதர் | — | ,, |
| ஆராய்ச்சித் தொகுதி | — | ,, |
| சொல்லடி சிவசக்தி | — | ஹம்சா தனகோபால் |
| ஒளியின் நிழலில் | — | ,, |
| புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு | — | மயிலை நாதன் |
| பெரியார் ஒரு நடைச் சித்திரம் | — | ,, |
| மேதைகள் தமாஷ் | — | மயிலை நாதன் |
| பரதவர் வாழ்வியல் | — | த. ஜேம்ஸ்மரிய ஆரோக்கியம் |
| புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் | — | Dr. சுப்பு ரெட்டியார் |
| கவிஞன் உள்ளம் | — | ,, |
| பாவேந்தர் பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம் | — | ,, |
| நவபாரத நாயகன் | — | கவிஞர் முத்துமணி |
| சந்தோசப் பாட்டு | — | கவிஞர் சுப்பு ஆறுமுகம் |
| ஐந்திணை வளம் | — | புலியூர் கேசிகன் |
| திக்குவாய் போக்கும் வழிகள் | — | அ. மைக்கேல் ராசு |
| தமிழில் பயண இலக்கியம் | — | டாக்டர் இரா. ஞானபுஷ்பம் |
| பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை | — | அரங்க இராமலிங்கம் |